9

AUGUST, 1934 [No. 2

கலைமகள்

மாதப்பத்திரிகை

பவ ௵

ஆவணி மீ

ந௨

OFFICE OF THE RE...
1-NOV 1934
MADRAS

SL
M211,N34K4
N34.9.32
198911

கலைமகள்

உயரிய கலிகோ பயிண்ட் செய்த அழகிய தொகுதிகள்

அரிய விஷயங்கள் பல கொண்டவை

அழகிய சித்திரப் படங்கள் நிறைந்தவை

1-ம்	தொகுதி	**712**	பக்கங்கள்
2-ம்	தொகுதி	**704**	பக்கங்கள்
3-ம்	தொகுதி	**664**	பக்கங்கள்
4-ம்	தொகுதி	**680**	பக்கங்கள்
5-ம்	தொகுதி	**690**	பக்கங்கள்

ஒவ்வொரு தொகுதியின் விலை ரூ. 2-6-0

"கலைமகள்" 6-ம் தொகுதி

ஆரம்பம் ஆடிமீ (July, 1934)

வருட சந்தா (தபால் செலவுடன்)

இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 4-0-0

பினாங், சிங்கப்பூர், நேடால் ரூ. 6-0-0

தனி சஞ்சிகை அணா 6 — 35 சதம்

விளம்பர விகிதம்

முழுப்பக்கத்திற்கு ஒரு தடவைக்கு ரூ. 15-0-0

அரைப்பக்கத்திற்கு ஒரு தடவைக்கு ரூ. 9-0-0

அட்டைப் பக்கங்களுக்குத் தனி விகிதம்.

"கலைமகள்" பத்திரிகைக்குச் சந்தாதார்கள் சேர்க்கவும்,
"கலைமகள்" பிரசுரங்கள் விற்பனை செய்யவும்
ஏஜண்கேள் தேவை.

"கலைமகள்" சந்தாதார்க்கு மாத்திரம் அநேகம் அரிய தமிழ் நூல்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கும்.

:: கலைமகள் ஆபீஸ், மயிலாப்பூர், சென்னை ::

கலைமகள்

தொகுதி ரு] பவ ஹூ ஆவணிமீ [பகுதி ௩௨

ஆகஸ்டு, 1934

கௌரவப் பத்திரிகாசிரியர்கள்

பி. என். அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்.
எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை, எம்.ஏ.,எல்.டி.
மு. இராகவையங்கார், தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைத் தமிழ்ப் பண்டிதர்.
கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்.
டி. கே. சிதம்பரநாத முதலியார், பி.ஏ., பி.எல்.
தி. சிவராமசேதுப் பிள்ளை, எம்.ஏ., பி.எல்.
க. அ. நீலகண்ட சாஸ்திரி, எம்.ஏ.
எம். லக்ஷ்மி அம்மாள், எம்.ஏ., எல்.டி.
எஸ். வையாபுரிப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.
ரா. நாராயணஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்.
(நிர்வாகப் பத்திரிகாசிரியர்).

OFFICE OF THE
1-NOV
MADRAS

முக்கிய அறிவிப்பு

"கலைமகள்" சந்தாதார்க்கு, சில அரிய தமிழ் நூல்கள் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படுகின்றன. விளம்பரப் பக்கங்களில் விவரம் காண்க.

இலங்கைத் தீவிலும், மற்றும் முக்கியமான இடங்களிலும், "கலைமகள்" பத்திரிகையையும், கலைமகள் பிரசுரங்களையும் விற்பனை செய்ய, சுறுசுறுப்புள்ள ஏஜண்டுகள் தேவை. ரொக்க ஜாமீன் அவசியம். தாராளமான கமிஷன் தரப்படும்.

மானேஜர்.

பொருளடக்கம்

—:o:—

1. அவன் போய்விட்டான்—மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் .. 97
2. பந்து ஆடுதல்—வித்துவான் ச. தண்டபாணி தேசிகர் 102
3. அக்கினி தேவர்—சக்கரவர்த்தி ஸ்ரீநிவாஸன் .. 108
4. உணவு நஞ்சாவது ஏன்?—பி. என். அப்புஸ்வாமி, பி.ஏ., பி.எல். .. 112
5. விரைந்து செல்லும் பொருள்கள்—அ. ஸ்ரீனிவாஸாசாரியார், பி.ஏ., எல்.டி. .. 120
6. தாமஸ் எடிசன்—முத்து, பி.ஏ. (ஆனர்ஸ்) .. 126
7. ஹெட்டி க்ரீன்—சி. வி. சுப்பிரமணியன், பி.ஏ. (ஆனர்ஸ்) .. 131
8. சிவாஜியின் குரு—டி. இராஜகோபாலன், பி.ஏ. .. 136
9. கல்யாணி—(நாடகம்) ஜம்பு ராமஸ்வாமி ஐயர் .. 141
10. கௌரவ நாசம்—பெ. கோ. சுந்தரராஜன், பி.ஏ. .. 149
11. வைகுண்ட பஸ் சர்விஸ்—ஜனரத்னம் .. 157
12. செல்லாக் காசு—(உண்மைக் கதை) வி. அனந்தகிருஷ்ணன், பி. ஏ. .. 163
13. குழந்தைகளின் கல்வி—பி. எஸ். நாராயணசாமி .. 166
14. மாதர் பகுதி—சில பலஹாரங்கள்—வி. விசாலாக்ஷி அம்மாள் .. 172
15. பாலர் வகுப்புப் பாஷைப்பாடமும், விளையாட்டுப் பயிற்சிகளும் (படங்களுடன்)—எஸ். ஜகந்நாதன். 176
16. நிலாவை அழைத்தல்—சூடாமணி .. 183
17. காலஞ்சென்ற ஸ்ரீமான் டி. எஸ். இராமச்சந்திர ஐயரவர்கள், .. 184
18. யார்தான் அறியக்கூடும்?—வித்துவான் கி. வா. ஜகந்நாதன் .. 185

198911

19. இரங்கற் செய்திகள் .. 189
20. குறிப்பும் திரட்டும் .. 190
21. மதிப்புரை .. 192
22. அனுபந்தம்—திரு இலஞ்சி முருகன் உலா—டாக்டர் உ. வே. சாமிநாதையர், குறிப்புரையுடன் .. 9-16

முகப்புப்படம்:
காலஞ்சென்ற ஸ்ரீமான் டி. எஸ். இராமச்சந்திர ஐயர், பி.ஏ.

குறிப்பும் திரட்டும்

மலிவான மோடார் .. 101
ரேடியம் .. 111
எலுமிச்சம்பழ ரசம் .. 119
மிருகங்களின் பாஷை .. 130
உணவுக்கிடையில் நீர் அருந்தல் .. 135
பழ ரஸம் .. 140
ருஷ்யாவும் புத்தகாலயமும் .. 156
பழைய விடுகதைகள் .. 175

:: இதுகாறும் எவரும் வெளியிடாத அரியநூல் ::

ஸ்ரீமத்

வால்மீகி ராமாயணம்

கண் கவரும் தேவ நாகரி எழுத்துக்களில்

7 காண்டங்களும் ஒரே நூலில் : 3 கலரில் அச்சிட்ட

கண்கவரும் 17 சித்திரப்படங்களுடன்

காகிதம், அச்சு, பைண்டு அனைத்தும் உயர்தரமானவை

பிரபலஸ்தரடங்கிய ஒரு கமிட்டியாரால் நன்கு பரிசோதிக்கப்பட்டு வெளியிடப்பட்ட உயர்தர நூல்

தினசரிப் பாராயணத்துக்கு மிகவும் அவசியமானது.

கனமான காகிதத்தில் அச்சிட்டது ரூ. 4 0 0

பிரத்தியேகமான இலேசான காகிதப்பதிப்புரூ. 5 0 0

தபால் செலவு தனி :: பாக்கிங் சார்ஜ் இனம்.

மதராஸ் லா ஜர்னல் ஆபீஸ், மயிலாப்பூர், சென்னை

ஆரியமத உபாக்யானம்

முதல்பாகம் : 21-ம் பதிப்பு : வெளிவந்துவிட்டது

இனிய எளிய தமிழில், திருநெல்வேலி ரிடையர்ட் வக்கீல் ஏ. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் இயற்றியது. ஸ்ரீமான்கள் எஸ். வையாபுரிப்பிள்ளை, பி. ஏ., பி. எல்., அவர்களாலும் பி. என். அப்பு ஸ்வாமி ஐயர், பி. ஏ., பி. எல்., அவர்களாலும் திருத்தப் பெற்றது. விலையுயர்ந்த கிளேஸ் காகிதத்தில் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டு அழகாய் பைண்ட் செய்யப்பெற்றது. கண்ணைக்கவரும் சித்திரப் படங்களுடன் கூடியது. 1,50,000 பிரதிகளுக்கு அதிகம் செலவாகி யிருப்பதி லிருந்தும், தெலுங்கு, கன்னடம் முதலிய மற்றைய பாஷைகளில் இவை மொழிபெயர்க்கப் பட்டு, பல்லாயிரக் கணக்கான பிரதிகள் செலவாகி யிருப்பதிலிருந்தும் இவைகளின் சிறப்பும் உபயோகமும் நன்கு விளங்கவில்லையா? இச்சிறந்த நூல்கள் ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டியவை.

முதல் பாகம் 0-8-0 : 2-ம் பாகம் 0-10-0

மானேஜர், கலைமகள் ஆபீஸ், மயிலாப்பூர் சென்னை.

19-ஆம் நூற்றுண்டில் தமிழ்க் கவிஞர் திலகமாக விளங்கிய திருவாவடுதுறை யாதீனத்து

மகாவித்துவான் திரிசிரபுரம்

ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களது

ஜீவிய சரித்திரம்

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

எழுதியது.

தமிழ்வசன இலக்கியத்தில் ஒரு சிறந்த நூலாகிய இது தமிழ் நாட்டினர் ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து இன்புறுதற்கு ஏற்றது. 45-வருஷ உழைப்பின் பயன். தமிழில் இத்தகைய ஜீவிய சரித்திரம் இதுகாறும் வெளிவந்ததே இல்லை.

முதற்பாகம் 400 பக்கங்கள் கொண்டது விலை ரூ. 2-0-0
இரண்டாம் பாகம் விலை ரூ. 2-0-0

கிடைக்குமிடம் : தியாகராஜ விலாஸம்,
பிள்ளையார் கோவில் தெரு,
திருவேட்டீசுவரன்பேட்டை, சென்னை.

அம்பலவாணன்

விக்டர் ஹ்யூகோ என்பாரியற்றிய லெஸ் மிஸரபிள்ஸ் என்னும் உயரிய நாவலைத் தழுவி, இனிய தமிழில் பி. எஸ். சுப்பிரமணியம், எம்.ஏ., அவர்களெழுதியது

இந்நூலில் பல அரிய நீதிகள் விளக்கப்படுவதால், ஆண், பெண் யாவரும் வாங்கி வாசித்து மகிழத்தக்கது.

முதல் பாகம் ரூ. 1-8-0 :: 2-ம் பாகம் ரூ. 1-8-0

'கலைமகள்' சந்தாதார்க்கு மாத்திரம் ரூ. 2-8-0

:: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை ::

ஜூபிடர் ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி (லிமிடெட்)

யில் இன்ஷ்யூர் செய்துகொள்ளுங்கள்.
ஆயுள், மோட்டார், நெருப்பு, மோட்டார்-சைக்கிள், கப்பல், பஸ்ஸுகள், டாக்ஸிகள் இந்த இன்ஷ்யூரன்ஸ்களை நடத்துகிறது.

ஸமுத்திரம் ரயில்வே

டிரான்ஸிட் தபால் டிரான்ஸிட்

செலுத்தப்பட்ட மூலதனம்:

ஒன்றரைக் கோடி ரூபாய்.

லோகல் மானேஜர்கள்:

நாராயணதாஸ் கிர்தர்தாஸ், மதராஸ்.

எல்லாவிடங்களிலும் ஏஜெண்டுகள் தேவை.

இந்தியாவினதையே ஆதரியுங்கள்

இண்டஸ்டிரியல் & புருடென்ஷியல்

அஷ்ஷியுரென்ஸ்

கம்பெனியை ஆதரியுங்கள்.

தலைமை ஆபீஸ் — பம்பாய்

முழுமையும் இந்திய மயம்

பொறுப்புத் தொகைகளைத் துரிதத்துடன் பட்டுவாடா செய்வதில் பெயர்பெற்றது.

திறமையான இந்தியர்கள் மானேஜ்மெண்டிற் குட்பட்டது.

நிரந்தர அசக்தம், விஸ்தரிக்கப்பட்ட இன்ஷ்யுரென்ஸ் முதலிய நவீன சௌகர்யங்கள்

லைப் இன்ஷ்யுரென்ஸ் முதல் ரூ. 5 லக்ஷம்

சென்னை இராஜதானி லோகல் மானேஜர்கள்:

சதுர்புஜதாஸ் நாராணதாஸ் கம்பெனி லிமிடெட்,

தபால் பெட்டி 73, மதராஸ்.

ஸ்ரீமத் வால்மீகி இராமாயண வசனம்

பண்டித நடேசசாஸ்திரியாரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது அழகிய எளிய வசன நடையுடையது.

"அழகும், பெருமையும், எளிமையும் ஒருங்கே வாய்ந்த நடைக்கு இவற்றிற்கு நிகரான வேறு புத்தகங்கள் தமிழ்ப்பாஷையில் மிகச்சிலவே யுள்ளன." மிக விலையுயர்ந்த கனமான ஆண்டிக் காகிதத்தில் அச்சிட்டு, நேர்த்தியான காலிகோவில் 6 காண்டங்களும் தனித்தனியாய் அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது. பாலகாண்டம் முதல், யுத்தகாண்ட முடிய 6 காண்டங்களும் (ஒரு செட்டு) விலை ரூபா 15—0—0. சுந்தரகாண்டம் மாத்திரம் தனியே கொடுக்கப்படும். பாராயணத்துக்குச் சிறந்தது. விலை ரூபா 2—4—0.

விகட விநாடிகள்: ஆஸ்யத்துணுக்குகள் படிப்போர் சிரிக்கத்தக்க சிறு சம்பாஷணைகள் பல அடங்கியுள்ளது; விலை அணு 6. இப்புத்தகம் இராமாயணம் 6 காண்டமும் வாங்குவோருக்கு இனாமாகக் கொடுக்கப்படும்.

கே. மஹாதேவன்,

நெ. 128, வேளாளர் தெரு, வேப்பேரி, சென்னை.

கட்டுரை எழுதுபவர்கள் கவனிக்க.

கலைமகளில் வெளியிடுவதற்காக எழுதப்படும் கட்டுரைகள் காகிதத்தின் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதப்படவேண்டும். விஞ்ஞான சாஸ்திர சம்பந்தமான கட்டுரைகளை எழுதும் அன்பர்கள் கூடிய வரையில் சாஸ்திரச் சொற்களை மொழிபெயர்த்தமைக்கும்பொழுது நகவளைவுகளில் அவற்றின் ஆங்கிலப் பெயர்களைக் குறிப்பிடுதல் நலம். வெளியிடப்படாதவற்றைத் திரும்பப்பெற வேண்டியவர்கள் அவற்றிற்குரிய தபால் முத்திரைகளை அனுப்ப வேண்டும்.

ப—ர்.

நற்செய்தி

: ப்ளூ ஜாகர் வைரங்கள் :

உங்கள் பணத்தின் பெருமானத்தையும்
பூரண திருப்தியையும் கொடுப்பதே
எங்கள் நோக்கம்

புருஷோத்தம்தாஸ் ஹரிலால் & ஸன்

சமுத்திர முதலி தெரு, :: :: பி.டி.சென்னை.

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களாலும், பல பிரமுகர்களாலும் தங்கமெடல்களும் நற்சாக்ஷிபத்திரங்களும் பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. ஒரு வருஷப் பலன் மேல் கேள்வி ஒன்றுக்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பண்டித, காழியூர் ம. சீனிவாஸாசாரியார்.
1/34, லஸ் சர்ச்ரோட், மயிலாப்பூர், சென்னை.

விஜய ரக்ஷித கவசம்

இக்கவசம் ஒருமஹானின் மந்திர உபதேசத்தால் தயாரிக்கப்படுகிறது. இதை அணிபவர்கள் துன்பங்கள் நீங்கிப் பலகார்யங்களில் வெற்றி முதலியநற்பலன்களை அடைவார்கள். வெள்ளிக் கவசம் ரூ. 5. தங்கக் கவசம் ரூ. 15.

மற்ற விவரங்களுக் கெழுதவும்.

விலாசம்: பிரபாசர், கே. கோவிந்தாச்சார்,
மெஜிஷியன் & மெஸ்மெரிஸ்ட், லஸ், மயிலாப்பூர், சென்னை.

தமிழில் அரிய நூல்கள்

த்வாதசோபநிஷத்

12—உபநிஷத்துகள்

ஐதரேய உபநிஷத்; (2) தைத்ரீயோபநிஷத்; (3) கடோபநிஷத்; (4) சுவேதாசுவரோபநிஷத்; (5) ஈசோபநிஷத்; (6) பிருஹதாரண்யகோபநிஷத்; (7) கேநோபனிஷத்; (8) சாந்தோக்யோபநிஷத்; (9) நிருஸிம்மதாபநீ உபநிஷத்; (10) ப்ரச்நோபநிஷத்; (11) முண்டகோபநிஷத்; (12) மாண்டூக்யோபநிஷத்.

456—பக்கங்கள் :: உயரிய கலிகோ பயிண்ட் :: ரூ. **3 0 0**

50—அரிய உபந்நியாஸங்கள்

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அருளியவை. 600—பக்கங்கள் கொண்டது, அழகிய கலிகோ பயிண்டு .. ரூ. **1 8 0**

ஷை 2-ம் பாகம், ஸ்ரீ சங்கர விஜயம் .. ரூ. **0 10 0**

ஹேமலதை.—ஓர் இனிய நாவல். இரண்டு சகோதரிகள் இயற்றியது, 343-பக்கங்கள் .. ரூ. **1 4 0**

மற்றும் அநேக அரிய தமிழ் நூல்களும் "கலைமகள்" சந்தாதார்க்கு மாத்திரம் குறைந்த விலைக்குக் கிடைக்கும்.

மானேஜர், கலைமகள் ஆபீஸ், மயிலாப்பூர், சென்னை.



காலஞ்சென்ற

ஸ்ரீமான் டி. எஸ். இராமச்சந்திரையரவர்கள், பி.ஏ.

(1871—1934)

காலஞ்சென்ற ஸ்ரீமான்

டி. எஸ். இராமச்சந்திர ஐயரவர்கள்

கலைமகள் பத்திரிகையின் நிர்வாக ஆசிரியராக இருந்த ஸ்ரீமான் டி. எஸ். இராமச்சந்திர ஐயர் அவர்கள் சென்றமாதத்தில் திடீரென்று காலமானதை நமது நேயர்களுக்கு மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இவர்களையே பெருந் துணையாகக் கொண்டு ஸ்ரீமான் நாராயணஸ்வாமி ஐயரவர்கள் இப்பத்திரிகையைத் தொடங்கினார்கள். இவர்களும் அந்தப் பொறுப்பை உற்சாகமாக மேற்கொண்டு தமது சிறந்த அறிவையும் அரிய அனுபவத்தையும் இதை நடத்துவதில் செவ்வனே உபயோகித்து வந்தார்கள். இவர்களுடைய மேற்பார்வையில் பத்திரிகை மேன்மேலும் அபிவிருத்தியாய்க்கொண்டு வந்தது. இந்நிலையில் இவர்களை இழக்க நேரிட்டது பத்திரிகையின் துரதிர்ஷ்டம் என்றே சொல்லவேண்டும்.

இராமச்சந்திர ஐயரவர்கள் தமிழிலும், வடமொழியிலும், ஆங்கிலத்திலும் திறமை உள்ளவர்கள். 'கலைமகள்' தோன்றுவதற்கு ஐயரவர்களே முக்கியகாரணராக இருந்தார்கள். தமிழ்மொழியின் மேல் இவர்கள்கொண்ட அன்பே இவர்களை இம் முயற்சியில் தூண்டியது. இவர்கள் எளிய வாழ்க்கையையும் உயர்ந்த லக்ஷியங்களையும் அரிய கல்வித் திறமையையும் உடையவர்கள்; அரசியல் விஷயங்களை உருவகித்து மிகவும் அழகாகக் கதைபோல எழுதும் ஆச்சரியமான வன்மை பெரிதும் வாய்ந்தவர்கள். இத்தகைய விசேஷமான திறமை வாய்ந்தவர் ஒருவர் மேலைநாடுகளில் பிறந்திருப்பாரானால் அவர் பத்திரிகை யுலகத்திலே பெரும்பதவியையும் பெயரையும் பெற்றிருப்பாரென்பது திண்ணம்.

இவர்களுடைய மரணம் காரணமாக 29-7-34-ல் கூடிய அனுதாபக் கூட்டத்திலே தலைமைவகித்த மகாமகோபாத்தியாய ஸ்ரீமான் எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களும், 'கலைமகள்' பத்திராதிபர்களின் சார்பாக ஸ்ரீமான் டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களும், தமிழ்ப்பத்திராதிபர்களின் சார்பாக ஸ்ரீமான் ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் இவ்விஷயங்களைப்பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்கள். ஸ்ரீமான் இராமச்சந்திர ஐயரவர்களின் எதிர்பாராத மரணத்தால் நாங்கள் அடைந்துள்ள பெருந்துயரத்தை இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

கலைமகள் பத்திரிகாசிரியர்கள்



'அவன் போய்விட்டான்'

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

வித்துவான்களை ஆதரித்துப் பாதுகாத்துவந்த ஸம்ஸ்தானங்களுள் ஒன்றான தஞ்சாவூர் அடைந்திருந்த புகழ் மிகவும்பெரியதென்று தமிழ் நாட்டிலும் பிறநாட்டிலும் உள்ளவர்கள் அறிவார்கள். போஸல வம்சத்தினராகிய மகாராஷ்டிர மன்னர்கள் அருங்கலை விநோதர்களாக இருந்தார்கள். அவர்களுடைய உதாரகுணமும் கலைவல்லாரை அவர்கள் ஆதரித்துவந்த இயல்பும் வித்துவான்களுடைய கூட்டங்களில் இன்றளவும் வழங்கப்படுகின்றன. பல ஸங்கீத வித்துவான்களின் ஸங்கீதஸாஹித்தியங்களை உலகத்திற்குப் பயன்படும்படி செய்த பெருமையை அந்த ஸம்ஸ்தானம் மிக உடையது. மகாராஷ்டிர மன்னர்களுடைய சபாமண்டபம் எப்பொழுதும் வித்துவான்கள் நிறைந்ததாகவே இருந்தது. தங்கள் தங்கள் திறமையைக்காட்டிப் பெருமையையும் பட்டங்களையும் அடைவதற்கு உரையாணியாக அந்த ஸபை இருந்தது. வித்துவான்கள், அங்கே பாடிப் பரிசுபெற்றசெய்தியைத் தம்முடைய கௌரவத்திற்குச் சிறந்த அறிகுறியாகக் கூறி மற்ற இடங்களிற் சென்று பெருமையை அடைவார்கள்.

அந்த ஸம்ஸ்தானத்தில் மிகச்சிறப்பாக இருந்த அரசர்களுள் சரபோஜி அரசர் ஒருவர். அவருடைய காலத்தே தான் தஞ்சை ஆங்கிலேயர் பால் ஒப்பிக்கப்பட்டது. அவருக்குப் பின்பு அவருடைய புதல்வராகிய சிவாஜி இருந்தார். அவரும் வித்துவான்களை ஆதரித்துவந்தார்; ஸங்கீத ரஸிகராகிய அவருடைய காலத்திற்குப்பின் அவருடைய மருகராகிய ஸகாராம் ஸாஹேப் என்பவர் ஒருவாறு ஆதரித்தனர். பின்பு தஞ்சைஸம்ஸ்தானநிலையே மாறிவிட்டது.

சிவாஜி யரசரால் ஆதரிக்கப் பெற்ற வித்துவான்களில் ஆதி மூர்த்தி ஐயர் என்பவர் ஒருவர். அவர் இளமை தொடங்கியே முறையாக ஸங்கீதம் கற்றுத் தேர்ந்தவர். பச்சைமிரியன் ஆதிப் பையருடைய சிஷ்யராகிய பல்லவி கோபாலையரிடத்தும் கனம் கிருஷ்ணையரிடத்தும் அவருடைய தமையனார்களாகிய சுப்பரா மையர், சுந்தரமையர் என்பவர்களிடத்தும் ஸங்கீதப் பயிற்சி பெற்றவர். தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மூன்றுமொழிக ளிலும் ஆயிரக்கணக்கான கீர்த்தனங்கள் அவருக்குப் பாடம் உண்டு. எவ்வளவு பெரிய வித்துவான்களுடைய சபையிலும் இயற் றியவர்களுடைய அமைப்பு மாறாமல் வர்ணசுத்தமாகவும் இனிமை யாகவும் கீர்த்தனங்களை அவர் பாடுவார். பல்லவி பாடுவதிலும் விரிந்த மனோபாவத்துடன் கற்பனைஸ்வரங்களைப் பாடுவதிலும் வல்லவர். கனம் கிருஷ்ணையருடைய கீர்த்தனங்களை மிக நன்றாகப் பாடுவார். நல்லொழுக்க முடையவர். அடக்கமாக இருப்பார். சிவாஜி மன்னருடைய சபையில் அவர் பிரகாசமுற்று விளங்கினார். மகா வைத்தியநாதையர், பலகாலமாக வழங்காமலிருந்த 72 மேள கர்த்தா ராகமாலிகையை மெட்டு அமைத்துத் தஞ்சை ஸம்ஸ் தானத்திற் பாடும்போது பாடியது பொருத்தமாக உள்ள தென்பதைத் தேர்ந்து கூறுதற்கு அவரே தகுதியானவரென் றெண்ணி அங்ஙனமே நியமிக்கப்பட்டார். என்னுடைய தந்தை யாராகிய வேங்கடஸுப்பையருக்கும் அவருக்கும் இளமை தொடங் கிப் பழக்க முண்டு. கனம் கிருஷ்ணையருடைய கீர்த்தனங்களை அவர் பாடினால் கிருஷ்ணையர் பாடுவதைப்போலவே யிருக்கும் என்று என் தந்தையார் கூறியிருக்கிறார்.

தம்மிடம் காட்டிய அபிமானத்தை யறிந்து சிவாஜி மன்ன ரிடத்தில் ஆதிமூர்த்தி ஐயர் அன்புடையவராகி யிருந்தார். அருமையறியாதவர்களிடத்திற் பழகுவதற்கு அவருடைய மனம் பொருந்தாது. சிவாஜி மன்னர் காலத்திற்குப் பிறகு அவர் தஞ்சா வூரிலேயே தெற்கு வீதியில் வராகப்பையர் சந்தில் மேல்சிறகில் தமக்குரிய வீடு ஒன்றில் வசித்துவந்தார். வேறு பிரபுக்களிடம் சென்று பழகுவதை அவர் விரும்பவில்லை.

* * * *

சற்றேறக்குறைய ஐம்பது வருஷங்களுக்கு முன்பு நான் கும்ப கோணம் காலேஜில் இருந்த காலத்தில் சீவகசிந்தாமணி, பத்துப் பாட்டு முதலிய பழைய நூற்சுவடிகள் தஞ்சை ஸரஸ்வதி மஹாலில் இருக்குமோ என்று தேடியறிய எண்ணினேன். அதற்காக ஒரு முறை தஞ்சைக்குப் புறப்படுகையில் என் தந்தையார்,

ஆதிமூர்த்தி ஐயர் அங்கே இருக்கிறாரென்றும் அவரைப் பார்த்து க்ஷேமத்தை விசாரித்துவிட்டு வரவேண்டுமென்றும் சொல்லி அவர் இருக்கும் இடத்தையும் தெரிவித்தனர். எந்தையார் பலமுறை அவரைப்பற்றிக் கூறியிருத்தலின் அவரைப் பார்க்கவேண்டுமென்னும் ஆவல் இருந்தது.

தஞ்சையில் நான் ஆதிமூர்த்தி ஐயருடைய வீட்டை விசாரித்துத் தேடிப் பிற்பகல் இரண்டு மணிக்குச் சென்றேன். வீட்டு வெளிக்கதவு திறந்திருந்தது. உள்ளேயிருந்து வெளியில் ஒருவரும் வரவில்லை; ஆதலின் விசாரிப்பதற்கு இயலாமல் அங்கே சில நேரம் இருந்தேன். அப்பால் உள்ளே இருந்து ஒரு முதிய பிராமணர் வெளியில் வந்தார். ஆஜாநுபாகுவான அவர் தம் கையில் ஒரு செம்பில் ஜலம் வைத்துக் கொண்டிருந்தார். அவருடைய தலைமயிர் நரைத்திருந்தது. நான்கு மாதங்களாக க்ஷவரம் செய்து கொள்ளவில்லையெனத் தோற்றியது. ஓர் அழுக்கு வஸ்திரத்தைத் தட்டுடையாகக் கட்டிக்கொண்டிருந்தார். அவருடைய தோற்றம் எல்லாவற்றையும் வெறுத்து இருக்கும் துறவியின் தோற்றத்தைப் போல இருந்தது. அவரைக் கண்டவுடன் நான் எழுந்து நின்றேன்; "ஸங்கீதவித்துவான் ஆதிமூர்த்தி ஐயரவர்களைப் பார்ப்பதற்காகவந்தேன். அவர்கள் வீடு இதுதானே?" என்றேன். அவர் ஒருமுறை என்னை விழித்துப் பார்த்தார்; பிறகு, "ஆதி மூர்த்தியா! அவன் இறந்து போய்விட்டானே" என்றார்.

நான் சற்று நிதானித்தேன்; பிறகு, "அவர்கள் இப்போது இருக்கிறதாகக் கேட்டுத்தான் வந்தேன். என்னுடைய தகப்பனாரவர்கள் அவர்களுடைய க்ஷேமலாபத்தை விசாரித்து வரவேண்டுமென்று சொன்னார்கள்" என்றேன்.

அவர்:—நீர் யார்? யாருடைய பிள்ளை?

நான்:—உத்தமதானபுரம் வேங்கடஸுப்பையரவர்கள் பிள்ளை.

அவர்:—ஓ! அப்படியா? வேங்கடஸுப்பையர் ஸௌக்கியமாக இருக்கிறாரா?

நான்:—ஆம், சௌக்கியமாகவே இருக்கிறார்கள்.

அவர்:—நீர் என்ன செய்கிறீர்?

நான்:—கும்பகோணம் காலேஜில் தமிழ்ப்பண்டிதராக இருக்கிறேன்.

அவர்:—என்ன சம்பளம்?

நான்:—ஐம்பது ரூபாய்.

அவர் :—அப்படியா! வேங்கடஸுப்பையர் பாக்யசாலிதான். ஆதிமூர்த்தி போய்விட்டான் என்று நீர் அவரிடம் போய்ச் சொல்லும். சிவாஜிமகாராஜா எப்போது இறந்துபோனாரோ அப்போதே அவனும் இறந்துபோய் விட்டான்.

நான் :—"தாங்கள் பேசுவதைப் பார்க்கையில் தாங்கள் தான்....." என்று கொஞ்சம் இழுத்தேன்.

அவர் :—ஆம் ஐயா! நான் இருப்பதும் இல்லாததும் ஒன்று தானே? இறந்ததற்குச் சமானந்தானே? எப்பொழுது என் வித்தைக்கு வினியோகம் இல்லையோ அப்பொழுது எனக்கு என்ன கௌரவம்? அருமை தெரியாதவர்களுக்கு நடுவில் நடைப்பிண மாக இருப்பதுதானே இப்போது கண்டது? எனக்கு ஸங்கீதம் தெரியுமென்பதை வெளியில் சொல்லவேண்டாம். என்னுடைய ஸங்கீதம் துருப்பிடித்துப் போய்விட்டது. தங்களைத் தாங்களே வித்துவான்களாக மதித்துக்கொண்டு புதுப்போர்வழிகள் கிளம்பி விட்டார்கள். அவரவர்கள் பாடுவதைக் கேட்பதற்கு ஏற்ற பிரபுக்களும் இருக்கிறார்கள். இப்போது எல்லோரும் வித்துவான் கள், எல்லோரும் பிரபுக்கள். இந்தக்காலத்திலே என்னை யாரையா மதிக்கிறார்கள்? நான் ஒருவன் இருக்கிறேனென்று யார் நினைக்கி றார்கள்? யார் இங்கே வருகிறார்கள்? ஏதோ அத்திபூத்தாற்போல நீர் வந்தீர். வேங்கட ஸுப்பையருக்கு மட்டும் பழைய அபிமானம் இருக்கிறதுபோலத் தோற்றுகிறது. அவருக்கு என் அருமை தெரியும்; அவர் அருமை எனக்குத் தெரியும். அவர் இப்போது யாதொரு குறையுமில்லாமல் ஸௌக்கியமாக இருக் கிறாரா?

நான் :—அவர்கள் தங்களை அவசியம் பார்த்து விட்டு வரவேண்டுமென்று சொன்னார்கள். தங்களுக்குக் குமாரர்கள் இருக்கிறார்களா?

அவர் :—ஒருவன் இருக்கிறான்; இப்போது மைசூரில் ஸம்ஸ் தான வித்துவானாக இருக்கிறான். வேங்கட ஸுப்பையரை நான் மிகவும் விசாரித்ததாகச் சொல்லவேண்டும். உமக்கு ஸங்கீதம் தெரியுமா?

நான் :—சில வருஷங்கள் அப்பியாஸம் செய்தேன். தமிழ் கற்றுக் கொண்ட பின்பு அதிகக்கவனம் செலுத்த முடியவில்லை.

அவர் :—அடடா! என்ன காரியம் செய்தீர்? அதை ஏனையா விட்டு விட்டீர்? அப்பியாஸம் பண்ணினால் கனம் கிருஷ்ணையரு டைய கீர்த்தனங்களையெல்லாம் வேங்கடஸுப்பையரிடம் கற்றுக் கொண்டிருக்கலாமே.

நான்:—இப்பொழுதும் சில தெரியும். ஆனாலும் உங்களைப் போன்ற மகாவித்துவான்களுக்குமுன் பாடுவதற்கு எனக்குத் தைரியமில்லை.

இங்ஙனம் சிறிது நேரம் பேசிக்கொண்டேயிருந்துவிட்டுப் பிறகு விடைபெற்றுக் கொண்டு சென்று என் தந்தையாரிடம் நடந்தவற்றைத் தெரிவித்தேன்.

வித்துவான்கள் அருமை தெரிந்து ஆதரிப்பவர்களை மறவாமல் நினைப்பதற்கும் அருமையறியாதவர்கள் நடுவில் இருப்பதை வாழ்வாகக் கருதாமைக்கும் ஆதிமூர்த்தி ஐயருடைய இந்த வரலாறே உதாரணமாகும். அவருக்குச் சிவாஜி மன்னரிடத்தில் இருந்த பேரன்பை நான் நினைந்து நினைந்து உருகினேன். "இனிப் பாடுநருமில்லை பாடுநர்க்கொன் றீகுநருமில்லை" என்று சொன்ன சான்றோர் மன நிலையும்,

"பூமா திருந்தென் புவிமா திருந்தென்ன பூதலத்தில்
நாமா திருந்தென்ன நாமிருந் தென்னநன் னாவலர்க்குக்
கோமா னழகமர் மால்சீதக் காதி கொடைமிகுந்த
சீமா னிறந்திட்ட போதே புலமையும் செத்ததுவே"

என்று கூறிய ஒரு புலவருடைய மனநிலையும் இன்னபடி இருந்திருக்குமென்று ஆதிமூர்த்தி ஐயருடைய நிலையைக் கண்டு ஒருவாறு அறிந்துகொள்ளலாமன்றோ?

மலிவான மோட்டார்

ஜப்பானில் தயாரிக்கப்படும் சிறிய மோட்டார்கள் கூடிய விரைவில் இந்தியாவுக்கு வரக்கூடுமென்றும், இந்த மோட்டார்களை 650 ரூபாய்க்கு வாங்கமுடியுமென்றும் தெரிகிறது. இந்த மோட்டார்களை உற்பத்தி செய்பவர்கள் கல்கத்தாவில் விற்பனைத்தாகர்களை நியமித்துவிட்டார்கள்.

இந்த மோட்டாரின் பெயர் 'டாட்ஸன்' என்பது. இது எழுகுதிரை வேகமுடையது. டோக்கியோ நகரிலுள்ள ஜிதோஷா ஸீஸோ கம்பனியார் இதைச் செய்பவர்கள். இவர்களுக்கு யோக்கஹாமாவிலும், ஒஸாகாவிலும் மோட்டார்த் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இந்த 'டாட்ஸன்' மோட்டாருக்கும் பிரிட்டனில் தயாரிக்கப்படும் 'ஆஸ்டின் ஸெவன்' மோட்டாருக்கும் விசேஷ பேதங்கிடையாது. இவ்விரண்டு மோட்டார்களின் யந்திரங்களும் ஒரே அமைப்பு உடையன. நவீனவசதிகளனைத்தும் இதில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு காலன் 'பெட்ரோலுக்கு' இம்மோட்டார் 45 மைல் தூரம் போகும்.

இலக்கியம்

பந்து ஆடுதல்

வித்துவான் ச. தண்டபாணி தேசிகர்

விளையாட்டு என்பது சிறியோர் பெரியோர் முதலிய யாரையும் மனங்களிக்கச்செய்யும் தொழிலாம். அது செய்பவர்களுடைய சரீரத்திற்கும் மற்ற அந்தஸ்துகளுக்கும் தக்கவாறு வேறுபடும். அவ்விளையாட்டு பேச்சிலும் நிகழ்வதுண்டு. மனத்திற்கு அயர்ச்சியைக் கொடுக்காது கிளர்ச்சியை உண்டுபண்ணும் வேடிக்கைப்பேச்சுக்கள் விளையாட்டுப் பேச்சு எனக் கூறப்பெறுகின்றன. ஒருவிதப் பயனையும் அளிக்காது வீணாகக் கழிந்துபோகின்ற பேச்சுக்களும் அவ்வாறே கூறப்பெறுகின்றன. ஆகவே விளையாட்டு, தொழிலிலேயன்றிப் பேச்சிலும் உண்டு என்பது அறியப்பெறும். இவ்விருவகையான விளையாட்டுக்களில் தேக உழைப்பு மிக்கவன் தேகப்பிரயாசைதரும் விளையாட்டுக்களை மேற்கொள்வானாயின் சரீர அயர்ச்சி அதிகப்படும். அவனுக்குப் பெரும்பாலும் மனக்கிளர்ச்சி உண்டுபண்ணும் விளையாட்டுப் பேச்சுக்கள் அதிகபலனைத் தரக்கூடியவாகலாம். அதுபோல மன உழைப்புடையவனுக்குத் தேக உழைப்புக்குக் காரணமான விளையாட்டுக்கள் பலன்தருவனவாம். அவற்றுள் பந்தாடுதலும், நீர் விளையாட்டும் சிறந்தனவாம். மணற்குவியலில் குச்சிமறைத்தல், கழங்காடுதல், அம்மானை ஆடுதல், காற்றாடிவிடுதல் முதலிய பிற விளையாட்டுக்களும் உள.

பந்தாடுதல் என்ற வழக்கம் ஆண் பெண் என்ற இருபாலாரிடமும் இப்போது பரவியுள்ளது. காற்பந்து, கிரிகெட், ஹாக்கி, டென்னிஸ், பாஸ்கட்பால், வாலிபால் முதலிய பலவகை ஆட்டங்கள் வழங்குகின்றன.

இப்பந்தாட்டம் நமது நாட்டில் பண்டைக்காலத்து எவ்வாறு இருந்தது என்பதை ஆராய்தலே இக்கட்டுரையின் பெருநோக்காம். ஆதலால், பந்து எதனால் செய்யப்பெற்றது, ஆட்டத்தின் பிரிவுகள், பந்தாடுமிடத்தின் அமைதி, இவ்விளையாட்டு யாருக்கு உரியது முதலியவற்றைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

பந்து செய்யும் விதம்

பந்து இக்காலத்திற்போலப் பூநூலாலும் ரப்பர் தோல் முதலியவற்றாலும் செய்யப்பெறவில்லை. நெட்டி, பூளைப்பஞ்சு, பட்டுநூல் இவற்றைக் கெட்டியாக உருட்டி, அதன்மேல் மயில் தோகை மயிர் இவற்றைச்சுற்றி அதன்மேல் நூலையும் கயிற்றை யும் இறுக்கிச் சுற்றி அழகுபெற நன்றாக உருட்டி அதற்கு மேல் பலவர்ணப் பூநூலைக்கொண்டு பாம்புத்தோல் போலவும், மயில் தோகையிலுள்ள கண்கள்போலவும், தையல்வேலை செய்யப் பெற்றிருக்கும். தண்ணீர் நுரைகள்போல மெதுவாகவும், சிறு காற்று அடித்தாலும் தானே எழுந்தாடும்படி இலேசாகவும் இருக் கும். இவ்வாறு பந்துசெய்யும் விதத்தைக் கற்பித்த புலவர்பெரு மகனார் பெருங்கதை செய்த கொங்குவேள் ஆவர். "வரிப்புனை பந்து" என்பதற்கு, 'நூலாலே வரிந்துசுட்டி அழகுசெய்த பந்து' என நச்சினார்க்கினியர் உரை கூறுவதால் நூலால் மட்டும் பந்து செய்தலும் உண்டு என்பது அறியப்பெறும்.

பந்தாடுமிடம்

பந்தாடுமிடங்கள் முத்துக்களை விளிம்பிலே அழுத்தப் பெற்றன, பொன்னாலே பண்ணப்பட்டன, மணி பத்தியிற் குயிற் றப்பட்டன, எனச் சிந்தாமணியாசிரியர் கூறுகின்றார். இதில் வருணனைப் பகுதிகளைத் தள்ளித் தெள்ளி நோக்கும்போது சுற்றி நாற்புறமும் வெண்கோடுகளும் நடுவில் நீலநிறக் கோடு களும் இடப்பெற்றுப் பத்தியாக அமைக்கப் பெற்றிருந்தது என்பது புலனும். இவ்வாறன்றி நிலாமுற்றங்களிலும் பந்தாடுவ துண்டு என்பதைப் பெருங்கதையுணர்த்தும்.

ஆட்ட வகைகள்

பந்தைக் கையால் தொடாமல் காலாலேயே தட்டி ஆடும் ஒரு வகை ஆட்டமும் உண்டு. நற்றிணையில்,

"செல்வத் தந்தை யிடனுடை வரைப்பின்
ஆடுபந்து உருட்டுநள் போல ஓடி
அஞ்சி லோதி இவள்உறும்
பஞ்சி மெல்லடி நடைபயிற் றும்மே"

என்ற பகுதியால் இதனை அறியக்கூடும். ஒரு நாயகன் தன் மனைவி யைப் பாலை நிலத்தின்வழியாக அழைத்துச் செல்கின்றான். அவள் வெயில்வெப்பந் தாங்காமல் ஓட்டமும் நடையுமாகத் தன் தகப்பன் வீட்டில் ஆடும் பந்தை உருட்டுபவள்போல் ஓடினாள்.

இந்த உவமையால் காலாலேயே பந்துருட்டி விளையாடும் வழக்கம் இருந்தது என்பது துணியலாம். சிந்தாமணியில்,

> " வைத்தபந்தெடுத்தலும் மாலைபுட்காத்தலும்
> கைத்தலத்தினெட்டலும் கண்ணி நெற்றிதீட்டலும்
> பத்தியிற் புடைத்தலும் பையரவ்வின் ஆடலும்
> இத்திறத்த பந்தினோடு இன்பம் எல்லையில்லையே "

எனப் பந்தாட்டத்தின் வகைகள் சில கூறப்பெறுகின்றன. மற்றொரு கட்சியார் வைத்த பந்தைக் கையால் தொடாமல் காலாலேயே தட்டி எழுப்புதலும், ஆடிக்கொண்டிருக்கும் போதே சாதுரியமாக மாலையில் மறைத்துக்கொள்ளுதலும், தலையிற் சூடிய மாலையையும் நெற்றியையும் தீண்டுதலும், ஒரு முறைக்கு ஒருமுறை உயர எழும்பும்படி வரிசையாக அடித்து எழுப்புதலும், பாம்பைப் போல வளைந்து நடந்து சென்று ஆடுதலும் எனப் பலதிறப்படும்.

ஒருவரே ஐந்துமுதல் இருபத்தொருபந்துவரை வைத்தாடியதாகத் தெரியவருகிறது. சிந்தாமணியில், விமலையென்ற பெண் ஐந்து பந்துகளை வைத்துக்கொண்டு ஆடினாள் எனக் கூறப்பெறுகின்றது. இதில் கையில் வைத்திருந்த பந்து விழுகின்ற சாதுரியத்தால் தானே மாலையில் மறையுமாறு செய்தலும், மாலை மேலுராயுமாறு மேலே விட்டெறிதலும், பின்பக்கம் விட்டெறிந்து முன்பக்கமாகப் பிடித்தலும் முதலான ஆட்டத்தின் சமத்காரங்களை யறியலாம். இவ்வண்ணம் ஆடும்பொழுதே மாலைசூட்டுதலும், நெற்றியில் குங்குமப் பொட்டு வைத்துக் கொள்ளுதலும், பக்கத்துள்ளாரோடு பேசுதலும் பெருவியப்பைத் தரும் நிகழ்ச்சிகளாம்.

பந்தாட்டத்தில் போட்டியும் நிகழ்ந்ததாக நூல்களில் விளக்கப்பெறுகின்றன. பெருங்கதையின் கதாநாயகனாகிய உதயணனுடைய மனைவிமார்கள் இருவரும் போட்டியிட்டுக்கொண்டு தத்தம் கட்சியிலுள்ள பெண்களைக் கொண்டு பந்தாடச்செய்தனர். அப்பெண்களுள் ராசனை யென்பாள் ஏழு பந்துகளை எடுத்து ஒன்றன்பின் ஒன்றாகக் கையில் தங்காது மேலே போகும்படி விட்டெறிந்தாள். பிறகு கால்மேல் சுழன்று வரும்படியும் முன்னும் பின்னுமாகச் சுற்றி வரும்படியும், மீட்டும் தனித்தனி மேலே செல்லும்படியும் ஆயிரங்கையாடினாள்.

காஞ்சனமாலை யென்பவள் அந்த ஏழு பந்துகளையும் எடுத்துக்கொண்டு ஒருபந்து திரும்பிவரும்போது மற்றொரு பந்தால் அதனை மேலேபோகும்படி அடித்தும் தலைக்குமேல் வந்த பந்தைக் கையை மடக்கிக் குத்தியும் மாலையில் மறையச்செய்தும் கைக்குள்ளாகப் போமாறு செய்தும் ஆயிரத்தைந்நூறு கையாடினாள்.

அயிராபதி என்னுங் கூனி அப்பந்துகளைத் தான் எடுத்து முன்னர் உயரப்போகும்படி விட்டெறிந்து நான்குபக்கமும் சுற்றி வந்தும், போனபந்துகள் மீள்வதற்குள் கைதட்டியும், குதித்தும், உள்ளங்கையில் வைத்த பந்துகள் கீழே விழாதபடி கையைக் கவிழ்த்தும், உள்ளங்கையிலிருந்து புறங்கைக்கும் புறங்கையி லிருந்து உள்ளங்கைக்கும் போகுமாறு பந்துகளை உருட்டியும், தோள்மேற் புரளுமாறு எறிந்தும், கூன்மேற் புரளுமாறு செய்தும், தன்மார்பின் நடுவில் ஒட்டியும், காண்பார்யாவரும் களிக்கும்படி கூந்தலைக் கோதி முடித்தும், நெற்றியில் பொட்டுவைத்துக்கொண் டும், அதற்குள் பந்துவந்துவிடப் புறங்கையால் அடித்தும் இரண் டாயிரங்கை ஆடினாள்.

விசுவலேகை யென்பவள் குள்ளமானவள். ஆதலால் பந்தடிக் குங் கோலையும், பந்துகளையும் வாங்கிக்கொண்டு ஒவ்வொன்றாக மேல் எழுப்பி வானவில்லைப்போலத் தாவித்தாவி அடித்து விரல்களை மடக்கிக் குத்தியும், கையைவிரித்து அடித்தும், பந்து களில் ஒன்றுமாறி ஒன்றை ஒரேவிரலில் நிற்கச்செய்தும், குருவி பல இடங்களுக்கும் பறந்து செல்வதைப்போலப் பந்துகள் பல விடங்களுக்கும் செல்ல ஒன்றும் தவறாதபடி அடித்தும், நீரருவி போல வளைந்து விழும்படி யடித்தும், ஒரு கைப்பந்து மற்றொரு கைக்குப் போகும்படி அடித்துப் பிடித்தும், பாம்போட்டம்போல வளைந்து சென்றடித்தும் இரண்டாயிரத்துஐந்நூறு கையாடினாள்.

ஆரியை என்பவள் பந்தாடும்போதே நடுவிற் கிடைக்கும் சிறு நேரத்திற்குள் கூந்தல் முடித்தும், வளைகளைச் செறித்தும், காலிலணிந்த காப்பு முதலியவற்றைத் திருத்தியும், நாடகப் பெண்களைப்போல உலாவியும் ஆடினாள். பறவையைப்போல ஓரிடத்தும் நில்லாமல் ஆபரணங்களும் ஆடையும் குலைய நிற்கி றாளா? அல்லது பறக்கிறாளா? என்று பார்ப்பவர் ஐயுறும்படி மூவாயிரங் கையாடினாள்.

கடைசியாகக் கோசலதேசத்து அரசன் மகளாகிய மானனீகை என்பவள் இருபத்தொருபந்தை எடுத்துக்கொண்டு, மற்றவர் களைப்போல் ஓடியாடித் திரியாமல் மெதுவாக, நாட்டியப்பெண் கள் தன் அபிநயங்கண்டு கொண்டாடவும், பாடகர்கள் பாட்டைக் கண்டு பாராட்டவும், பக்கவாத்தியக்காரர்கள் இலயம்தவறாமல் அடிவைக்கும் அழகினைக் கொண்டாடவும் பந்தாடினாள். அவள் ஆடிய ஆட்டத்தியல்பு காணமுடியாவிட்டாலும் இடைக் கிடை அவள் செய்த சாமர்த்தியங்களாவன:—ஆடையணிந்தாள்; முகவேர்வையைத் துடைத்தாள்; பக்கத்திலுள்ள பெண்களுக்குப்

பந்து சுற்றும்விதம் இப்படி என்று சொல்லிக்கொடுத்தாள; தொடைமாலை, கொண்டைமாலை முதலியன கட்டினுள்; உள்ளங் காலிலிருந்து உச்சந்தலைவரை அணிந்திருந்த ஆபரணங்களைத் திருத்திக்கொண்டாள்; இவ்வளவோடு கண்ணையும் மூடிக்கொண்டு 21 பந்துகளும் சக்கரம் சுழலுவதுபோலத் தொடர்ந்து வரும்படி அடித்தாள்; அதன் நடுவில் தன்தோழியர்களோடும் பலவிஷயங் களைப் பேசிக்கொண்டாள்; 'எங்கள் எஜமாட்டியாகிய வாசவ தத்தை வாழ்க' எனக் கந்துகவரியும் பாடினுள்; இப்படி எண்ணு யிரம் கையாடினுள். இவை பெருங்கதையில் கூறப்பெற்றுள்ளன. இக்கதைப்பகுதியில் இருந்து எத்தனைவிதமான பந்தாட்டங்களும், அவற்றின் எண்ணிக்கைகளும், நடுவில் நடத்தப் பெறும் சாமர்த் தியங்களும் அறியப்பெறுகின்றன! இக்காலத்து, திரைகள் கட்டிக் கூடாரம் அடித்து ஆடப்பெறும் 'சர்க்கஸ்' என்னும் மிருகக் கூத்துமேடைகளில் மூன்று அல்லது ஐந்து காய்களைவைத்துச் சாதாரணமாக விட்டெறிந்து விளையாடுவதையும், கைமாற்றி விளையாடுவதையும் கண்டு பெருவியப்பு அடைகின்றோம். 21 காயைவைத்து வண்டியுருளைபோலத் தோன்றும்படி, நிலத்தி லறைந்து விளையாடுவதென்றால்—அதிலும் தோழியரோடு பேசுதல் முதலிய சாமர்த்தியங்களைச் செய்து விளையாடுவதென்றால் இச் செய்கை யாரைத்தான் ஆச்சரியப்படச் செய்யாது?

இதனுல் நந்தமிழ்நாட்டுப் பண்டைப் பெண்மக்களின் விளையாட்டு வன்மை, கண்முதலிய இந்திரியங்கள் எவ்வழிச் சென்றாலும் பந்தையே பின்பற்றிச்செல்லும் மனத்தின்மாட்சி, தவறாது சென்று அடிக்கும் சரீரத்தின் சாதகம் ஆகிய இவை நன்குவிளங்கின என்பது அறியப்பெறும். சதாவதானிக்கு உள்ள அவ்வளவு கவனிப்புச் சத்தியோடு சரீரவன்மையும் இருந்தமை பெரிய ஆச்சரியத்தை விளைவிக்கும் அற்புதமேயாம். இதிலிருந்து கோல்வைத்துப்பந்தடித்தல் பண்டைநாளிலும் இருந்தது என்ப தும், வெற்றியை ஒருகை இருகை எனக் கையென்ற பெயரால் வழங்கினர் என்பதும் தெரிகின்றன.

நற்றிணையில்

"ஆட்டொழி பந்திற் கோட்டுமூக் கிறுபு
கம்பலத் தன்ன பைம்பயிர்த்தாம்
வெள்ளில் வல்சி"

என்ற செய்யுட்பகுதியில் பசுமையான பயிர்களின்மேல் காம்பு இற்று வீழ்ந்து கிடக்கும் விளாம்பழங்கள் பச்சைக் கம்பளத்தின் மேல் ஆடாமற் கிடக்கும் பந்துகளைப் போன்றன என்று கூறப்

பெறுகிறது. இதனால் பச்சைக்கம்பளியை விரித்துப் பந்தாடுவதும் வழக்கம் என்பது அறியப்பெறுகின்றது.

யாருக்கு உரியது?

இங்கே எடுத்துக் காட்டிய இருபெருநூல்களின் கதைப் பகுதியாலும், பிறநூல்களாலும் இவ்விளையாட்டு மகளிர்க்கே உரியது எனத் தெரிகிறது. அல்லாமலும் ஆடவர்கள் பந்தாடுதல் ஒருபெரிய இழிவான காரியமாய்க்கூட எண்ணப்பட்டுவந்தமையை, "வரிப்புனை பந்தொடு பாவை தூங்க" என்ற திருமுருகாற்றுப் படையால் அறியலாம். எப்படிஎனின்: வலிமைமிக்க அரசன்—சண்டையை விரும்பித் தோள்தினவெடுத்த அரசன் மற்றப் பகையரசர்களை அவமதிப்பதற்காகத் தனது கொடியின் அருகிலே பந்து மரப்பாவை முதலிய பெண்கள் விளையாடும் பொருள்களைத் தொங்கவிடுவது வழக்கம் என்பதை இவ்வடி விளக்குகிறது. ஆடவர்களை அவமதிப்பதற்காகக் கட்டப்பெற்றது என்பதால் ஆண்களாற் பந்தாடுதல் பெரிய இழிவான—ஆண்தன்மைக்கேலாத காரியமென்றே எண்ணப்பெற்றமை வலியுறும்.

சிலப்பதிகாரத்து வேட்டுவவரியில் ஆவேசங்கொண்ட சாலினி கேட்க வேடர்கள்,

> "பாவையுங் கிளியும் தூவி யஞ்சிறைக்
> கானக் கோழியும் நீனிற மஞ்ஞையும்
> பந்துங் கழங்கும் தந்தனர் பரசி"

எனக் காணப்படுவதால் தெய்வங்களில்கூடப் பெண்தெய்வங்களுக்கே பந்து காணிக்கைப் பொருள்களில் ஒன்றாகக் கொடுக்கப் பெற்றது என்பதும் இக்கருத்தை வலியுறுக்கும்.

இத்தகைய பந்தாட்டம் இடைக்காலத்துப் பெண்களிடம் அறவே ஒழிந்தது. இப்போது இருபாலாராலும் ஆடப்பெற்று வருகின்றது. இவ்விளையாட்டு, பெண்களுக்கு உரியதாக இருப்பினும், இப்போதுள்ள ஆட்டவகைளிற் பெரும்பாலன ஆடவர்களுக்கு ஏற்றமுறையில் இருப்பதால் அவர்களும் மேற்கொள்ளுதல் மிகுந்த சிறப்பையே தரும்.

பழந்தமிழ் நூல்களில் வேட்டையைத்தவிர வேறு எந்த விளையாட்டுக்களும் பெரியோர்களாற் செய்யப்பெற்றதாகக் கூறப் பெறவில்லை. அவர்கள் நிர்வாகிகளாய் உழைக்கவேண்டியிருந்ததே காரணமாகும்.

அக்கினி தேவர்

சக்கரவர்த்தி ஸ்ரீநிவாஸன்

பரதகண்டத்தில் அக்கினி, தெய்வ அம்சமாகவே விளங்குகிறது. சுப காரியங்களோ அல்லது அசுபகாரியங்களோ எவையும் இந்தத்தேசத்தில் அக்கினி சாக்ஷியாகவே நடைபெறுகின்றன. ஹிந்துமதக் கொள்கையைத் தழுவின எல்லா வைதிக காரியங்களிலும் அக்கினி வளர்க்கப்பட்டு அதில் நெய் ஆஹுதி செய்யப்படுவது முக்கிய சம்பிரதாயமாக இருந்து வருகிறது.

அக்கினி தெய்வத்தின் விக்ரஹம் காண்பதற்கு அரிதானது. அக்கினி ஒரு திக்கின் அதிபதி. அக்கினி கோணம் எனப்படும் தென் கிழக்குப் பிரதேசத்திற்கு அவர் அதிபராக விளங்குகிறார். அஷ்ட (எட்டு) லோக பாலர்களில் அக்கினியும் ஒருவர். மஹாயானபுத்தர்கள் பத்து லோக பாலர்களிருப்பதாகவும், அவர்களுள் அக்கினி ஒருவரென்றும் சொல்லுகின்றனர். ஆனால் இந்த மஹாயானிகள், அக்கினியின் ஸ்தானம் வருணனுக்கு அளிக்கப்பட்டிருப்பதாகக் கருதுகின்றனர். திக்பாலர் அல்லது லோகபாலர்கள் நால்வர், எண்மர், பதின்மர் அல்லது பதினல்வர் என்று சங்கிரஹம் கூறுகின்றது. பத்துத் திக்கு பாலர்களின் வணக்கம் தாந்திரிக நூல்களில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. இப்பத்து லோகபாலர்களின் பெயர்கள் பின்வருமாறு:—இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், பிரும்மா, விஷ்ணு; இவர்களின் விக்ரஹங்கள் சில ஜைனர் கோயில்களில் காணக் கிடைக்கின்றன.

இப்பாலர்களில் அக்கினி மிகவும் முக்கியமானவர். பழந்தேவர்களில் அக்கினி ஒருவர். அக்கினியின் நிறம் நெருப்பின் நிறமே. இவருக்குத் தலைகள் இரண்டு; கண்கள் ஆறு; நாக்குக்கள் ஏழு; கொம்புகள் நான்கு; கால்கள் மூன்று. இவரைச் சுற்றி அக்கினி ஜ்வாலைகள் படர்ந்து நிற்கும். தாமரை மலர்மீதே இவர் வீற்றிருக்கிறார். இவரது கைகளில் புரோக்ஷணி, ச்ருக், ச்ருவா, பரணபத்திரம், தாமரை, வியாஜாணி, கிருதபத்திரம் இவையிருக்கும். இவருக்குப் பூணூல் உண்டு; செவ்வாடை அணிந்து கொண்டிருப்பார். இவரது வாகனம் செம்மறி ஆடு. இவர் கொழுத்த வயிறு

படைத்தவரெனக் கூறப்படுகின்றது. ஸ்வாஹா, ஸ்வாதா என்ற இருவரும் இவருடைய மனைவிகள். இது அக்கினி தேவரின் ஓர் அம்சம்.

விஷ்ணுதர்மோத்திரத்தில் அக்கினி தேவர் விக்ரஹத்தைப் பற்றிய விரிவான விவரம் காணப்படுகின்றது. இதன் பிரகாரம் அக்கினி தேவரின் தலைமயிர் முடியப்பட்டிருக்குமாம். அவரது ஆடை புகைநிறமாம். உடலைச் சுற்றி அக்கினி ஜ்வாலைகள் வீசும். மூன்று கண்களும், ஒரு தாடியு மிருக்குமாம். கைகள் நான்காம். 'வாகதண்டம், தான தண்டம், திக்தண்டம், வாத தண்டம்' எனப்பற்கள் நான்காம்; இவரது ரதம் புகைவர்ணமானது; இதை நான்கு கிளிகள் இழுத்துச் செல்லுகின்றன. வாயுதான் இந்த ரதத்தைச் செலுத்துபவர். அக்கினி தமது துடையில்தான் 'ஸ்வாஹா' என்றமனைவியை வைத்துக்கொண்டிருக்கிறார். இவள், தனது கையில் புஷ்பங்கள் கொண்ட ஒருகுடத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறாள். அக்கினிதேவரின் ஒரு கையில் தீப்பந்தமும், மற்றொருகையில் ஜபமாலையும் இருக்கின்றன.

'விச்வகர்ம சில்பம்' என்னும் நூலில் அக்கினி தேவர் பின் கண்டவாறு வர்ணிக்கப்படிருக்கிறார்: "அக்கினியின் கையில் ஒரு கொடி உண்டு. இவரது கண்கள் செம்பு நிறத்தை யொத்தவை; நிறம் புகையைப் போன்றது. இவரைச் சுற்றி அக்கினி படர்ந்து ஒரே தீட்சண்யமாகவிருக்கும். இவர் ஒரு குண்டத்தின்மீது நிற்கிறார். இவரைச் சுற்றி யோகபட்டமுள்ளது. 'ஸ்வாஹா' என்னும் மனைவி இவரது வலப்பக்கத்திலிருக்கிறாள். இவரது ஆபரணங்கள் வெண்மை நிறமானவை."

ஹேமந்த்ரி என்பர், அக்கினி தேவருக்கு ஒரே ஒருமுகந் தானென்றும், மூன்று கண்களும் நான்கு கைகளுமுண்டு என்றும், அவரது மனைவி 'ஸ்வாஹா' அல்லவென்றும், அவளது பெயர் 'சாவித்ரி' என்றும் அபிப்பிராயப்படுகிறார்.

ஆதித்ய புராணத்தின் வண்ணம் அக்கினியின் நிறம் செம்மை; அவர் பெருத்ததொந்தியுடன் கூடியவர்; புருவமயிர் வெண்மையானது; கைகளில் ஜபமாலையும், சக்தியு மிருக்கின்றன; அவரிடம் ஏழு ஜ்வாலைகளிருக்கின்றன; வாஹனம் ஆடு.

மரீசி என்ற ரிஷி அக்கினியிடம் தங்கத்தாலான செம்மறி ஆடும், சக்திச் சின்னமு மிருப்பதாகக் கூறுகிறார். இவருக்கு ஏழு செந்நாக்குக்களுண்டு; இவைதாம் இவரது குதிரைகள். நிறம் செம்மை. இவருக்கு முன்னே எண்ணற்ற கொடிகள் படர்ந்திருப்பதாக மஹாபாரதம் செப்புகின்றது.

'அக்கினி மித்திரன்' என்னும் மன்னவனொருவன் பழங்காலத்திருந்ததாகவும், அவனால் வழங்கப்பட்ட நாணயங்களில்தான் அக்கினியின் மிகவும் பழைய உருவம் காணப்பட்டதாகவும் தெரிய வருகின்றது. அக்கினிதேவரின் உருவம் நின்றுகொண்டிருப்பது போல் இவற்றில் அச்சிடப்பட்டிருந்ததாம்.

தென்னிந்தியாவில் விசேஷமாகவும், ஒரிஸ்ஸா மாகாணத்தில் சிற்சில இடங்களிலுமுள்ள கோயில்களில்தான் அக்கினி தேவரின் உருவங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆனால் அவரது ரதங்களின் உருவங்கள் ஆங்காங்கு மாறுபட்டிருக்கின்றன. ஒரிஸ்ஸாப் பிரதேசத்திலுள்ள கோயில்களில் அக்கினியின் வாஹனம் வெள்ளாடாகவும், செம்மறி ஆடாகவும் விளங்குகின்றது. மைசூரிலுள்ள ஹரிஹரேசுவரர் ஆலயத்தில் அக்கினிக்கு வெள்ளாட்டு வாகனம் அமைக்கப்பட்டிருக்கிறது. பாகாலா என்னும் இடத்திலுள்ள தேவாலயத்தில் குதிரை வாஹனத்தின்மீதே அக்கினிதேவர் அமர்ந்திருக்கிறார்.

இந்தியாவிற்கு முதல் முதல்வந்த பிராடஸ்டண்ட் கிறிஸ்தவப் பாதிரியார், "இந்தியாவின் தெய்வங்கள்" என்று 1869-ம் வருஷத்தில் வெளியிட்ட புத்தகத்தில் அக்கினியின் வாஹனம் வெள்ளாடும், குதிரையும் என்றே குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் இந்நாட்டுப் பிரதிமைகளின் ஆராய்ச்சிப்படி தாமரை மலர், வெள்ளாடு, செம்மறியாடு, குதிரை இந்நான்கும் அக்கினியின் வாஹனங்களே எனத்தெரிகின்றது. பர்லின்நகரைச் சேர்ந்த மிஸ்டர் டி. எ. இ. வால்ஹீம்டா பான்ஸெசா என்பவர் எழுதியுள்ள "இந்தியாவின் பௌராணிகம்" என்ற புத்தகத்தில் செம்மறி ஆட்டையே அக்கினியின் வாஹனமாக வர்ணித்திருக்கிறார். அவருக்கு இரண்டு கால்கள் நான்கு கைகள் எனவும், அவர் தமது கையில் ஒரு ஈட்டியை வைத்துக் கொண்டிருப்பதாகவும், மற்றிரு கைகளில் ஜபமாலையும் தாமரைப் புஷ்பமுமிருப்பதாகவும், நான்காவது கை செம்மறியாட்டின் கழுத்தின் மீதிருப்பதாகவும் அவர் சொல்லுகிறார். அவரது கிரீடம் வாளையொத்ததாம். அக்கினி தேவரின் மனைவி 'அக்னேயி' அல்லது 'அக்னயி' அல்லது 'ஸ்வாஹா' என்பது வால்ஹீம்டாவின் கருத்து.

அக்கினிக்கும் ஆட்டிற்கும் இவ்வளவு நெருங்கிய சம்பந்தம் ஏற்படவேண்டிய காரண மென்னவென்பதை ஆராயப்புகுந்தால் ஆதி சிருஷ்டியில் சிருஷ்டி கர்த்தாவின் வாயினின்றும் முதல்முதல் அக்கினியும் ஆடும் பிராம்மணனும் வெளிவந்ததாக உபநிஷத்துக்கள் கூறுவதை நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது.

எல்லோரா கைலாச ஆலயத்திலும், கல்கத்தா மியூஸியத்திலு முள்ள அக்கினி தேவர் விக்ரஹங்களுக்குச் செம்மறியாடு வாஹனமே உள்ளது. ஒரே முகத்துடன் கூடிய உருவங்களே அதிகமாகக் கிடைக்கின்றன; இரண்டு முகங்களுடன் கூடிய விக்ரஹங்கள் எங்கோ ஒன்றிரண்டுதான் இருக்கின்றன; மூன்று முகங்கள் தாங்கியவை இதுவரை எங்கும் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

ரேடியம்

உலகில் மிகவும் உயர்ந்த மதிப்புடைய உலோகம் தங்கமென்று பலர் நினைக்கின்றனர். அதனினும் பலமடங்கு உயர்ந்தவிலையுடையது ரேடியமென்னும் உலோகம். இது சற்றேறக்குறைய 40 வருடங்களுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டது. இதுவரையில் உலகமுழுவதிலும் 26 அவுன்ஸ் நிறையுள்ள ரேடியமே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

எக்ஸ்ரேமூலம் வைத்திய சிகிச்சைசெய்ய இந்த உலோகம் மிகப் பயன்படுகிறது. பிளவைகளை ஸ்வஸ்தப்படுத்துவதற்கு இந்த உலோகம் இன்றியமையாதது. ஆயினும் வேண்டிய அளவு இது கிடைத்தற்கின்மையின் இதனுற் பெறும்பயனைப் பேரளவில் மக்கள் அடைய முடியவில்லை. ஐக்கிய அமெரிக்காவில் ஓர் அவுன்ஸ் ரேடியத்தின் விலை 336,000 பவுன் ஆகச் சொல்லப்படுகிறது. ரேடியத்தின் உதவியால் ரஸவாதங்கூடச் செய்யலாமென்று சில விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

1898-ஆம் வருஷத்தில் போலந்துநகரப்பெண்மணி யொருத்தியால் இவ்வரிய உலோகம் கண்டுபிடிக்கப்பட்டது. அவள்பெயர் மேரியென்பது.

ரேடியம் கொடிய விஷத்தன்மை யுடையது; அதன் ஒரு சிறிய அணுக்கூட மனிதனைக்கொல்லும் வன்மையுடையது. வைத்தியசாலைகளில் பிளாட்டினத்தாற் செய்த ஊசிகளுக்குள் அதன் சிறிய அணுக்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

உணவு நஞ்சாவது ஏன்?

பி. என். அப்புஸ்வாமி, பி.ஏ., பி.எல்.

(27-ஆம் பக்கத்தொடர்ச்சி)

நமது உடல் ஒரு விசித்திரமான இயந்திரம்.

நமது உடலானது மிகவும் ஆச்சரியமான இயந்திரம். அதை அரசாங்கத்துக்கும், இயந்திரசாலைக்கும் இன்னும் எத்தனையோ விஷயங்களுக்கும் ஒப்பிட்டுப் பேசுவதுண்டு. அதில் காணப்படும் உறுப்புக்கள் அனைத்தும் தம்முள் ஒன்றற்கொன்று எவ்வளவோ மாறுபட்டுத் தோன்றினும், யதார்த்தத்தில் ஒன்றோடொன்று மிகவும் விந்தையாய்ப் பிணைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். முதலில் பார்வைக்கு உடனே புலனாகாது போனாலும் இவ்வகையான நெருங்கிய பிணைப்பு ஒன்று இருக்கிறது என்பது மறக்க வொண்ணாத விஷயம்.

உடலிலே மனமும், சதையும், புத்தியும், உணவும், உணர்ச்சியும் மிகவும் நெருங்கிப் பின்னியனவாகக் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றை யொன்று பாதிக்கின்ற முறையையும் அளவையும், ஒன்றுலொன்று மாறுபடுகின்ற தன்மையையும் பார்த்தால் அவற்றுள் வலிமிக்கது எது, வலியிற் குறைந்தது எது என்று சொல்லுவது இயலாது.

உணர்ச்சியும் இரசாயனமும்.

களைப்பு, பசி, உறக்கம் முதலிய உணர்ச்சிகளுக்குக் காரணம் தசையிலும் உதிரத்திலும் உண்டாக்கப்படும் சிற்சில இரசாயனப் பொருள்கள் தாம் என்பது இப்பொழுது நன்றாக அறியப்பட்டிருக்கிற விஷயம். ஆகவே உடலில் உண்டாகும் சிற்சில இரசாயன மாறுபாடுகளால்தான் பசி முதலிய உணர்ச்சிகள் உண்டாகின்றன என்பது ஒருண்மை. கடுங்கோபம், பெரு வியப்பு, பேரச்சம் முதலிய சிற்சில உணர்ச்சிகளால் நமது இரத்தத்திலும் நமது உடலிலும் சிற்சில அவயவ மாறுபாடுகளும் இரசாயன மாறுபாடுகளும் நரம்புத் தளர்ச்சி கிளர்ச்சிகளும் உண்டாகின்றன என்பது

மற்ருேருண்மையாம். ஆகவே உணர்ச்சிகளால் உடலும், உடலால் உணர்ச்சிகளும் ஒரு பெரிய அளவில் பாதிக்கப்படுகின்றன என்பது தெளிவாகிறது.

தந்தியும் தபாலும்.

முற்காலத்திலே இவ்விஷயங்களேப்பற்றிப் போதிய அறிவு நமக்கு இல்லாதிருந்தது. அப்பொழுது இம் மாறுபாடுகளுக்குக் காரணம் நமது உடலின் தந்திக் கம்பிகளாகிய நரம்புகள்தாம் என்று எண்ணியிருந்தோம். அதுவும் நன்ருக விளங்கவில்லே. அதாவது நமக்கு ஏதாவது ஓர் உணர்ச்சி ஏற்பட்டால் அதை உடனே நம்முடைய நரம்புகள் மூளேயென்னும் மேலதிகாரிக்கு உடனே தந்தி கொடுத்து விடுகின்றன. பிறகு அந்த அதிகாரி தந்தி மூலம் கொடுக்கின்ற உத்தரவுகளுக்கிணங்க அவயவங்கள் நடந்து கொள்கின்றன என்று மட்டிலும் எண்ணியிருந்தார்கள். இப்பொழுது அதைத் தவிரப் பின்னெரு விஷயமும் நமக்குத் தெரிந்திருக்கிறது: இந்தத் தந்தி ஆபீஸைத் தவிர உடலிலே தபால் ஆபீஸ் போன்ற வேருேர் ஏற்பாடும் இருக்கிறது என்பது. இந்த ஏற்பாட்டில் சம்பந்தபட்டவை உடலிலுள்ள சிற்சில கிரந்திகள் (கிலாண்டுகள்). 'ஹார்மோன்கள்' என்னும் ஒரு வகையான இரசாயனப் பொருளே அவை உண்டாக்குகின்றன. இரத்தக்குழாய்களின் வழியே உடலெங்கும் பாய்ந்தோடும் இரத்த வெள்ளத்திலே இவை இறங்கி, உடலில் எங்கும் சென்று சென்று அங்கங்கே விஷயங்களேத் தெரிவிக்கின்றன. உத்தரவுகளேக் கொண்டு கொடுக்கின்றன. உடல் மத்தியிலே உள்ள கல்லீரலுக்கும், உடல் வெளி ஓரங்களில் உள்ள கைகால்களில் உள்ள தசைகளுக்கும், எல்லாவற்றையும் மேல் பார்த்து நடத்தும் மூளேக்கும் இவை நீந்திச் சென்று விஷயங்களேத் தெரிவிக்கின்றன.

இது மிகவும் மெதுவாக நடக்கின்ற காரியம் என்று எண்ணலாகாது. ஓரிடத்தில் இரத்தத்தில் கலந்த பொருளானது உடலெங்கும் பரவ வெகுநேரம் ஆகும் என்று எண்ணக்கூடாது. நெஞ்சிலிருந்து புறப்பட்ட இரத்தமானது கிட்டத்தட்ட முக்கால் நிமிஷத்தில் உடல்முழுதும்ஓடிவிட்டு மீண்டும் நெஞ்சுக்கு வந்துவிடக்கூடும். ஆகவே இந்த வாய்க்கால்களின்வழியாக அனுப்பப்படும் செய்திகள் மந்தமாக அறிவிக்கப்படுகின்றன அல்ல.

அறிவிக்கும் முறை.

நாம் சாப்பிடும்போது உட்கொள்ளும் உணவுகளில் சில—எளிதாகக் கரைந்துபோகக் கூடியவையாயும் சுவை மிக்கனவாயும் இருப்பன—வாயிலே ஜீர்ணமாகி வாயிலுள்ள இரத்தக்குழாய்களின்

வழியாக நெஞ்சுக்குச்சென்று உடலில் எங்கும் பரவிவிடுகின்றன. வாயில் போட்ட சில விநாடிகளுக்குள்ளே அவை உடலின் சிறு பகுதிகளான செல்களையும் உடலிலுள்ள கிரந்திகளையும், 'பான்கிரியாஸ்', குடல் முதலிய உறுப்புக்களையும் எட்டிவிடுகின்றன. அங்கே சென்று, இன்ன இன்னவகையான உணவுப்பொருள்கள் பின்னால் வந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவிக்கும் தூதர்களாகி விடுகின்றன; வரப்போகும் ஆகாரத்தின் மாதிரியையும் அவ் வுறுப்புக்களுக்குக் காட்டி அத்தகைய ஆகாரத்தை ஜீர்ணிப்பதற்கு உரிய திராவகங்களை (நீர்களை)த் தயார் செய்து கொள்ளும்படி அந்த உறுப்புக்களைத் தூண்டுகின்றன. அவ்வுறுப்புகளும் இச் சாரணர்களின்மூலம் தாம் தெரிந்துகொண்ட விஷயங்களுக்கு ஏற்ப நடந்துகொள்ளுகின்றன. இவ்வாறு சுவை உணர்ச்சிக்கு ஒத்து அதனோடு ஈடுபட்டு உடலிலுள்ள பிற ஜீர்ண அவயவங்களும் நடந்து கொள்ளுகின்றன என்பது கவனிக்கத் தகுந்தது.

சுவாச ஏற்பாடு.

இம்மாதிரியே வேறு நிகழ்ச்சிகளும் உடலில் நிகழ்வதைக் காணலாம். நாம் பிறந்தது முதல் சாகும்வரை இடைவிடாது, விழித்திருக்கும் வேளைகளிற் போலவே உறங்கும் வேளைகளிலும், செய்துவரும் தொழில் என்னவென்றால் மூச்சு விடுவதுதான். தாயின் வயிற்றினுள்ளே அவளுடைய உதிரத்திலிருந்து தனக்கு வேண்டும் உணவையும் பிராண வாயுவையும் பெற்று வந்த கருவானது பிறந்ததும் 'குவா' என்று கத்திக்கொண்டு மூச்சுவிட ஆரம்பிக்கின்றது; ஆயுசு முழுவதும் இடைவிடாமல் மூச்சு விட்டுக்கொண்டே இருக்கிறது. அது வயது முதிர்ந்து சாகும்போது 'மூச்சு நின்று விட்டது' என்று சொல்லுகிறோம்.

ஆனால் ஒன்று. நாம் உயிருள்ளவரை மூச்சுவிட்டுக்கொண்டேயிருக்கிறோமாயினும் நம்முடைய ஆயுள் முழுவதும் ஒரே அளவாக எப்போதும் மூச்சு விடுவதில்லை. சாதாரணமாக ஒரு மனிதன் ஒரு நிமிஷத்துக்குப் பதினெட்டு அல்லது பத்தொன்பது தரம் மூச்சு விடுகிறான். அவன் ஓடும்போதும் மும்மரமாய் வேலைசெய்யும்போதும் சுரமுறும்போதும் அவன் இதைக் காட்டிலும் வேகமாய் மூச்சு விடுவதை நாம் பார்க்கிறோம். இது ஏன்?

கரியமில வாயுவின் தொழில்.

நம்முடைய மூச்சின் அளவையும்—அதாவது சாதாரண மூச்சா பெரு மூச்சா என்பதையும்—அதன் வேகத்தையும் அடக்கியோ ஓட்டியோ வருவது 'கார்பன் டை ஆக்ஸைட்', 'கார்பானிக் ஆசிட்'

என்றெல்லாம் சொல்லப்படும் கரியமில வாயு. இது நமது உடலிலே உடற் கூறுகளின் — 'செல்லுக'ளின் — சிதைவினுலே உண்டாக்கப்பட்டு இரத்தத்தில் ஒரு கழிவுப் பொருளாகத் தள்ளப்படுகிறது. இது நம்முடைய உடலிலிருந்து ஒரு பெரிய அள விலே கழிக்கப்படும் பொருளாக இருந்து வருகிறது. நமது உடற் கூறுகளிலே செல் சிதைவுகளினுல் உண்டாகிய இது இரத்தத்தில் தள்ளப்படுகிறது. இதைத் தாங்கியுள்ள இரத்தமானது அசுத்த இரத்தக் குழாய்களாகிய நரம்புகளின் வழியாயோடி நெஞ்சில் வந்து விழுகிறது. அங்கிருந்து நுரையீரலுக்கு எடுத்துக்கொண்டு போகப்படுகிறது. அங்கே நாம் சுவாசிக்கும்பொழுது உள்ளிழுக் கும் நல்ல காற்ருேடு கலந்து நல்ல காற்றைத் தான் ஏற்றுக் கொண்டு அதற்குப் பதிலாகக் கரியமில வாயுவைக் கொடுத்துவிடு கிறது. நாம் மூச்சை வெளிவிடும்போது அந்தக் கரியமில வாயுவை வெளியே தள்ளி விடுகிருேம். இதுதான் சுவாச முறை யும், அதனுடைய மர்மமும். ஆகவே சுவாசிப்பது நமது இரத்தத்தில் உள்ள அசுத்தங்களுள் முக்கியமான கரியமில வாயுவை வெளியே தள்ளுவதற்கு என்று ஏற்படுத்திய ஏற்பாடு தான்.

நமது இரத்தத்திலே கலக்கின்ற கரியமில வாயுவானது ஓரள வுக்கு மேற்பட்டு விட்டால் அது நுரையீரலின் வழியே செல்லும்போது அதிலுள்ள நரம்புகளை ஒரு வகையாகத் தூண்டுகின்றது. அத் தூண்டுதலானது மூளைக்குத் தந்தியாகப் போகிறது; அங்கே ஒருவகை உபத்திரவமாகத் தோன்றுகிறது. மூளையின் கீழ்ப்பாகத்திலே மூச்சுநிலை என்று ஒன்று இருக்கிறது. அங்கே இந்தச் சமாசாரம் போய்ச்சேர்ந்தவுடன் அது நெஞ்சுக் கூட்டிலுள்ள தசைகளுக்கு 'வேகமாய் வேலை செய்யுங்கள்' என்று அவசரத் தந்தி கொடுக்கிறது. ஆகவே மூச்சானது தீர்க்கமாகவும் துரிதமாகவும் விடப்படுகிறது. இதனுல் அந்தக் கரியமில வாயு வானது முன்னிலும் வேகமாகவும் அதிகமான அளவிலும் உடலி னின்று வெளியே தள்ளப்படுகிறது.

இவ்வாறு வேகமாய் விடும் மூச்சினுல் அளவுக்கு அதிகமாய் உடலில் சேர்ந்துள்ள கரியமிலவாயு வெளியே தள்ளப்படும் வரை யில் இத்தகைய துரிதமான சுவாச ஏற்பாடு நடந்து வருகின்றது. ஏனென்ருல் இடைவிடாது கரியமிலவாயுவின் மிகுதியைக் குறித்த தந்திகள் அசுத்த இரத்தத்தினுல் மூச்சு நிலைக்கு அனுப்பப்பட்டுக் கொண்டே யிருக்கின்றன. அங்கிருந்தும், இடைவிடாது நெஞ்சுக் கூட்டின் தசைகளுக்கும் உத்தரவு வந்து கொண்டே

இருக்கிறது. இவ்வாறான முயற்சிகளால் அதிகமாயுள்ள கரியமில வாயுவெல்லாம் அகற்றப்பட்டு, இரத்தமானது மீண்டும் தன் சுய நிலையை அடைந்தபோதுதான், இத்தகைய தந்தி சாமாசாரங்களை அனுப்புவதும் நின்று போகிறது. அது நின்றுவிடவே மறுபடியும் சுவாசமானது முன்போலச் சாதாரண நிலையை அடைகிறது. இந்த ஏற்பாடானது மிகவும் நுட்பமாகச் செய்யப்பட்ட ஏற்பாடு. இரத்தத்திலே அதிகப்பட்டுக் காணும் கரியமில வாயுவின் அளவானது மிகச் சிறு அளவாக இருந்தாலுங்கூட உடனே நெஞ்சுக்கூடு துருத்திபோல் மும்மரமாக வேலை செய்யத் தொடங்கி விடுகிறது.

நிகழ்ச்சிகளும் உடலும்.

திடீரென்று ஏதாவது ஒரு நிகழ்ச்சியானது நமது கண்முன் நடக்கும்போது நமது உடலில் என்ன நடக்கிறதென்பதைக் கவனிப்போம்: ஒருவன் மீது வண்டியொன்று ஏறி விடுகிறதை நாம் பார்க்கிறோம்; அல்லது படீரென்று ஒரு சத்தம் நமது காதில் படுகிறது; அல்லது நாம் ஏறிச்செல்லும் வண்டி கவிழ்ந்து விடும்போல் தள்ளாடிச் சாய்கிறது என்று வைத்துக் கொள்ளுவோம். நாம் உள்ளே போகும்போது ஒரு குழந்தை வேடிக்கையாகக் கதவுக்குப் பின்னால் ஒளித்துநின்றுகொண்டு 'டப்' என்று சொன்னாலும் போதும். அப்பொழுது நமது உடலில் ஏற்படுகிற நிகழ்ச்சிகள் என்ன என்று பார்ப்போம். நமக்குத் திடுக்கிடுகிறது; தூக்கி வாரிப் போடுகிறது; அல்லது நமது கண்ணும் வாயும் ஆச்சரியத்தால் திறந்து போகின்றன. அந்தச் சமயத்தில் நாம் மூச்சுவிடுவதை மறந்து விடுகிறோம். ஒரு க்ஷண நேரம்போல் மூச்சு நின்று போகிறது. 'மூச்சுப் போய் வந்தது' என்று சொல்லுகிறோம். உடனே உடலுள் இரத்தத்திலே 'கார்பானிக் ஆசிட்' குவிந்து விடுகிறது. வெகு சீக்கிரமாக அது மூச்சு நிலையைப் போய்த் தாக்கி அதைத் தூண்டுகிறது. உடனே நாம் பெருமூச்செறிகிறோம். அதிகமாக வந்து குவிந்த கரியமில வாயுவை வெளித்தள்ளும்பொருட்டுத் துரிதமாகவும் ஆழமாகவும் மூச்சு விடத் தொடங்குகிறோம். ஆதலால் இரத்தத்தோடு நல்ல காற்று அதிகமாகக் கலக்கத் தொடங்குகிறது.

உணர்ச்சிகளின் வன்மை.

இது கேவலம் ஆச்சரிய உணர்ச்சியால் மட்டிலும் நடைபெறும் நிகழ்ச்சி. அவ்வகை உணர்ச்சியோடு கலந்து நாம் வேறு வகையான உணர்ச்சிகளையும் பெறுவோமானால் இவற்றைத் தவிர வேறு சில விஷயங்களும் உடலுள் நிகழ்கின்றன. நம்மைத் திடுக்குறச்

செய்த விஷயமானது நமக்கு அருவருப்பைத் தருவதாயிருக்கு மானாலும், நமக்குக் கண்டால் பிடிக்காத ஒருவனால் தூண்டப் பட்டதாயிருக்குமானாலும், மேற்கூறிய தந்தியைத் தவிர வேறொரு தந்தியும் மூச்சு நிலைக்கு அனுப்பப்படுகிறது. அதாவது, 'ஏதோ விசேஷ சம்பவம் நடந்தாலும் நடக்கலாம். அதற்குத் தயாரா யிருக்கவேண்டும். ஆசையால் மறு தந்திவருகிறவரை, விசேஷ நிகழ்ச்சிக்குச் சன்னத்தமாயிருக்கும் பொருட்டு விரைவாகவும் ஆழமாகவுமே மூச்சுவிட்டுக்கொண்டிருக்கும்படி உத்தரவு போடு' என்பது. அதுவும் அவ்வாறு செய்கிறது. ஆதலால் கோபமூண்டு சண்டைக்குத் தயாராகும் மனிதர், உடல் துடிதுடிக்க மடமட வென்று மூச்சு விடுவதை நாம் எல்லாரும் பார்க்கலாம். பயந்து கலைந்த மாடு சீறும்போது இது நன்றாகத் தெரியும்.

ஆகவே, கோபத்தையோ அருவருப்பையோ, அச்சத்தையோ போன்ற உணர்ச்சிகளை நாம் பெறும்போதெல்லாம் நம்முடைய உடலின் அமைதியும் சமத்துவ நிலையும் மாறிவிடுகின்றன. உடலின் இரசாயன நிலையானது சீர்கெட்டு, ஒழுங்கில்லாத, நல்லதல்லாத நிலையாக மாறிவிடுகிறது. ஆதலால், இப்படி அடிக்கடி உண்டாகும் நிலைமாறுபாடுகளினால் உடலானது மிகவும் கெட்டுப்போகிறது. மேலும், இந்நிகழ்ச்சிகள் யாவும் ஜீர்ணத் தொழிலையும் சரிவர நடக்க ஒட்டாது கெடுத்துவிடுகின்றன என்பதும் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயம். நாம் சாப்பிட்டுக் கொண் டிருக்கும்போது திடீரென்று ஒரு துக்க சமாசாரத்தையோ அல்லது சந்தோஷச் செய்தியையோ கேட்டால் அப்படியே நாம் உண்ண முடியாது போய் விடுகிறது என்பதையும் நாம் யாவரும் அறிவோம். ஒருவர் மிகவும் வருத்தமான சமாசாரத் தைக்கேட்டாலும் சரி, அல்லது அது வருமென்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தாலும் சரி, "வயிற்றைப் போட்டு என்னவோ செய் கிறதே" என்று சொல்லுவதைக் கேட்கிறோம். சாப்பிட்டானதும் கோபமாய்ச் சண்டை போட்டாலும் இம்மாதிரியே ஜீரணத் தொழிலுக்கு இடையூறு உண்டாவதை நாம் அறிவோம். சிற்சில பேருக்கு வாந்தியும் வயிற்றுவலியுங்கூட வந்து விடுவதும் உண்டு.

இது உண்மைதானென்று நமக்கு வெகு காலமாகத் தெரியும். 'சாப்பிடும் போது அமைதியுடன் சாப்பிடவேண்டும்', 'அழுது கொண்டு சாப்பிட்டால் உடம்பில் ஒட்டாது' என்றெல்லாம் சொல்லுவதைக் கேட்டிருக்கிறோம். ஆனால் ஏன் இவை நடக் கின்றன என்பது தெரியமாலிருந்தது.

எக்ஸ் ரே செய்த உதவி.

'எக்ஸ் ரே' என்னும் விந்தையான கிரணங்களை நாம் உபயோகிக்கத் தொடங்கிய பிறகு வயிற்றுக்குள் நடக்கிற விஷயத்தைக்கூட உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நாம் பார்க்கும் திறமையைப் பெற்றுவிட்டோம். அதன் துணையைக் கொண்டு, சாப்பிடும்போது வயிறு சாதாரணமாய் என்ன செய்து கொண்டிருக்கிறது, இவ்வகைக் குழப்பங்கள் உண்டாகும்போது அது எவ்வாறு மாறுபடுகிறது என்பவற்றை ஆராய முடிந்துவிட்டது. அந்தச் சோதனை வருமாறு:

ஒரு பூனையின் வயிற்றின்வழி எக்ஸ்ரேயைச் சாதாரணமாய்ப் புகவிட்டால் அது முழுவதும் ஊடுருவிப் போய்விடும். நிழல் ஒன்றும் விழாது. ஆகையால் வயிற்றுக்குள் நடக்கிறது ஒன்றையும் நாம் அறியமுடியாது. அதற்காக, அது உண்ணும் ஆகாரத்தோடு பிஸ்மத்து அல்லது டால்கம் பொடிகளைக் கலந்து கொடுத்துவிடுவார்கள். அந்தப் பொடிகளுக்கு மணமும் கிடையாது, சுவையும் கிடையாது. ஆதலால் பூனை ஆகாரத்தோடு ஆகாரமாய் அவற்றையும் உட்கொண்டுவிடும். ஆனால் அவை தடித்த வஸ்துக்கள் ஆகையால் இப்பொழுது வயிற்றின் வழி எக்ஸ்ரே கிரணங்களைப் புகவிட்டால் இப்பொருள்கள் அவற்றைச் சிறிது மறைக்கும்; ஆகவே நிழல் விழும். அந்த நிழலைச் சோதித்துப் பார்த்தால் வயிற்றில் புகுந்த உணவானது என்ன என்ன பாடெல்லாம் படுகிறது என்பது நமது கண்ணுக்குத் தெரியவரும். சாதாரணமாக வயிறானது தனக்குள் விழுந்த ஆகாரத்தைப் பிசைந்து கடைந்து கொண்டேயிருக்கும். சிறிது சிறிதாகச் சிறு குடலில் ஆகாரம் இறங்கும். எக்ஸ்ரே நிழலில் இது நன்றாகத் தெரியும். பிறகு திடீரென்று பூனை இருக்கும் அறையில் ஒரு நாயைக் கொண்டு வந்துவிட்டால்—அதுவும் நாய் கிட்ட வந்து உறுமிக் குலைக்கத் தொடங்கிவிட்டால்—உடனே வயிற்றின் சலனம் அப்படியே நின்று போவதைக் காணலாம். சிற்சில வேளைகளில் அது எதிர்முகமாகவும் நிகழத் தொடங்கிவிடும். அதாவது குடலுள் இறங்கிக் கொண்டிருந்த உணவானது எதிர்த்து மீண்டும் வயிற்றுக்குள் வரும். சிற்சில வேளைகளில் வயிற்றிலிருக்கும் உணவும் அன்னக்குழாயின் வழி மேலேறி வாந்தி யெடுக்கும். ஆதலால் மனநிலையால் உணவு ஒழுங்காக ஜீரணம் ஆவது தடைப்பட்டுப் போகிறது. அதோடு நிற்காமல் அது அழுகவும் தொடங்குகிறது. ஆகவே நல்லுணவானது யதார்த்தமாகவே நஞ்சாக மாறிவிடுகிறது.

இதே மாதியான நிகழ்ச்சிகள்தாம் நமது மானிட உடலிலும் நிகழ்கின்றன. பொறுமை, கோபம், வெறுப்பு, அச்சம் முதலிய உணர்ச்சிகளை நாம் உண்ணும் தறுவாயில் பெறுவோமானால், நமது ஜீர்ணம் தடைப்பட்டு, நமக்கு அஜீர்ணம் ஏற்படுகிறது. உண்ணும் உணவு நன்மையை அளிக்காமல் நஞ்சாகித் தீங்கை விளைவிக்கின்றது.

இவ்வாறு, அடிக்கடி நிகழுமானால் ஒவ்வொரு தடவையும் நஞ்சுற்று நஞ்சுற்று, நமது உடலில் தங்கும் நஞ்சுத் தொகுதி அதிகமாகிக்கொண்டு வருகிறது. உடலிலிருந்து எவ்வளவு அசுத்தம் வெளியே அகற்றப்பட்ட போதிலும், எஞ்சிய ஓர் அளவு தங்கி நின்று நம்மைத் துன்பத்துக்குள்ளாக்குகிறது. பித்தம் முதலிய நோய்கள் அப்பொழுது தலையெடுத்து நம்மை வாட்டுகின்றன.

மெய்யான மன அமைதி வேண்டும்.

கோபம் முதலிய உணர்ச்சிகள் தலையை வெளிக்காட்டாது உள்ளே இருந்து கறுமுறுவென்று இருந்தாலுங் கூட இத்தகைய நிகழ்ச்சிகள் நடந்தே தீருகின்றன. அப்பொழுது ஒருகால் அவை பெரிய அளவில் நிகழாதிருக்கலாம். ஆயினும், சிறிது சிறிதாக விஷயங்களை அவை நமது உடலில் சேர்த்துக் கொண்டே வரும். ஆகையால் ஆரோக்கிய நிலையை நாடும் ஒவ்வொருவனும் பரிபூரணமான மன அமைதியை உடையவனாக இருக்க வேண்டும். கோபம் முதலிய தீய குணங்களுக்குச் சிறிதும் மனத்தில் இடங்கொடுக்கக் கூடாது.

சுருங்கக்கூறின், உணவின் அளவின் மிகுதியாலும் குறைவாலும், அதன் குணகுணங்களாலும், உண்ணுவோனது மன நிகழ்ச்சிகள் காரணமாகவும் உணவு நஞ்சாகக் கூடும். இவற்றையெல்லாம் ஆராய்ந்து, ஏற்ற உணவை அமைதியுடன் உண்பது தான் நல்ல ஜீர்ண முறையாகும். அதுவே தான் ஆரோக்கிய வழி.

எலுமிச்சம்பழ ரசம்

எலுமிச்சம்பழரசம் சீதளமென்றும் அது தொண்டையில் கபத்தை விருத்தி செய்யுமென்றும் வைத்தியசாஸ்திரம் அறியாத பலர் பொதுவாக அபிப்பிராயப்படுகிறார்கள். இது தொண்டைக்கு வலிவைத் தரக்கூடியதே யன்றி நோயை உண்டுபண்ணக் கூடியதன்று. மேனாட்டு வைத்தியர்களுங் கூடத் தொண்டையைப்பற்றிய வியாதியில் நன்றாக உபயோகிக்கலாமென்று அறிவிக்கின்றனர். பிரான்ஸ் தேசத்தில் சங்கீதவிற்பன்னரும், நாடகரும், பாடகரும் தொண்டைக் கம்மல் தொண்டையில் கபம் சேருதல் முதலியவற்றைப் பரிகரிக்கவும் தடுக்கவும் எலுமிச்சம்பழத்தைச் சிறந்த பரிகார வஸ்துவாக உபயோகிப்பது வழக்கம்.

விரைந்து செல்லும் பொருள்கள்

அ. ஸ்ரீநிவாசாசாரியார், பி. ஏ., எல். டி.

உலகத்துக் காணப்படும் பொருள்களில் சில மெதுவாக நகர்ந்து செல்லுகின்றன; ஆனால் வேறு சில மிக்க விரைவோடு பறந்து செல்லுகின்றன. தற்கால நாகரிகத்தின் பயன்களுள் ஒன்று யாதெனின், ஒருபொருள் செல்லும்வேகத்தை மேன் மேலும் அதிகப்படுத்திக்கொண்டு போவதே. இயற்கைப் பொருள் களின் குணங்களையும் இயற்கையிற் காணப்படும் சக்திகளின் இயல் பையும் ஆராய்ந்தறிந்து அவைகளை இயன்றவரையில் நமக்குப் பயன்படுத்த முயலும் பௌதிக நூல் விற்பன்னர் நாளுக்குநாள் அதிகவேகத்தோடு செல்லக்கூடிய கருவிகளையும் முறைகளையும் யூகத்தாற் கண்டுபிடித்து வருகின்றனர். இங்ஙிலையில், ஒரு பொருள் செல்லக்கூடிய விரைவிற்கு ஓர் எல்லைதான் உண்டோ என்ற வினு இயல்பாக எழுகிறது; அன்றியும் உலகத்துள்ள பொருள்கள் அனைத்தினும் மிக்க விரைவோடு செல்வது யாது என்ற வினுவும் எழுகின்றது. பொருள்களின் விரைவைப்பற்றி ஆராயும்போது, மிகத் தாமதமாகச் செல்லும் பொருள்களிலிருந்து தொடங்கி, படிப்படியாகச் சென்று, முடிவில் மிக்கவிரைவுள்ள பொருள்களைப் பற்றிச் சிந்திப்போம்.

தாமதப் பொருள்கள்

அசைந்து முன்செல்லும் பொருள்கள் அனைத்திலும் மிக்க தாமதமுடையவற்றுள் ஒன்று, மனிதனது கைக் கட்டைவிரலி லுள்ள நகம். அது நகரும் பொருள்களில் ஒன்ருே என்று பலர் கேட்கலாம். ஆனல் அது வளரும் பொருள்களில் ஒன்றல்லவா? அதன் வளர்ச்சி ஒரு செகண்டிற்கு ஒரு கஜத்தில் 50 கோடியில் ஒருபங்கு என்று கணக்கிடப்பட்டுள்ளது; இதனினும் சற்று விரைவாக வளர்வது மூங்கில் மரம்; இது ஒரு செகண்டிற்கு ஒரு கஜத்தில் (சுமார்) 4 லக்ஷத்தில் ஒருபங்கு உயரம் வளர்வ தாகக் காணப்படுகிறது. அதற்கு அடுத்தபடியாக விரைவுள்ள பொருளாவது, உயிர்ப்பிராணிகட்குள் மிக மெதுவாக நகரும் நத்தையென்பது. 'நத்தையைப்போல நகர்தல்' என்பது

ஆங்கிலத்தில் வழங்கும் ஒரு பழமொழி, அது ஒரு செகண்டில் ஒரு கெஜத்தில் 700-ல் ஒருபங்குதூரம் சுமாராகச் செல்லும். உயிர்ப் பிராணிகட்குள் உயர்ந்தவனான மனிதன் நடந்து செல்லுங்கால், $6\frac{1}{2}$ நிமிடங்கட்குள் ஒருமைல்வரை நடக்கக்கூடும்; அதாவது, ஒரு மணிக்கு $9\frac{1}{4}$மைல்வரை விரைவாக நடப்பான். அவன் ஓடுவானா கில், $4\frac{1}{4}$ நிமிடங்கட்குள் ஒருமைல் தூரம் ஓடக்கூடும்; அவ்வேகம் மணிக்கு $13\frac{1}{2}$ மைல் வீதம் ஆகும். சாதாரணமான தரைமீது ஒரு மனிதன் ஓடும்போது, அதனினும் விரைவாக ஓடுவதில்லை யென்றாலும், பனிக்கட்டிமீது சருக்கிச் செல்வதற்காக உபயோகிக்கும் ஒருவகைச் செருப்பை யணிந்து, பனிக்கட்டியால் மூடப் பெற்ற தரைமீது விரைந்து வழுக்கிக் கொண்டே போகுங்கால், அவன் $2\frac{1}{5}$ நிமிடங்கட்குள் ஒருமைல்தூரம் சருக்கிவிடுவான்; இந்த வேகம் விரைந்து செல்லும் புகைவண்டியின் வேகத்திற் பாதியாகும்.

விரைந்துசெல்லும் படகுகள்

அடுத்தபடியாக விரைந்து செல்வன, தண்ணீர்மீது செல் லும் படகுகளே. அவைகட்குள்ளும் மிக்க விரைவுள்ளன, நீர் மூழ்கிக் கப்பல்களை அழிக்கும் சில கப்பல்கள். கடலின்மீது மிதந்து செல்லும் படைக்கப்பல்களை நீர்மூழ்கிக்கப்பல்கள் அழிக்கும்; அக்கப்பல்களுக்கும் யமன்போன்று உலவும் கப்பல்கள் ஒரு மணிக்கு 48 மைல் வீதம் கடலைக் கிழித்துக் கொண்டு விரைந்து செல்லும். ஆகாய விமானங்களைப்போன்று சிறகுகள் அமைக்கப் பெற்று, அவைகளைப்போல் ஒரு வலிமையுள்ள யந்திரத்தில் தண் ணீரின்மீது விரைவாக ஓட்டப்படும் படகுகளும் உள; இம்மோட் டார்ப்படகுகள் நீரின் மீதோடும் எந்தக் கப்பலையும் தோணியை யும் வெல்லும் வேகமுடையனவாம். இத்தகைய படகு ஒன்று ஆற்று நீரை எதிர்த்தும் ஆற்றின்நீர் செல்லும் திசையிலுமாக மூன்று முறை மாறிமாறி விரைவாக ஓடியபோது, அதற்குச் சராசரி வேகம் $76\frac{1}{2}$ மைலாயிற்று. இதன்கண் அமைக்கப்பட் டிருந்த இரண்டு மோட்டார் யந்திரங்களுள் ஒவ்வொன்றும் 450 குதிரையாற்றல் உடையதாயிருந்தது. (ஒருமோட்டாரின் ஓட்டும் சக்தியை ஒரு குதிரையின் ஆற்றலோடு ஒப்பிட்டு, இத்தனை குதிரைகளின் ஆற்றலுக்குச் சமமானதென்று சொல்லுதல் மரபு.) ஒருமுறை போட்டிபோட்டுக்கொண்டு ஓடியபோது, இப்படகு 77 மைலுக்கு மேற்பட்ட வேகத்தோடு ஓடியதுமுண்டு.

மனிதனைச் சுமந்து செல்லும் பொருள்களில் மிக விரைவான வற்றுள் ஒன்று பனிக்கட்டிப் படகு எனப்படுவது. தண்ணீரின்

மீது செல்லும்போது ஏற்படும் தடையைக் காட்டிலும், வழவழப் பான பனிக்கட்டியின்மீது ஓடும்போது ஏற்படும் தடை மிகக் குறைவானது என்பது வெளிப்படை. இப்படகுகள் பனிக்கட்டி மீது வழுக்கிச் செல்வதற்கு ஏற்றவாறு செய்யப்பட்ட அடிப்பக் கத்தை உடையனவாய், பாய்மரங்கள் அமைக்கப்பெற்றனவாய், காற்றடிக்கும்போது அதே திசையை நோக்கி விரைந்து செல்லும் தன்மையனவா யிருக்கும். வேகமாக இயங்குதற்குத் தக்கவாறு முறைப்படி இயற்றப்பட்ட இத்தகைய படகுகள் ஒரு நிமிடத் திற்கு இரண்டு மைல் வீதம், அதாவது ஒரு மணிக்கு 120 மைல் வீதம் விரைந்து சென்றுள்ளன. ஆனால் சிறிய பிரயாணக் கப்பல் கள் கடலின்மீது செல்லுங்கால் சுமார் இருபது மைல் வேகத் தோடு செல்வதன்றி, அதற்கு மேற்பட்டு விரைவாகச் செல்வ தில்லை; பெருங் கப்பல்களுக்கும் 26 முதல் 30 மைல் வரைதான் வேகம் உண்டு.

தண்டவாளத்தின்மீது ஓடும் வண்டிகள்

இருப்புத் தண்டவாளங்கள் மீதோடும் புகைவண்டிகளின் வேகம், அவைகள் தோன்றிய காலமுதல் வரவர மிகுந்து வந்திருப் பது உண்மையாயினும், மணிக்கு நூறு மைலுக்குமேற் போயி ருப்பது அபூர்வந்தான். அதைவிட வேகமாகச் செல்லும் நீராவி யந்திரங்களை இயற்றுதல் இயலவில்லை என்பதுமட்டுமல்ல; அவ்வளவு வேகமாக வண்டிகளைத் தண்டவாளங்கள்மீது ஓட்டுதல் இலாபகரமான தொழிலாகுமா என்பதைப்பற்றிப் பெரிய நீராவி வண்டிகளை இயற்றும் நிபுணர்களும் சந்தேகம் கொள்கின்றனர். 1901-ஆம் ஆண்டில் ஒரு நீராவி வண்டித்தொடர் ஐந்து மைல் தூரம் அமெரிக்காவிற் சென்றபோது, மணிக்கு 120 மைல் வேகம் அதற்கு உண்டாயிற்றும். அமெரிக்கா தேசத்திலுள்ள பிரதான பட்டணங்களுக்கிடையே ஓடும் மிக துரிதமான நீராவி வண்டித் தொடர்களும் பொதுவாக 70, 80 மைல் வேகத்தை அடைவது உண்டென்றாலும், சராசரி வேகம் அதற்குக் குறைந்ததாகவே அமைகின்றது. பிரயாணிகளை ஏற்றிச்செல்லும் வண்டித்தொட ருக்கு மணிக்கு 60 மைல் வேகமே ஆபத்திற் கிடமில்லாத உயர்ந்த வேகமெனக் கருதப்படுதலின், பொதுவாக இவ்வேகமே சராசரி யாக மிக விரைவான நீராவி வண்டித்தொடர்கட்கும் ஏற்படு கின்றது.

மின்சாரத்தின் உதவியால் இயங்கும் வண்டித் தொடர்கள் பொதுவாக மணிக்கு 130 மைல் வேகத்திற்கு மிஞ்சிச் செல்வ தில்லை. ஜெர்மனியிலுள்ள பிரதானமான நகரில் ஓடும் மின்சார

வண்டித்தொடர்களின் வேகத்தைச் சோதித்துப் பார்த்தபோது, மணிக்கு 130 மைல் வேகமே உயர்ந்ததாகக் காணப்பட்டது.

மோட்டார்வண்டிகள் இதனினும் வேகமாக மனிதனை ஏற்றிச் சென்றுள்ளன; ஒருவர் தமது பந்தய ஓட்டத்திற்கெனத் தயாரித்த மோட்டாரில் ஒரு மைல் தூரத்தை 23 செகண்டுகட்குச் சற்றுக் கூடிய நேரத்திற் கடந்து சென்றாராம்; இவ்வேகத்தைக் கணக்கிடும் போது, மணிக்கு 156 மைல் வீதம் ஆகின்றது. தரையில் இதற்கு மிஞ்சிய வேகத்தோடு மனிதன் சென்றதில்லையாம்.

ஆகாய விமானங்கள்

தரையிலும் நீரிலும் செல்லும் வேகத்தைக் காட்டிலும் மிக்க வேகத்தோடு ஆகாயத்தில் சஞ்சரித்தல் இயல்பே; ஏனெனில், ஒரு பொருள் தரைமீதும் நீரின்மீதும் செல்லும்போது உரசுவதனால் ஏற்படும் தடை ஆகாயத்தில் அப்பொருள் செல்லும்போது உண்டாகும் தடையைவிடக் குறைவாயிருத்தல் வேண்டுமல்லவா? சில ஆண்டுசட்கு முன்பு நடந்த ஆகாய விமானப் பந்தயப் போட்டியொன்றில், ஒரு பிரஞ்சு மானுமி சுமார் ஒருமணி நேரத்திற்குள் $168\frac{1}{2}$ மைல் தூரம்வரை சென்றார். அதற்குப் பின்னர் ஓர் ஆகாயவிமானி மணிக்கு 193 மைல் வேகத்தோடு பறந்தனர். தற்காலம் மணிக்குச் சுமார் 240 மைல் வேகத்தோடு பறக்கும் விமானங்களும் உள்ளன என்பது தெரியவருகின்றது.

அதிக விரைவுள்ள பொருள்கள்

இனி, இயற்கைப் பொருள்கள் சிலவற்றின் வேகத்தையும் கவனிப்போம்: இடியிடிக்கும்போதும் நாம் ஒருவர்க்கொருவர் பேசும்போதும் ஒலிகள் எழுகின்றனவல்லவா? இவ்வொலி நம்மைச் சூழும் வாயுவில் எழும் அலைகளின் பயனால் உண்டாவதொன்றே; அந்த அலைகள் எங்கும் பரவி நமதுகாதில் விழும்போதே ஒலியைப் பற்றிய உணர்ச்சி உண்டாகின்றது. குளத்தில் கல்லை எறியும்போது, நீரின்மீது அலைகள் எழுந்து வட்டமாக எல்லாப் பக்கங்களிலும் பரந்து செல்வதுபோல், ஒலியலைகளும் ஓரிடத்தினின்று கிளம்பி மேலும் கீழும் எண்டிசைகளிலும் பரவுகின்றன. இவ் வலைகள் வாயுவில் எவ்வளவு வேகத்தோடு செல்கின்றன என்பதை நிபுணர்கள் சோதித்து அளந்துள்ளனர். இவர்களுடைய ஆராய்ச்சியின்படி, ஒலியலை ஒரு செகண்டிற்கு 1100 அடி வீதம், அதாவது 1 மணிக்கு 750 மைல் வீதம் விரைந்து செல்கின்றது; மிக்க வேகத்தோடு செல்லும் மனிதன் வாயுவேகத்தோடு செல்

கிறான் என்பது நமது வழக்கம். வாயுவின் வேகம் ஒலியின் வேகத்தினும் மிக்கதே. பிரசண்டமாருதம் ஒன்று (அதாவது பெரும் புயற்காற்று ஒன்று) வீசும்போது, ஒரு செகண்டுக்கு 585 கஜம் வீதம், அதாவது மணிக்குச் சுமாராக 1200 மைல்வீதம் வாயு விரைந்து செல்கின்றது. இப்பூமியில் இதனினும் மிக்க விரைவுடன் பாய்ந்து செல்லக்கூடிய செயற்கைப் பொருள் பீரங்கியின் வாயினின்று வெடிமருந்தின் உதவியாற் கிளம்பிப் பாயும் குண்டு ஒன்றுதான். இது ஒரு செகண்டிற்கு 975 கெஜம் அதாவது மணிக்கு 2000 மைல் வேகத்தோடு வெளிச்செல்லக் கூடியது. மிக்க விரைவோடு துப்பாக்கியினின்று வெளியேறும் குண்டும் ஒரு செகண்டுக்கு ஒருமைல் வேகத்திற்கு அதிகமாகச் செல்வதில்லை; அதாவது, ஒரு மணிக்கு 3600 மைல் வேகத்திற்கு மிஞ்சிய வேகம் ஒரு குண்டிற்குக் கிடையாது.

வெடிமருந்தின் சக்தியால் வெளியேற்றப்படும் குண்டினும் மிக்கவிரைவாகச் செல்லும் பொருள் ஒன்று நமக்கு இருப்பிடமாகும் பூமியேயாயினும், இதனை அசையும் பொருளாக அறிபவர் சிலரே. கண்ணிற்கு அசைவற்றதாகத் தோன்றும் இப்பூமி சூரியனை உண்மையாகச் சுற்றி வருவதனாலேதான், சூரியன் ஆகாயத்தில் மாதத்திற்கு ஓர் இராசிவீதம் நகர்ந்து வருவதாகத் தோன்றுகிறது. சூரியன் அஸ்தமித்ததும் வானத்தில் மேற்கே அடிவாரத்தில் தோன்றும் நக்ஷத்திரம் எதுவென்பதை இன்று கவனித்துவிட்டு, ஒருமாதம் கழிந்தபின் அதேஇடத்தில் சூரியன் மறைந்ததும் இரவில் தோன்றும் நக்ஷத்திரம் எது என்பதை நோக்கினால் இந்த உண்மை புலப்படும். சூரியன் மேஷராசிக்கு வருடத்திற்கு ஒருமுறை வருவதன் காரணம், பூமி சூரியனை ஒரு முறை சுற்றி வருவதற்கு ஓராண்டு பிடிப்பதே என்று வானநூல் வல்லார் துணிகின்றனர். இவ்வாறு சுற்றிவரும் வீதியின் நீளத்தைக் கண்டு பிடித்து, பூமியின் வேகத்தைக் கணக்கிடுங்கால், மணிக்கு 65533 மைல் வேகம் கிடைக்கின்றது.

பூமியிலுள்ள பொருள் ஒவ்வொன்றும் அணுக்களால் ஆக்கப்பட்டுள்ளது; அவ்வணு ஒவ்வொன்றையும் பிரித்துப் பார்க்குங்கால், மத்தியிலுள்ள ஒரு நுண்ணிய பகுதியைச் சுற்றி மிகச் சிறிய பகுதிகள் பல சுழன்று வருவது தென்படுகிறது. அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் உண்டு என்பர் நமது முன்னோர். இவ்வண்டத்து ஒரு சூரியனைச் சுற்றிப் பலகிரகங்கள் சுழன்று வருவது போல, ஓர் அணுவிற்குள்ளும் ஒரு மத்திய பகுதியைச் சுற்றிப் பல சிறிய பகுதிகள் சுழன்று வருகின்றன. இவ்வாறு சுழலும்

பகுதிகளை மின்னுருக்கள் (*Electrons*) என்றழைப்போம்; அவைகள் மின்சார சக்தியின் உருவாய் அமைந்துள்ளன என்று தெளியப் படுதலின், அப்பெயர் அவைகட்குப் பொருந்தும். இந்த மின்னுருக்கள் ஒவ்வொன்றும் ஒரு செகண்டிற்கு 10000 மைல் தூரம் விரைந்து செல்லும் என்று நிபுணர்கள் நிதானித்துள்ளார்கள்.

ஆயினும், இதனினும் வேகமான இயற்கைப் பொருள் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது யாதெனின் ஒளியலையே. நீரில் அலைகள் பரவுவதுபோலவும், வாயுவில் ஒலியலைகள் பரவுவது போலவும், ஆகாசவீதியில் ஒளியலைகள் எங்கும் பரந்து செல்கின்றன என்று பௌதிக நூலார் நிலைநாட்டியுள்ளார்கள். சூரியனது ஒளி பூமியைவந்து சேர்வதற்கு $8\frac{1}{4}$ நிமிடங்கள் சுமாராகப் பிடிக்கின்றன என்று அந்நூல் விற்பன்னர் கணக்கிட்டுள்ளனர். இதன் பொருள் யாதெனில், யாதானும் ஒருமாய காரணத்தால் ஒளியைச் சொரியும் சூரியன் திடீரென அணைந்து ஒளியற்றதாக ஆகிவிடுமாயின், சுமார் எட்டு நிமிடங்கட்குப் பின்னர்த்தான் இப்பூமியில் இருள் நிறையும். ஒளியின்வேகம் ஒரு செகண்டுக்கு 186000 மைல் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. உலகத்திலுள்ள எப்பொருளுக்கும் இதனினும் உயர்ந்த வேகம் உண்டாதல் இயலாது என்று அறிஞர் துணிந்திருக்கின்றனர்; ஆதலின் இதுவே அனைத்தினும் உயர்ந்த வேகமாகும். இவ்வேகத்தை மனோவேகத்திற்கு ஒருவாறு ஒப்பிடலாம். ஒளியலையின் வேகமே மின்சார அலையின் வேகமும். கம்பியில்லாத் தந்தியிலும் 'ரேடியோ' என்னும் கருவியிலும் மின்சார அலைகளே விசித்திரமான செயல்களை நிகழ்த்தி வருகின்றன. இவ் வலைகள் (ஒளியலைகளைப்போல்) 25000 மைல் சுற்றளவுள்ள நமது பூமியை ஒரு செகண்டிற்குள் ஏழுதடவை சுற்றிவரும் வேகத்தை யுடையனவாம். மனிதர்க்குத் தெரிந்தவரை, இவ்வேகமே எல்லாவற்றிலும் உயர்ந்த வேகமாகக் கருதப்படுகிறது. இன்னும் எட்டி யோசிக்குங்கால், ஒளிவேகத்தையும் மின்சார வேகத்தையுமே இவ்வுலகில் ஒரு பொருளிற்கு ஏற்படக் கூடிய வேகத்திற்கு எல்லையென்று கூறவேண்டி யிருக்கிறது என்றும் நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆக, மனிதனது கைக் கட்டைவிரலின் வளர்ச்சி வேகத்தை ஒருபக்கத்து எல்லையாகவும் ஒளியின் வேகத்தை மற்றொரு பக்கத்து எல்லையாகவும் கொண்டால், இவ் வுலகத்துள்ள பொருள்களின் வேகங்கள் யாவும் அந்த இரண்டு எல்லைகட்கும் இடையில் உள்ளனவேயாம்.

தாமஸ் எடிசன்

முத்து, பி. ஏ. (ஆனர்ஸ்)

"மானிடன் ஆயுதம் உபயோகிக்கும் ஒரு மிருகம்" என்று ஆங்கிலப் பேராசிரியர் கார்லைல் தமது 'ஸார்ட்டர் ரிஸார்ட்டஸ்' என்ற நூலில் எழுதியுள்ளார். இது மிகவும் பொருத்தமான கூற்றே. மனிதனைவிட உடல்வலியுள்ள மிருகங்கள் பல உள்ளன. மிகவும் அற்பமான கொசு, மூட்டைப்பூச்சி முதலியபிராணிகள்கூட மனிதனை அலட்சியமாகக் கடிக்கின்றன. வலைகொண்டு கொசுவைத் தடுக்கவேண்டியிருக்கிறது; 'பிலிட்' அல்லது வேறு பூச்சி விஷத்தைக் கொண்டு மூட்டைப்பூச்சியை அழிக்கவேண்டியிருக்கிறது. தேகவலிமையொன்றைக்கொண்டே மனிதசமூகம் தற்காலப்பெருமையை யடைந்திருக்க இயலாது. ஆயுதங்களை ஆக்கி உபயோகிக்கவல்ல அறிவினாலேதான் ஏனைய உயிர்ப்பிராணிகளை மனிதன் அடக்க முடிந்தது.



காட்டு மிருகங்களிடமிருந்து தங்களைக் காப்பதற்கு ஆதிகால மனிதர் கற்களினாலும், மரங்களினாலும் சில முரட்டு ஆயுதங்களைச் செய்துகொண்டனர். அதுமுதற்கொண்டு இவ்வுலகில் பலவகையான ஆயுதங்கள் தோன்றின. ஆயுதங்களைச் செய்ய உபயோகிக்கப்படும் இயற்கைப் பொருள்களின் குணங்களையும் மனிதர் கற்றனர். பல்லாயிரக்கணக்கான வருடங்களாக லக்ஷக் கணக்கான மனிதர்களால் செய்யப்பட்ட முயற்சியே இப்போதைய மனிதசமூகத்தின் உயர்நிலைக்குக் காரணம்.

மனிதசமூகத்திற்கு உபயோகமான கருவிகளை அமைத்தவர்களில், அமெரிக்காநாட்டில் ஒஹியோ மாகாணத்தில் மிலான் நகரில் கி. பி. 1847-ஆம் வருஷம் பிறந்த **தாமஸ் ஆல்வா எடிசன்** முக்கியமானவர். ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ந்தாரேயன்றி அங்குப்

போதிக்கப்பட்ட படிப்பில் அவருக்கு ஊக்கம் உண்டாகவில்லை. வீட்டில் அவருடைய அன்னை கல்வி சிறிது போதித்துவந்தாள். தமக்கு நூதனமான கருவிகளையோ விஷயங்களையோ கண்டால் அவைகளைப்பற்றி நன்கு அறிந்தோர்களைப் பல கேள்விகள் கேட்பார். இயற்கைப் பொருட்சாஸ்திர ஆராய்ச்சிகளில் அவருக்கிருந்த விருப்பம் சிறு வயதிலேயே வெளிப்பட்டது. ஓர் இருப்புப் பாதை வண்டித்தொடரில் தினசரிப்பத்திரிகை விற்கும் பையனாக அவருடையவாழ்க்கை தொடங்கிற்று. வண்டியிலேயே சில பொருள்களைச் சேகரித்துக்கொண்டு சில ஆராய்ச்சிகளைச் செய்து வந்தார். ஒருநாள் அவ்வாராய்ச்சியால் அருகிலிருந்த பொருள்கள் தீப்பற்றிக்கொண்டன. கோபங்கொண்ட வண்டிக்காப்பாளர் அவரை வண்டியைவிட்டு இறக்கிவிட்டனர்.

அவ்விருப்புப்பாதையில் தந்திக் குமாஸ்தாவாக இருந்த ஒருவருடைய குழந்தையை ஓர் ஆபத்திலிருந்து எடிசன் காப்பாற்றியதால் அக்குமாஸ்தா மிக்க நன்றியறிதலுடன் தந்தியடிக்கும் விதத்தையும் அக்கருவியின் இலக்கணங்களையும் தமக்குத் தெரிந்தவரையில் அவருக்குக் கற்பித்தார். பலவிடங்களில் தந்திக் குமாஸ்தாவாகவிருந்து தேர்ச்சிபெற்று நியூயார்க்கு நகரம் வந்தடைந்தார்; "நியூயார்க்கு கோல்டு அண்டு ஸ்டாக்கு தந்திக்கம்பெனி"யாரிடம் வேலையிலமர்ந்தார். தந்தி கண்டுபிடித்துச் சில வருடங்களேயாகியிருந்தமையால் அக்காலக் கருவிகள் இக்காலத்தவைபோல உயர்ந்தவையல்ல; அடிக்கடி வேலை செய்யாமல் நின்றுவிடும். ஒருநாள் எடிசன் சேர்ந்த நிலயத்தில் கருவிகள் வேலை செய்யாமல் தடைப்பட்டன. அங்கிருந்த பலரும் முயற்சிசெய்தும் கருவிகள் சீர்பெறவில்லை. அருகேயிருந்த எடிசன் முதலாளியின் உத்தரவின்மேல் இரண்டே நிமிடங்களில் எல்லாக்கருவிகளையும் ஒழுங்குபடுத்திவிட்டார். எடிசனை மிகவும் மெச்சிய முதலாளி, அந்தக் காரியாலயத்தின் நிருவாஹகராக அவரையே நியமித்துச் சம்பளத்தை மிகவும் உயர்த்தினர்.

உலகத்தோருக்குப் பயன்படக்கூடிய பல கருவிகளைக் கண்டுபிடித்தலையே தம்முடைய வாழ்க்கையின் இலட்சியமாக எடிசன் கொண்டார். பணக்கஷ்டம் இப்பொழுது நீங்கியதால் ஆராய்ச்சிகளில் வெகு தீவிரமாக இறங்கினர். தந்திக் கருவியில் பலவித முன்னேற்றங்களைச் செய்தார். அனுப்பப்படும் செய்தியைத் தானுகவே ஒருகடிதத்தில் குறித்துக்கொள்ளும் ஒரு தந்திக்கருவியுண்டு. இதற்கு "ஆடோமாடிக் தந்தி" (*Automatic Telegraph*) என்று பெயர். சாதாரணத் தந்தியிற் காட்டிலும் இதில் வேகமாகச்

செய்திகளை அனுப்பலாகும். எடிசன் காலத்தில் இத்தந்தியின் மூலமாக நிமிடத்திற்கு இருநூறு வார்த்தைகள் வீதமே அனுப்ப முடிந்தது. இராப்பகலாகப் பலநாட்கள் படித்து ஆராய்ச்சி செய்து நிமிடத்திற்குச் சுமார் மூவாயிரம் வார்த்தைகளை அனுப்பும் வகையை அவர் கண்டுபிடித்தார். தாம் அமைத்த நூதனக் கருவிகளுக்கெல்லாம் பாதுகாப்புப் (*Patent*) பெற்றுக்கொண்டார்.

டெலிபோன் (*Telephone*) கருவியை முதலில் உபயோகப் படும் வண்ணம் சீர்படுத்தியமைத்தவர் கிராஹம்பெல் (*Graham Bell*) என்ற விஞ்ஞானசாஸ்திரி. அளிப்புக்கருவியும் (*Transmitter*) ஏற்குங்கருவியும் (*Receiver*) ஒரே மாதிரி அமைக்கப் பெற்றிருந்ததால் பெல் கண்டுபிடித்த டெலிபோனை வெகுதூரங்களுக்கு உபயோகித்தல் கூடாமலிருந்தது. கரியை உபயோகித்து ஒரு நேர்த்தியான அனுப்புக் கருவியை (*Carbon Transmitter*) எடிசன் அமைத்தார். இக்கருவியையும் பெல் கண்டுபிடித்த ஏற்குங் கருவியையும் உபயோகித்ததால் டெலிபோன் நன்றாக அமைந்தது. பலருக்குப் பயன்படுவதைக் கருதி அக்கருவியின் பாதுகாப்பைப் பெல்லுக்கு எடிசன் விற்றுவிட்டார்.

மின்சார ஆர்க்கு விளக்குகளே அக்காலங்களில் இருந்தன. அவைகள் மிகவும் ஒளியோடிருந்தமையால் வீடுகளில் உபயோகிக்கத்தகுதியற்றிருந்தன. மின்சாரத்தை ஒரு மெல்லிய கம்பியில் ஓட்டினால் சூடுண்டாகும்; கம்பி மிக மெல்லியதாகவிருந்தால் சூடு மிக அதிகமாகிக் கம்பி ஒளிவிடக்கூடும். பல உலோகங்களைக் கம்பியாக இழுத்து அவர் உபயோகித்தார்; அவைகள் சரியாக உழைக்கவில்லை. கரியையே கம்பியாகச் செய்து பிராணவாயு நீக்கப்பட்ட ஒரு கண்ணாடிக்கூண்டுக்குள் அதை வைத்து மின்சாரத்தை ஓட்டினார். பலமணிநேரங்கள் அக்கரிக்கம்பி ஒளியுடன் பிரகாசித்தது. இவ்விளக்கு அவருக்குத் திருப்தியாகவிருந்தது. இம்மாதிரியான விளக்குகள் வீடுகளுக்கு உபயோகப்பட்டன. இக்காலத்தில் "டங்ஸ்டன்", "ஒஸ்மியம்" முதலிய அரிய உலோகக்கம்பிகளையே இத்தகைய விளக்குகளில் உபயோகிக்கின்றனர்.

சென்னைபோன்ற நகரங்களில் ஒரு வீதிவழியாகப் புறப்பட்டால், ஒரே காலத்தில் பலகடைகளிலிருந்தும் கிராமபோன் சங்கீதங்கள் தோன்றி நம்மை வருத்துவதால் அக்கருவியைக் கண்டுபிடித்தவரைச் சிற்சில சமயங்களில் சபிக்க எண்ணியிருக்கிறோம். ஆயினும் மிதமாகவும் ஏற்றகாலங்களிலும் அனுபவித்தால் கிராமபோன் ஒரு நல்ல பொழுதுபோக்கே. சங்கீத மகாவித்துவான்களுடைய குரல்களையும் பதிப்பித்துக் கொள்ளலாம். அக்கருவியை

உபயோகப்படும் விதமாக முதலில் அமைத்தவர் எடிசனே. அவர் கண்டுபிடித்த கருவிக்கு 'போனகிறுப்' என்று பெயர். தற்செயலாக நடந்த ஒரு சம்பவத்தால் அவர் இக்கருவியை அமைக்க முடிந்தது. தந்தியில் உபயோகப்படும் குறிகள் மேடாகச் செதுக்கப்பட்டிருந்த ஒரு தகட்டால் ஒரு கம்பியை ஆட்ட முயன்றுகொண்டிருந்தார். அப்பொழுது அக்கம்பி பலவித ஒலிகளைச்செய்தது. இதில் எடிசனுடைய கவனஞ்சென்றது. மேடு பள்ளங்களுடைய ஒருதகட்டால் இவ்வித ஒலிகள் உண்டாக்கப்படுவதால் எதிர்மாறாக ஒலியால் ஒருதகட்டில் மேடு பள்ளங்களை உண்டாக்க முடியுமாவென்பதைச் சோதிக்க எண்ணினார். யாதானுமொருபொருள் மிக விரைவாக ஆடி அருகேயுள்ள வாயுவின் அணுக்களையும் ஆடச்செய்வதே ஒலிக்குக் காரணமாகும். வாயுவின் அணுக்களின் ஆட்டத்தால் ஒரு மெல்லிய தகட்டையும் அதனுடன் பிணைக்கப்பட்டிருந்த ஓர் ஊசியையும் ஆட்டச்செய்தார். அவ்வூசி ஒரு மெழுகு தடவிய கடிதத்தில் பட்டுக்கொண்டிருந்தது; கடிதம் ஓர் உருளையில் சுற்றப்பட்டும் அவ்வுருளை தன்னைத் தானே சுற்றிக்கொண்டும் மெதுவாக ஒரு பக்கமாக நகர்ந்து கொண்டும் இருந்தது. இந்த உபாயத்தால் வளைந்து வளைந்து செல்லக்கூடிய ஒருகோடு அக்கடிதத்தில் வரையப்பட்டது. அவர் சோதனைக்கு எடுத்துக்கொண்ட ஒலி ஒரு நண்பர் பாடிய பாட்டாகும். உருளையை முன்னிருந்த இடத்தில் வைத்து ஊசியைக் கோட்டின் ஆரம்பத்தில் வைத்து அதேவேகத்துடன் உருளையைச் சுற்றியதும், மெல்லிய குரலுடன் முதலில் பாடப்பட்ட பாட்டே வெளிவந்தது. இப்பொழுதுள்ள கிராமபோன் இதே முறையில் செய்யப்பட்டாலும், உருளைக்குப்பதில் தட்டையான தகடுகள் உபயோகப்படுகின்றன. முதலில் பதிக்கப்பட்ட தகட்டைப்போல எண்ணிறந்த பிரதிகளையும் எடுக்கின்றனர்.

சினிமா என்ற ஓடும் படக்காட்சிக்கும் எடிசன் அடிகோலினார். இவர் கண்டு பிடித்த கினிடாஸ்கோப் (*Kinetoscope*) என்ற ஒருகருவியில் அசையும் பொருள்களைச் செகண்டிற்குப் பதினாறுக்குக் குறையாத வேகத்துடன் எடுத்த போட்டோப்படங்களை அதேவேகத்துடன் தொடர்ச்சியாக ஒரு பிரகாச ஒளிக்கு முன்வரச் செய்யப்படும். இவ்வொளிக்கிரணங்கள் அப்படங்களைக்கடந்து சில பூதக்கண்ணாடி (*Lens*)கள் வழியாகச் சென்று ஒரு திரையில் விழுந்து படம்பிடிக்கப்பட்ட பொருள்களை அவைகள் அசைந்து கொண்டிருந்தவாறே காட்டும்.

மேல் ஒருவாறு விளக்கப்பட்டவை எடிசனால் அமைக்கப்பட்ட முக்கியமான சில கருவிகள். இவைகளேயன்றிப் பல சிறிய கருவிகளையும் இவர் கண்டுபிடித்துள்ளார்; இவைகளை விரிப்பிற் பெருகும். தமக்குக் கிடைத்த செல்வத்தைக்கொண்டு விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சிக்குச் சாதனமான இடங்களை அமைத்தார். அறிவுள்ள இளைஞர்களைத் தெரிந்தெடுத்து ஆராய்ச்சித்துறையில் பழக்க வசதிகளைச் செய்தார். 1931-ஆம் வருஷம் அவர் அக்டோபர் மாதம் உயிர்துறந்தார். சாஸ்திர ஆராய்ச்சியில் ஈடுபடுவோர்க்கெல்லாம் இருக்கவேண்டிய ஆர்வமும் விடாமுயற்சியும் இவரிடம் சிறந்து விளங்கின.

மிருகங்களின் பாஷை

பிராணிகள் தங்கள் தங்கள் இனத்துக்கேற்ற சில சப்தங்களை வெளியிட்டுத் தங்கள் கருத்துக்களை வெளியிடுகின்றன. நம்முடைய நாட்டுப் பழங்கதைகளில் சில அறிஞர்கள் மிருகபாஷையை அறிந்திருந்தார்களென்ற செய்தி சொல்லப்படுகிறது. பாரிஸ் நகரத்திலுள்ள நாடகாசிரியரான காம்ரில் டி. அனுன்வியா என்பவர் நாயின் பாஷையைப்பற்றி ஆராய்ச்சி செய்து வருகிறார். அவர் நாய்ப்பாஷையின் ஒரு சிறு அகராதி வெளியிட்டிருக்கிறார்; குரங்குகளுக்கு ஒருவகைப் பாஷை இருப்பதாகப் பல நிபுணர்கள் ஆராய்ந்து கூறியிருக்கின்றனர். பூனையின் பாஷயை ஆராய்ந்த ஒரு பேரறிஞர் 32 வார்த்தைகள் வரையிற்கண்டு பிடித்திருக்கிறார். காலஞ் சென்ற தேசீய கவியாகிய சி. சுப்பிரமணிய பாரதியார் காகங்களின் பாஷையை ஆராய்வதில் ஊக்கமுடையவராக இருந்தார். தம்முடைய ஆராய்ச்சியைப் பற்றி அவர் பல வருஷங்களுக்கு முன்பு ஒரு தமிழ்ப் பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.

சரித்திரம்

ஹெட்டி க்ரீன்

[*Hetty Green*—1825—1906.]

சி. வி. சுப்பிரமணியன், பி. ஏ., (ஆனர்ஸ்.)

[தற்சமயம் உலக மெங்கும் பரவியிருக்கும் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் மனிதனின் அறிவின்மையே. செல்வ மென்பது யாது என்று மனிதன் இன்னும் உணரவில்லை. அவனுடைய நாணய மாற்றுக் கொள்கைகளும் முறைகளும் இன்னும் அறிவு நிரம்பாப் பழங்காலக் கொள்கைகளையே பின்பற்றுகின்றன. பணம் செல்வமல்ல; அதைச் செல்வமென்று கருதுவது ஓர் மூட நம்பிக்கை என்பதை நமக்குச்சில கோடீசுவரர்களின் சரிதங்கள் திண்ணென விளக்கிக்காட்டும். அவர்கள் பொருள் எவ்வாறு ஈட்டினார்களென்றும், எங்ஙனம் அவற்றை மனிதனுக்குப் பயன்படுமாறு உபயோகித்தார்களென்றும் சிறிது ஆராய்வோம். அவ்வித ஆராய்ச்சி ஒன்றே நமக்குச் செல்வம் என்றால் என்ன? செல்வம் சேமிக்கும் வழிகள் யாவை? அதை எவ்வாறு உபயோகித்தால் மனிதனுக்குப் பயன்படும், நாட்டின் செல்வமும் வளரும்? என்னும் பல அரிய உண்மைகளை எடுத்துக்காட்டும்.]

செல்வத்தைச் சேகரித்து அதனை உபயோகப்படுத்தத் தெரியாதவர் மிகச் சிலரே. அச்சிலரில் ஹெட்டி க்ரீன் என்னும் மாதும் ஒருத்தி. அவள் 1825-ம் வருஷம் 'ந்யூ பெட்போர்ட்' என்னும் இடத்தில் பிறந்தவள். அவள் இறக்குமுன் சுமார் முப்பது லக்ஷம் பவுன் சேகரித்திருந்தாள்.

அவளுக்குப் பணத்தாசை அதிகமாகப் பிடித்திருந்த போதிலும் வீட்டு வேலைகளிலும் மற்ற விஷயங்களிலும் கவனம் செலுத்தாமல் இருக்கவில்லை. பிறருடன் சிற்சில வேளைகளில் சல்லாபமாயிருந்த போதிலும் தன் காரியத்தில் கண்ணுங் கருத்துமாகவே இருந்தாள். சிறு வயதிலிருந்தே லோப குணம் அவளிடம் குடி கொண்டிருந்தது. நாளாக ஆக அக்குணந்தான் மேலோங்கிற்று. சுகமென்பதையே அனுபவித்தறியாத அவள், பொறுக்க

முடியாத குளிர் காலங்களிலும் பத்திரிகைத் துணுக்குகளையே ஆடையாக உபயோகித்தாள். வயிறாரவும் உண்ணமாட்டாள். நல்ல வீடுகளில் வசிக்கவும் அவள் பிரியப்பட்டாளில்லை. அரசாங்க வரிகளைக் கொடுக்க இஷ்டப்படாமல், மோசக்கருத்துடன் வெவ்வேறு சிறுசிறு இராஜ்யங்களுக்குச் சென்று ஒளிந்து கொள்வாள். பணப்பேயும் பொறாமைப் பேயுமே அவளிடம் அதிகமாகத் தலைகாட்டத் தொடங்கின. இரக்கமற்ற நெஞ்சினளான அவள், தன் தொழிலிற் குறுக்கிட்டவர்களை வஞ்சம் தீர்த்துக் கொள்ளப் பின் வாங்கினளில்லை. இக்காரணம் பற்றியே அவளிடம் அன்பெனும் பாசம் அறவே ஒழிந்திருந்தது. அவள் சுற்றம் சிறிதும் பேணவில்லை. அவள்பாற் சிக்கி அல்லற் பட்டு மானமிழந்தோர் பலர். தான் மணந்த மணாளனையும் மீளாத்துயரத்தில் அவள் வீழ்த்தினளென்றால் என்னே பணப்பேய் செய்யும் கொடுமை! ஹெட்டியின் தகப்பன் சிக்கனத்தைக் கடைப்பிடித்த ஓர் கப்பல் வியாபாரி. சிறுவயதில் ஹெட்டி மற்றப் பெண்களை விட அழகில் குறைந்தவளாக இருக்கவில்லை. ஆனால் எப்பொழுதும் அவள் முகம் சிடுசிடுப்பாகவே இருக்கும். தன் தாயாருக்குத் தொந்தரவு கொடுப்பதென்றால் அதிக சந்தோஷம். உலக நடவடிக்கையாவது சிறிது பழக இடமுண்டென்றெண்ணி சிறுவயதிலேயே ந்யூயார்க் (*New York*) கிற்கு அவள் பெற்றோர் அவளை அனுப்பினர். செலவிற்கும் 1200 தாலர்கள் (*Dollars*) கொடுத்திருந்தனர். ஆனால் அப்பணத்தைச் செலவிட மனமின்றி, அதை ஒன்றிற்குப் பத்தாகப் பெருக்க எண்ணி அதை ஓர் நிதியில் (*Bank*) அவள் சேமித்தாள்.

ஹெட்டிக்கு அவள் தகப்பனாரிடமிருந்து பத்து லக்ஷம் தாலர்கள் கிடைத்தன. அவள் அத்தையும், தன் சொத்தில் ஒரு சிறுபாகமான 5 அல்லது 6 லக்ஷம் தாலர்களை அவளுக்கே விட்டுச் சென்றாள். பேராசை பிடித்த ஹெட்டியின் மனம் அத்துடன் திருப்தி அடையுமா? தன் அத்தையின் முழுச் சொத்தையும் அபகரிக்கத் தூர்எண்ணங் கொண்டாள். அதற்காகப் பொய்யாகக் கையொப்பமிடல் முதலான சட்ட விரோதமான காரியங்களையும் செய்யப் பின் வாங்கவில்லை. எவ்வளவு முயன்றும் அவள் முயற்சி பயனற்றதாயிற்று.

தாங்கள் செய்த குற்றத்தவறுகளின் அவமானத்தைச் சகிக்க முடியாமல் ஹெட்டியும் அவள் புருஷனும் சிறிது காலம் லண்டனில் தலை மறைவாகக் காலங் கழிக்கலாயினர். அங்கும் ஹெட்டி, 'கழைக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்' என்றபடி

பணம் சேகரிப்பதிலேயே கண்ணும் கருத்துமா யிருந்தாள். ஒன்றை இரண்டாக்குவதே அவள் நோக்கம். சர்க்கார் கடன் பத்திரங்களை அதிகமாக வாங்கலானாள். அவள் கணவனோ மிக்க யூகசாலியான போதிலும், வியாபார முறைகளில் அதிகத் தேர்ச்சி பெற்றவனான போதிலும், சேகரிப்பதை யெல்லாம் அளவு மீறிச் செலவிடுதலிலேயே நாட்டமுள்ளவன். பொருள் விரய மாவது அவனுக்கு ஒரு பொருட்டல்ல. ஹெட்டியும் அவனும் இவ்விஷயத்தில் மிக முரண்பட்டனர். புருஷன் அதிக ஊதாரியா யிருந்தும் ஹெட்டி முதல் வருஷத்திலேயே 15 லக்ஷம் தாலர்கள் சேர்த்தாள்.

தம்பதிகள் இருவரும் 1874-ம் வருஷம் தங்கள் ஜன்ம பூமிக்கே திரும்பினர். அமெரிக்காவில் அப்பொழுதிருந்த நிலைமை யும் ஹெட்டியின் எண்ணத்திற்கேற்றதாகத் தோன்றிற்று. ஆவ லென்னும் பெருந்தீ சுடர் விட்டெரிந்தது. அதற்கு அனுகூல மாகவே நாட்டில் விலை வாசிகளெல்லாம் மிகச்சரஸமாய் மலிந்து கிடந்தன.

அக்காலத்தில் ரயில்வே பங்குகள் (*Railway Stocks*) வாங்குவது அதிக லாபத்தை அளிக்கக்கூடியதா யிருந்தது. அவை களை வாங்குவதிலேயே ஹெட்டி தன் கவனத்தைச் செலுத்தினாள். மற்றக் கைத்தொழிற் பங்குகள் (*Industrial Stocks*) வாங்கு வதில் அவள் மனது சிறிதேனும் செல்லவில்லை. மலிவான ரயில்வே பத்திரங்களை (*Bonds*) வாங்கினால் தானே விலை ஏறும் பொழுது அவைகளை அதிக விலைக்கு விற்று மிக்க ஊதியம் அடை யலாம்? பணத்தைச் செலவழிப்ப தென்றால் அவள் இரத்தக் கண்ணீர் சொரிவாள். தான் சேகரிப்பதை யெல்லாம் தன் புருஷன் வீணாக்குவது அவளுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. தம் பதிகள் இருவரும் இம்மாதிரி முரணுற்ற கொள்கையினராயிருக் கும் வரையிலும் இல்லறச் சகடம் அமைதியுடன் எவ்வாறு நடைபெறும்? தன்னை மணந்தோனுக்குத் தன் சொத்துகளின் மேல் உள்ள பாத்யதையை அறவே நீக்கிவிட்டாள். அவனு டைய சொந்த சொத்தாகிய 10 லக்ஷம் தாலர்களையும், தனியே பிரித்து அவனிடமே ஒப்படைத்துவிட்டாள். சகல பாந்தவ்யங்க ளையும் முற்றும் ஒழித்தனள். அவனும் தன் ஊதாரித்தனத்தின் பய னைத் தன்னுடைய அந்தியகாலத்தை ந்யூயார்க்கில் ஏழையாக ஆண்டி போலக் கழித்தனன்.

தன் புருஷன் கதி இப்படியாக ஹெட்டியோ பண உலகத் தில் சிறந்து விளங்கினாள். எந்த நிதியில் (*Bank*) வேண்டு

மானாலும் அவளைப் பார்க்கலாம். எப்பொழுதும் கையில் ஒரு கத்தைப் பத்திரங்கள் இல்லாமல் இருக்கமாட்டாள். தன் காரியங்களையும் அந் நிதிகளின் குமாஸ்தாக்களைக்கொண்டே பொருட் செலவு சிறிதும் இல்லாது முடித்துக் கொள்ளக் கூடிய அவ்வளவு திறமை வாய்த்திருந்தாள். எவ்வித அட்டகாசஞ் செய்வதற்கும் பின்வாங்கமாட்டாள். அவளிடம் லோப குணமும், பிடிவாதமுமே குடி கொண்டிருந்தன. ஈவிரக்க மற்ற மனத்தினள் என்பதற்குச்சான்று ஒன்று கூறுவோம்: ஒரு சமயம் தற்செயலாக அவளுடைய ஒரே மகனுக்குக் காலொடிந்தது. காலொடிந்த மகனுக்கு வைத்தியம் செய்தால் பணச்செலவாகுமென்று, அவனைக் கவனிக்காது முடமாக்குவதற்கு அவளே முக்கிய காரணமாயிருந்தாளென்றால், அவளைப் பணப்பேய் எவ்வளவு தூரம் ஆட்டியிருக்குமென்று நாமே ஊகித்துக் கொள்ள வேண்டும். அன்புடன் அவளே அவனுக்குத் தன்கைகளால் சிகித்ஸை செய்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அவன் காயத்தைச் சுத்தமான துணிகளினாலும் கட்டினாளில்லை. அசுத்தக் கந்தைகளால் அவன் கால்களைக் கட்டுவதும் இலவச வைத்தியசாலைகளுக்குச் சென்று மருந்து கேட்பதுமாயிருந்தாளென்றால் இது ஒரு விந்தையினும் விந்தையல்லவா?

ஹெட்டி இவ்வளவு லோபியானபோதிலும், தனக்குரிய மரியாதையைச் சிறிதேனும் இழந்தவளல்ல. ஏன்? அவள் குணமும், பழக்க வழக்கங்களும் அக்காலத்திற்கு ஏற்றவாறே இருந்தன. காலத்திற் கேற்ற கோலம். ‘பணமே செல்வம், பணமே பிரதானம், பணமே சகலமும், பொருளில்லாற்கிவ்வுலகம் இல்லை’ யென்ற எண்ணம் எங்கும் நிறைந்திருந்த காலத்தில் அவள் வேறு என்னதான் செய்திருக்கக் கூடும்? ஒருவரின் குணாதிசயங்களையும், பழக்க வழக்கங்களையும் அவரவர் காலத்திற்கேற்றவாறுதானே சீர்தூக்கிப்பார்த்தல் வேண்டும்? சத்ஜன சங்கமில்லாத அவள் பணமிருந்தும் பிணமானாள். ரஸ்கின் (*Ruskin*) என்னும் ஆங்கிலக் கவிஞர் பொருளாதார சாஸ்திரத்தை மிக இழிவாகக் கூறியதும் இக்காரணம் பற்றியே. அக்காலத்து ஜனங்களின் எண்ணங்களும், தற்காலத்தைப் போல், முன்னேற்றம் அடைந்திருக்கவில்லை.

ஹெட்டியை நல்வழியில் திருப்ப ஒருபூதரும் முன் வந்தாரில்லை. இக்காலத்து உலகம் முழுதும் பரவியிருக்கும் வியாபாரமுறைகளும் நாணயமாற்று முறைகளுமே அவள் நல்வழியிற் செல்லாததற்குக் காரணம். தங்கம், வெள்ளியாலாகிய நாணயங்

கள் ஒருகாலும் செல்வமாகா. அவை தெருவிற்கிடக்கும் கற்களுக்குச் சமமே. பணம் செல்வமல்ல; நாணயங்களைக் கொண்டு வாங்கி, மனிதன் அநுபவிக்கும் பொருள்களே செல்வம் என்னும் உண்மையே அவள் பணமெனும் பேய்வாய்ப்பட்டதற்குக் காரணம். ஒருவனிடம் கோடிக் கணக்கான பவுன்கள் இருந்தாலும் அவற்றை ஸஹாரா பாலைவனத்தில் தன்னந்தனியாய் வைத்துக் கொண்டு என்ன செய்வது?

உணவுக்கிடையில் நீர் அருந்தல்

சாப்பிடுங்காலத்தில் சிலர் பிடிக்குப் பிடித்தண்ணீர் அருந்துகின்றனர். அங்ஙனம் செய்தல் அவர்களுடைய ஜீரணசக்தியின் குறைவைக்காட்டுகிறது. ஜீரணம் செய்வதற்கு உதவுகின்ற எச்சில் நீர் அவர்களிடம் குறைவாக இருத்தலின் உணவை உட்கொள்ளுகையில் நீரின் உதவியை அதிகமாக வேண்டுகிறார்கள். உழைத்துவேலைசெய்யும் கூலியாட்கள் உண்ணும்போது இடையில் பெரும்பாலும் நீரை உட்கொள்வதேயில்லை. உண்டபின்பே ஒரே தரத்தில் வேண்டிய நீரை உட்கொள்கின்றனர். அவர்களுக்கு நல்ல ஜீரணசக்தியிருக்கிறது. சாப்பிடுவதற்கிடையில் தண்ணீர் குடிப்பதால் வயிற்றிலுள்ள விஷக்கிருமிகள் அங்குமிங்கும் ஓடி அநேகவிதமான வியாதிகளை உண்டாக்குமென்றும் அஜீரணமேற்படுமென்றும் வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர்.

சிவாஜியின் குரு

டி. இராஜகோபாலன், பி. ஏ.

பதினாறுவது நூற்றாண்டின் பிற்பகுதியில், கோதாவரி நதியின் கரையிலுள்ள, ஜாம்பவா என்னும் கிராமத்தில் சூர்யாஜி பண்டிதர் என்ற பிராமணச்சிரேஷ்டர் வசித்துவந்தார். அவர் தமது உத்தம மனைவியான ராணுபாய், என்பவளுடன், இன்பமாக இல்லறம் நடாத்துகையில், ஒருகால் யாகம் செய்ய நேர்ந்தது. அச்சமயம், மற்றோர் பிராமணோத்தமர், ராணுபாய் இரண்டு புத்திரர்களைப்பெறுவாளென்று ஆசீர்வதிக்க, அதுவும் அவ்வாறே நடைபெற்றது. இளையவனுக்கு நாராயணனென்று பெயரிட்டு அவனுடைய ஐந்தாவது ஆண்டிலேயே உபநயநமும் செய்வித்தார்கள். நாராயணனும் வேதங்களைச் செவ்வனே பயின்று மகோன்னத ஸ்திதியை அடைய வேண்டியிருக்கையில் தகப்பனார், ஆறுவது வயதிலேயே இறந்துபோனார். குடும்பநிர்வாகம் இப்பாலன் தலையில் விழுந்தது. இருந்தபோதிலும் ஒழிந்தவேளைகளில் கோதாவரி தீரத்தின் கரையில் உட்கார்ந்துகொண்டு வேதசாஸ்திரங்களை தன்னந்தனியே செவ்வனே விசாரணைசெய்வான். இச் சிறுவனுடைய உள்ளப்போக்கை அறியாத அவன் தாயாரும் தமயனும், அவன் பொழுது போக்குவதாக எண்ணி அவனை நையப்புடைத்து வந்தார்கள்; அவர்களின் பேதைமையைப் பொருட்படுத்தாமல் தன் போக்கே போய்க்கொண்டிருந்தான். நாராயாணன், சிலவேளைகளில் வேதாந்த விசாரணைகளில் மெய்மறந்து வீட்டையும் மறந்தான். அவ்விதமாகப் பஞ்சவடி என்ற காட்டில் மெய்மறந்திருக்க, தாயாரும் தமயனும் அவனைக்கண்டுபிடிக்க இரண்டுநாட்கள் தேட வேண்டியதாயிற்று.

தன்தாய்நாடாகிய இந்தியாவை சீர்கேடாக்கிய, முகலாய அரசர்களின் மேலும் அவனுக்கு ஆராக்கோபம் பொங்கிற்று. நம் கோவில்களை இடித்துத் தகர்க்கும் அவர்களை அடியோடு வேரறுத்து ஹிந்துமதம் சனாதன ஆசாரநியமங்களுடன் கூடிச் சீர்பெறுமாறு முயற்சிக்க வேண்டுமென்று தீர்மானித்தான்! 'எக்கஷ்டம் வரினும் பயமில்லை; ஹிந்துமதத்தைக் கைதூக்கி விடுவேன்' என்ற வீர எண்ணத்துடன் துறவறம் பூண்டான்.

இந்தவித அதிசயமாறுதலைக் கண்ணுற்ற தமயனுக்கு ஒருவித மானபயம் தோன்றியது. நாராயணனோ முன்போல, வாடினமுகத்துடன், சதாசிந்தனைகளில் ஆழ்ந்திராமல், தேஜஸ்வியாய் விளங்குவதைக்கண்டு, தான் தன் தம்பியைச் சோம்பேறியென்றும் பித்தனென்றும் தீர்மானித்தது தவறு என்பதை உணர்ந்தான்.

"அண்ணா! நீ என் வியப்படைகிறாய்? நான் இனிமேல் சந்யாசாசிரமத்தைக் கைக்கொண்டு, பிரம்ம குலத்தையும் ஹிந்து மதத்தையும் உத்தாரணம் செய்யப் பாடுபடப் போகிறேன்" என்றான் பின்னவன்.

தமையன், "அதிருக்கட்டும்! நீ இப்பொழுது வீட்டிற்கு வா" என்றழைத்துக் கொண்டுபோனான்; யாவரும் அவனைக் கலைக்க முயன்றார்கள். ஓர் அழகான பெண்ணை நாராயணனுக்கு மண முடிப்பதாக நிச்சயித்தார்கள். ஆனால் நாராயணன் வீட்டைவிட்டு ஓடிப்போய் ஓர் ஆற்றின் மடுவில் குதித்துவிட்டான். பிறகு அவனை மிகுந்த சிரமத்துடன் உயிர்தப்பவைத்து, கலியாணத்தைப்பற்றிப் பேசுவதையே நிறுத்திவிட்டார்கள்.

சிறிதுகாலம் சென்றபின், ஒருநாள் அவன்தாயார், "குழந்தாய், வேதங்களை அறிந்த நீ வேதவாக்குக்கு விரோதமாகத் தாய் சொல் தட்டலாமா?" என்றாள்; "அம்மா! தட்டக்கூடாதுதான்; ஆனால் தாய்நாட்டிற்காகவும் பாடுபடவேண்டு மென்று அதேசாஸ்திரம் கூறுகிறதல்லவா? தாயைப்பணிந்து தாய்நாட்டை மறப்பவன், உண்மை மனிதனாவானா? ஆகையால், தாய்க்கும் தாய்நாட்டிற்கும் தொண்டுபுரிதலே, மாந்தர் கடமையாகும்!" என்று அவன் பதிலளித்தான்.

"குழந்தாய்! தாயார் தெய்வமென்பதை ஒப்புக்கொள்கிறாயல்லவா? ஆனபடியால் நீ என்சொல்லையும் கேட்கவேண்டுமல்லவா?" என்றாள். அதற்கவன் "ஆம்! சந்தேகமின்றி; நீங்கள் சொல்லும் வார்த்தையை நான் கூடியவரையில் மீறமாட்டேன்" என்றான்.

"நல்லது! என்னிடம் உனக்குச் சிறிதேனும் பற்றிருந்தால் நீ கலியாணம் செய்துகொள்ளத்தான் வேண்டும்" என்றாள் தாய்.

நாராயணனுக்கு இன்னது செய்வதென்றே புரியவில்லை. மணப்பந்தலும் போட்டு மணப்பெண்ணுடன் நாராயணன் உட்கார வைக்கப்பட்டான்; வாயைக்கூடத் திறவாமல், வாடின முகத்துடன் நாராயணன் உட்கார்ந்துகொண்டு, 'கடவுளே! இப்பந்தத்திலிருந்து என்னைத் தப்புவிப்பாயாக' என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தான். புரோகிதர்கள் வெள்ளிக்கரண்டியில் தீர்த்

த்தை எடுத்து அவன்கையில் கொடுக்கும் தருணம் மணப் பலகையிலிருந்து ஒரே குதியாய்க்குதித்து எவர் கையிலும் அகப் படாமல் ஓடிவிட்டான். நேராக நாஸிக் என்னும் இடத்திற்குச் சென்று பன்னிரண்டு வருஷகாலம் ராமதாஸ் என்கிற புனை பெயருடன், சாஸ்திர ஆராய்ச்சி செய்துகொண்டு திரிந்தான்.

திரிந்ததுமன்றி உபதேசம் செய்தும், எழுதியும் தன் கருத் துக்களை வெளிப்படுத்தவே, அநேகர் அவனுடைய தைவிக குணங்களையும் சாந்தத்தையும் கண்டு சிஷ்யர்களாயினர். இப் பன்னிரண்டுவருட ஆராய்ச்சியால் 'தசபோதம்' என்கிற அரிய நூலை யியற்றினன்.

இப்படியிருக்க 1659-ஆம் ஹு சிவாஜி என்கிற அரும்பெரும் மகாராஷ்டிரத்தலைவன் அவனைக் குருவாயடைந்தான். சிவாஜிக்கு, ராமதாஸ் சொல்லியதே வேதவாக்காயிற்று. "இப்பரதகண்டத்தி லுதித்து ஆண்பிள்ளையென்று சொல்லிக்கொண்டு தாய் நாட்டுக் குரிய கடைமையைச் செலுத்தாமல் மிருகம்போன்று திரியும் மானிடப்பிறவிகள், அலியாவார்கள்" என்பது போன்ற பலவித மான ஆவேசமூட்டக்கூடிய உபதேசங்களால் ராமதாஸ் சிவாஜி யைத் தன்வசப்படுத்திப் பரவசமூட்டினன்.

"என்குருநாதனே! பிராமணவகுப்புத்தான் இந்துமதத்திற்கு ஆணிவேர்போன்றது. அபாரபுத்தி கூர்மையைப்பெற்ற இவர்கள் கைதூக்கப்பெறுவிடின் இந்துமதம் நிலைக்குமென்ற எண்ணம் எனக்குத் தோன்றவில்லை. மற்ற வகுப்பார்களையும் ஒன்றுசேர்த்து, ஹிந்து மதத்தை ஒழுங்கு படுத்திவிட்டால், அது பின்பு உலகத் தில் யாவராலும் அழிக்கக்கூடாத பலத்தை அடையும். ஆகையால் உமது கட்டளையைச் சிரமேற்றாங்கி முகலாயர்களைத் தலையெடுக்க வொட்டாமல் செய்கிறேன்" என்று சபதம் பூண்டான்.

சிவாஜி குருவினிடம் வைத்திருந்த வாத்சல்யத்தை வெளிப் படுத்தும் வேறொரு சம்பவமும் உண்டு. ஊரெல்லாம், திரிந்து கொண்டுவருகையில், ராமதாஸ் சிவாஜி ஆண்டுவந்த ஊருக்குப் பிச்சைக்காக வந்தான். ஒரு கிரஹஸ்தன் வீட்டில், "ஜே! ரகுபதி!" என்று கூறிப் பிச்சையாசித்துக் கொண்டிருக்கையில், தற்செயலாய் சிவாஜி அடுத்தவீட்டில் வந்திருந்தான். தன் குருவின் குரலைக் கேட்டு, உடனே ஒருசாஸனம் எழுதச்சொல்லித் தன் குருவை அழைத்து வரச்செய்து அரசாங்க முத்திரையிடப்பட்ட அந்தச் சாஸனத்தை அக்குருவின் பிச்சைப் பாத்திரத்தில் போட்டு விட்டான்.

"குழந்தாய்! உன் செய்கை விநோதமாகவன்றோவிருக்கின்றது! பசியென்று பிச்சை கேட்ட நான் இக்காகிதத்தை வைத்துக் கொண்டு யாது செய்வது?" என்று கூறிக்கொண்டு ராமதாஸ் அக் காகிதத்தைப் பிரித்துப் படித்தான். அதில் சிவாஜி, தனக்குச் சொந்தமான ராஜ்யம், தனம் எல்லாவற்றையும் தன் குருவுக்குப் பிச்சையாகக் கொடுத்ததாக எழுதியிருந்தான்.

ராமதாஸ் சிரித்துக்கொண்டு, "பிள்ளாய்! நீ பிறகு என்ன செய்யப்போகிறாய்?" என்றான். "உங்கள் சிஷ்ய கோடிகளில் ஒரு வனைப் பின் தொடரப்போகிறேன்; அதுவே எனக்குப் பரம சந்தோஷம்" என்றான் சிவாஜி.

"நீ அரைத்துணி கட்டிக்கொண்டு வீட்டுக்கு வீடு சென்று பிச்சை யெடுப்பாயா?"

"உங்கள் பொருட்டு எது வேண்டுமாகிலும் செய்வேன்" என்று சொல்லிக் காவி வஸ்திரம் பூண்டு வீட்டுக்கு வீடு பிச்சை யெடுக்கவாரம்பித்தான் மகாராஷ்டிர மன்னன்.

"உன்னைவிட எனக்குப் பிரியமான சிஷ்யன் ஒருவனுமில்லை. ஆனாலும் நீ போய் ராஜ்யத்தை ஸௌக்யமாக ஆண்டுகொண்டிருப் பதுதான் எனக்கு மிகவும் திருப்தியளிக்கும்."

"க்ஷத்திரிய தர்மத்திற்கே கேடான சம்பவமன்றோ அது? எங்கள் கடமை: கொடுத்ததைத் திரும்பிக் கேட்பது கூடாது."

"ராஜ்யத்தை ஒழுங்காகப் பரிபாலனம் செய்வதன்றோ க்ஷத்திரியர்களுக்கு அழகு? நீ இம்மாதிரி என்னோடு வரத் துணிந் தால் ராஜ்யத்தில் பெருங்குழப்பமன்றோ ஏற்படும்?"

சிவாஜி ஓரே பிடிவாதமாக, "கொடுத்த தானத்தைத் திரும் பிப்பெறமாட்டேன்" என்று சொல்ல, ராமதாஸ், "நீ என்னுடைய பிரதிநிதியாக ராஜ்யத்தை ஆண்டு வா" என்றதும் ராஜ்ய பரிபால னத்தை மீண்டும் மேற்கொண்டான்.

மகாராஷ்டிரக்கொடி பறக்க வாரம்பித்தது. எல்லோரும் அக்கொடியின் கீழ்த் திரண்டார்கள். மகாராஷ்டிரர்கள் பலத் தார்கள். ஒவ்வொரு யுத்தத்திலும் காரியங்களிலும் சிவாஜிக்கும் அவனது பரிவாரங்களுக்கும் ஹிந்துமத ஸ்தாபனமே மேல் நோக்கி நின்றதுமன்றி ராமதாஸ் எந்தவிதம் இந்தியா இருக்க வேண்டுமென்று நினைத்தானோ, அதே பிரகாரம் அவன் பிரதிநிதி யாகிய சிவாஜி ஆண்டு வந்தான்.

ஒருசமயம், கல்யாண் என்ற தேசம் மகாராஷ்டிரர்களால் கைப்பற்றப்பட்டு அதன் அரசனாகிய மூலான் அகமது என்பவன்

சிறைப்பட்டதும், அபாஜி சாண்டேவ் என்கிற சிவாஜியின் தளகர்த்தன், சிவாஜியிடம் வெகுமதியாகச் சிறைப்பட்ட அரசனின் பெண்ணைக் கொண்டு வந்தான். மந்திரிப்பிரதானிகளனைவரும் அப்பெண்ணின் அழகைக் கண்டு வியந்திருக்க, சிவாஜிமட்டும் "ஒவ்வொரு பெண்ணும் என் தாயாருக்குச் சமம். ஒருவனுக்குக் களங்கமற்ற கீர்த்தியின் மேல் ஆசையிருக்குமானால் இம்மாதிரி, தனக்குச் சொந்தமற்ற பெண்ணைப்பற்றிச் சிந்திக்கவே கூடாது. ராவணன் அக்கெட்ட எண்ணத்தினாலேயே குலத்தோடு அழிந்தொழிந்தான். நம்மில் எவரேனும் தற்சமயம் சிறைப்பட்டு, நம் மனைவியையோ பெண்ணையோ தாயையோ பகைவன் காதலித்துக் கற்பைக்கெடுக்க எண்ணங்கொள்வானாகில், நம்முடம்பு எவ்வாறு துடிக்கும்?" என்ற வீரமொழிகளால் அவர்களுக்குப் புத்தி கற்பித்துவிட்டு அப்பெண்ணுக்கு அநேகவிதமான சம்மானங்கள் கொடுத்து மரியாதை செய்து வழியனுப்பினான். சிவாஜியின் அத்தகைய மேன்மைக் குணங்களுக்கெல்லாம் ராமதாஸே காரணமென்று நமக்கு விளங்குகிறது. ராமதாஸுக்கு இராமபிரானிடமும் ஹனுமானிடமும் மிகுந்த பக்தி உண்டு. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஹிந்துதேசம் முன்னேற்றமடைய ஹனுமான்செய்த சேவையையே தாய்நாட்டிற்கு ஒவ்வொருவரும் செய்வது அவசியமென்று எடுத்துரைப்பான்.

இப்பேர்ப்பட்ட உத்தமன், சிவாஜி இறந்த அடுத்தவருடத்தில் தன்னுடைய 73-வது வயதில் இப் பூதவுடலை நீத்தான். மூச்சு இருக்குமளவும், ராமதாஸ் தாய்நாட்டிற்குத் தொண்டுபுரிந்தான். ஆனால், சிவாஜியின் மகன் சம்பாஜி பட்டத்திற்கு வந்ததும், ராமதாஸின் கொள்கைகளை அனுசரித்து ராஜ்யபாரம் நடத்திய தன் தந்தையின் வழியைப்பற்றாது போனமையால் பிற்காலத்தில் ராஜ்யம் சீர்குலைந்தது.

பழ ரஸம்

பழங்களின் ரஸங்கள் பலவகையான நோய்க்கிருமிகளை அழிக்கும் ஆற்றலுடையனவாக இருக்கின்றன. நம்முடைய முன்னோர்கள் மாதந்தோறும் விரதமிருந்து அக்காலங்களில் பழங்களை உண்டனரென்பதை நாம் அறிவோம். அவர்கள் அங்ஙனம் செய்ததால் நோய்க்கிருமிகளைத் தங்கள் உடலினின்றும் போக்கி உடல்நலம் பெற்றனர். 'டைபாயிட்' ஜ்வரம் முதலிய நோய்களை உண்டாக்கும் கிருமிகளைக் கொல்லும் அமிலங்கள் பழங்களில் அடங்கியிருக்கின்றனவாம். திராக்ஷைப்பழங்களிலுள்ள டார்ட்டாரிக் அமிலமும் சீமை அத்திப்பழத்திலுள்ள மாலிக் அமிலமும் நோய்க்கிருமிகளைக் கொல்கின்றன. இங்ஙனமே டான்னிக் அமிலமும் சைட்ரிக் அமிலமும் சில பழங்களில் இருக்கின்றனவாம்.



கல்யாணி

ஐ.

(56-ஆம் பக்கத் தொடர்ச்சி)

காட்சி 4.

[இடம்: சென்னை எழும்பூர் ரயில்வேஸ்டேஷன்;
காலம்: இரவு $8\frac{1}{2}$ மணி.]

[ஜனங்கள் அங்குமிங்கும் கூட்டமாகப் போகிறார்கள். திடீரென்று ஒருவர் தம் நகைப்பையைக் காணோமென்று டிக்கெட்டுக் கொடுக்குமிடத்திலிருந்து கத்துகிறார். போலீஸ்காரர்கள் பல பக்கங்களிலும் ஓடிச் சந்தேகம் உண்டானவர்களைத் தேடிப்போகிறார்கள்.]

ராமச்சந்திரன்:—(கையில் ஒரு சிறு மூட்டையுடன் வருகிறான்.) என்ன மதிமோசம்போனேன்! முன் குதிரைப்பந்தயத்தில் லாபம்வந்த பணத்தையும், என் கையிலுள்ள பொருளையும் பந்தயம்வைத்து எல்லாவற்றையும் தொலைத்து விட்டேன். ஊருக்குப்போக ஒரு பைசா என்னிடமில்லை. 'பர்லின்' குதிரை முதலில் வருமென்று எவ்வளவோ நம்பியிருந்தேன். அது போன விடமே தெரியாமல் போய்விட்டது......என்னசெய்வது?.... (கையிலிருக்கும் மோதிரத்தைப்பார்த்து) ஆறுமாதம் தீபாவளிக்கு என்மாமனார் வீட்டில்போட்ட மோதிரம் என்கையிலிருக்கிறது. இதை அடகுவைத்தோ அல்லது விற்றோ, ஊர்போய்ச் சேரவேண்டும்......இரவு $10\frac{1}{2}$ மணிக்குக் கடைசிவண்டிக்கு எப்படியாவது போக முயற்சி செய்யவேண்டும். இனிக் கடைவீதிக்குப் போவதென்றால் ஒருமணிநேரம் பிடிக்கும். இதோ பார்சல் ஆபிசில் சிலர் இருக்கிறார்கள். அவர்களை விலைக்கு எடுத்துக்கொள்வார்களா பார்க்கிறேன். (போய், பார்சல் குமாஸ்தா ஒருவரைப் பார்த்து) ஐயா! நான் தஞ்சாவூர் போகவேண்டும்; கொண்டுவந்த பணம் முழுதும் செலவாகிவிட்டது. தயவுசெய்து இந்த மோதிரத்தை விலைக்கு யாராவது வாங்கிக்கொள்வீர்களா?

ஒருவர்:—ஐயா! இப்படித்தான் திருட்டு நகைகளைக் கொண்டுவந்து ஒருவன் சென்றமாதம் விற்றப்போனான். போலீசார்வந்து அவனைப்பிடித்து நகைகளை மீட்டுப்போனதோடல்லாமல், அவன் தப்புவதும் தம்பிரான் புண்ணியமாகும்போலிருக்கிறது.

வேறொருவர்:—சற்று முன்பு யாரோ நகைப்பையைக் காணோமென்று கூச்சல்போட்டார்கள். அதில் சம்பந்தப் பட்டநகையோ என்னவோ? போலீசார் வசம் சொல்லப்பா.

ராம:—ஐயா! நான் திருடனல்ல; ஏதோ சமயத்திற்கு உதவ இந்தமோதிரத்தை விற்கவந்தேன்;

(பேசிக்கொண்டிருக்கும் போதே, ஒருபோலீஸ் சேவகன் வருகிறான்.)

போலீஸ்சேவகன்:—எந்தஊர் ஐயா நீர்? இந்த மோதிரம் ஏது உமக்கு? சற்றுமுன்பு திருட்டுப்போன நகைப்பையில் மோதிரம் ஒன்று இருந்ததாகச் சொல்லி வழக்குக் கொடுத்திருக்கிறார்கள். வாரும் சப்இன்ஸ்பெக்டர் முன்பு.

ராம:—இம்மோதிரம் என்னுடையது; என் ஊருக்குப் போகச் செலவுக்குப் பணமில்லை. அதற்காக........

போ. சே:—இந்த சமாசாரம் அதிகாரியிடம் சொல்லிக்கொள்ளும்; வாரும். (பிடித்திழுக்கிறான்.)

(வேங்கடராமன் ஒரு ரயில்வே போர்டரோடு, பெட்டி படுக்கையுடன் வருகிறான்.)

ராம:—வெங்கு! வெங்கு! (வேங்கடராமன் திரும்பிப் பார்க்கிறான்) இங்கே வா. அவசரம். (வேங்கடராமன் வருகிறான்.) வெங்கு! இந்தப் போலீஸ் சேவகன் நான் இந்த மோதிரத்தைத் திருடியிருப்பேனென்று என்னைப் போலீஸ்ஸ்டேஷனுக்கு அழைக்கிறான்; இது யாருடையது என்றுசொல்.

வேங்:—ஐயா! இந்த மோதிரம் இவர்கையில் வெகுநாளாக இருக்கிறது.

போ. சே.—அதெல்லாம் எனக்குத் தேவையில்லை. இதில் ஏதோ சந்தேக மிருக்கிறது. ஸ்டேஷனில் வந்து சப் இன்ஸ்பெக்டரிடம் சொல்லிக்கொள்ளுங்கள்.

வேங்:—இதில் என்ன சந்தேகம் வந்தது?

ராம:—என் கையிலிருந்த பணத்தை எல்லாம் குதிரைப்பந்தயத்தில் இழந்துவிட்டேன். ஊருக்குப்போகப் பணமில்லாமல் இந்த மோதிரத்தை விற்கவந்தேன். கொஞ்சநேரத்துக்கு முன்பு

இங்கே ஒருவர் நகைப்பை திருட்டுப்போனதாம். இவைகளை உத்தேசித்து இது திருட்டு நகைகளில் ஒன்று என்று சந்தேகப்படுகிறார்கள்.

வேங்:—ராமு! இதோ ரூபாய் இருபது; செலவுக்கு வைத்துக்கொள். என் வண்டிபுறப்பட இன்னும் ஐந்து நிமிஷமிருக்கிறது. நான் போய்வருகிறேன். இந்த மோதிரத்தை, நகைப்பையை இழந்தவருக்குக் காட்டுவார்கள். அவர் இது தம் பொருள் இல்லையென்றால் உன்னைப் போகச்சொல்லுவார்கள். நீ பயப்படாதே. ஏதாவது உன்பேரில் குற்றம் காட்டினால் எனக்குத் தந்திமூலமாகத் தெரிவி.

(போகிறான்.)

ராம:—(தனியாக, சேவகனுடன் போய்க்கொண்டே) வேங்கடராமனுக்குத் தீங்கிழைத்தேன். அவன் எனக்கு நன்மையைச் செய்கிறான். போலீசில் என்னை விசாரித்துப் போகச்சொன்னால் உடனே ஊர்போய் உண்மையை வெங்குவிடம் சொல்லி மன்னிப்புக் கேட்கவேண்டும்.

(போகிறான்.)

காட்சி 5.

[வேங்கடராமன் வீட்டில் படுக்கையறை; இரவு 10 மணி.]

(வேங்கடராமன் ஓர் சாய்வான நாற்காலியில் படுத்துக்கொண்டு ஏதோ ஆலோசனை செய்கிறான். கல்யாணி ஒரு பக்கமாக வருகிறாள். கல்யாணியைக் கண்டதும், பாராதவன்போல் வேங்கடராமன் வெளியில் போகிறான்.)

கல்யாணி:—என்மனம் மிகுதியான பயமடைகிறது. ஊரிலிருந்து வந்ததுமுதல் என் நாதர், என்னுடன் விரும்பிப்பேசவேயில்லை. அப்படி அவர் கோபம் கொள்ளுமாறு நான் யாதொன்றும் செய்யவில்லையே! தமக்கு எழுத்துவேலை அதிகமிருப்பதாகக் கூறினார். அதற்காக நாற்காலியும் மேஜையும் போடப்பட்டிருக்கின்றன. மைக்கூடும் பேனாவும் இருக்கின்றன. ஏதோ தெரியவில்லை; சற்று உள்ளேபோயிருக்கிறேன்.

(ஓர் அறைக்குள் போகிறாள்.)

கோபு:—(பதுங்கி வருகிறான்.) மெள்ள இந்தக் கடிதத்தை மேஜையின்மேல் வைத்து விடுகிறேன். அப்பா! எவ்வளவு கஷ்டம்! யாராவது என்னைப் பார்த்துப் பிடித்துக்கொண்டால் என் கதி என்னவது? அதெற்கெல்லாம் யோசனைபண்ணிச் சாத்தி

யப்படுமோ? (தான் கொண்டுவந்த கடிதத்தை மேஜையின் மேலுள்ள ஓர் அட்டைக்கு அடியில்வைத்து விடுகிறான்.) ஏ! கல்யாணி! இன்றுடன் உன் வாழ்நாள் முடிந்துவிடும். அதைப் பார்க்கத்தான் இங்கே வந்திருக்கிறேன். என்னைக் காணாதவிதமாக எங்கேயாவது பதுங்கிக்கொள்ளுகிறேன்.

(பதுங்கிக்கொள்ளுகிறான். வேங்கடராமன் பிரவேசம்.)

வேங்.—(மேஜையின் அருகில் தன்னுடைய ரிவால்வரை வைக்கிறான். அட்டையிலிருந்து கடிதம் ஒன்றை எடுத்துப்படிக்கிறான்.) சரிதான், என் கருத்தை வலியுறுத்த இக்கடிதம் கிடைத்தது.... கோபுதான் கல்யாணிக்கு எழுதியிருக்கிறான். ஆஹா! இக்கடிதத்திலிருந்து இவர்கள் ஸ்நேகம் பாராட்டிய முறை முழுதுமன்றோ விளங்குகின்றது.... இப்படிப்பட்ட ஒருத்தியை மனைவியாகக் கொண்ட பாவம் இன்றே நீங்கும்.

(ரிவால்வரைப் பார்த்து, நாற்காலியில் அமர்ந்து யோசித்துக் கொண்டிருக்கிறான்.)

கல்யாணி:—(அறையிலிருந்து வந்து) இதென்ன! என் நாதர் வந்து நெடுநேரமாயும் என்னுடன் ஒரு வார்த்தைகூடப் பேசாதிருக்கிறார். சென்னை போய்வந்ததில் ஏதேனும் மனவருத்தம் நிகழ்ந்திருக்கலாம். அன்றியும் ஆடவர்கள் கோபமாயிருந்தாலும் வேறு மனதில் வருத்த மேற்பட்டிருந்தாலும் பெண்பிள்ளைகள் அதனைப் போக்கடிக்கவேண்டும். (புருஷன் அருகில்சென்று) நாதா!

(பேசாதிருக்கிறான்.)

கல்யாணி:—யார்பேரில் என்னகோபம்? அல்லது என்ன மனவருத்தம்? இதோ பால் ஆறிப்போகிறது.

(பால் பாத்திரத்தை எடுக்கப்போகிறாள்.)

வேங்:—அப்பா! ஸ்திரீகள் நம்பத்தகுந்தவர்களல்ல! இப்பாவி பேசுகின்றபேச்சு என்மனோதிடத்தையுமன்றோ மாற்றுகின்றது? (கல்யாணி, பாலுடன் வருகிறாள்.) யார்பேரிலும் கோபமொன்றுமில்லை; பாலை மேஜையின்மேல் வைத்துப் போ.

கல்யாணி:— ஏதோ எழுதவேண்டு மென்றீர்களே?

வேங்:--எழுதத்தான் வேண்டும்; கொஞ்சம் சிரமமாயிருக்கிறது.

கல்யாணி:—உண்மைதான். வெகுதூரம் ரயிலில் வந்த அலுப்பு. சயனித்துக்கொள்ளுங்கள். காலையில் எழுதினால் போகிறது. (படுக்கையை விரித்துப்போடுகிறாள்.)

வேங் :—(தனக்குள்) யாதொரு குற்றமும் அறியாள்போல் மிக இனிமையாயன்றோ பேசுகிறாள்?...... உன் பேச்சும் சாமர்த்தியமும் இன்றுடன் முடிந்துவிடும். (கல்யாணியைப்பார்த்து) நீபோய் படுத்துக்கொள். எனக்கிப்பொழுது தூக்கம்வரவில்லை.

கல்யாணி :—நான் தங்களுடன் தங்களுக்குத் தூக்கம் வரும் வரையில் பேசிக்கொண்டிருக்கிறேன். எனக்குமட்டும் தூக்கம் வருமா? பின் தூங்கி முன் எழுதலன்றோ பெண்கள் கடமை?

வேங் :—என்னுடன் பேசவேண்டாம். நீ படுக்கச் செல்.

கல்யாணி :—(ரிவால்வரைக் கையிலெடுத்து) இதென்ன நாதா! இதெதற்கு? ஆபத்துக்கிடமாயிற்றே?

வேங் :—இது பந்தோபஸ்திற்காக. (ரிவால்வரை வாங்கிக் கொள்ளுகிறான்.) நீ சயனித்துக்கொள். அல்லது உனக்கேதாவது வேறு வேலையிருந்தால் பார். நான்போய் உலாவிவந்து படுத்துக் கொள்ளுகிறேன்.

(போகிறான்.)

கல்யாணி :—(படுக்கையின் பக்கம் போய், சுவாமியை ஸ்தோத்திரம் செய்கிறாள்.) என் நாதன் கடுமொழிவழங்கி நான் ஒரு நாளு மறியேன். இன்று அவர் பேசியதைப் பார்த்தால் என்மீது ஏதோ கோபம்கொண்டிருப்பதாய்த் தெரிகிறது. இடை இடையே அவர் பேசிய சிலவார்த்தைகளால் என் கற்பின்மீது ஐயப்பாடு கொண்டிருக்கிறார் என்று தோன்றுகிறது. கடவுளே, நான் பதி சொற்கடவாத பத்தினியானால் என்னைக் காக்கவேண்டும். நான் சிறிதேனும் நெறிதவறியிருந்தால் அதோ தெரியும் வானம் இடிந்து என்தலையில் விழக்கடவது...... அவர் மேஜைமேல் ரிவால்வர் வைத்திருந்ததையும் பேசுவதையும் நோக்கின் என்னை மாய்க்கவே கருதி இருக்கலாம் எனச் சந்தேகமுண்டாகிறது... என் புருஷர் கையால் மடிவதற்கு நான் அஞ்சவில்லை. என்னைக் கொன்ற குற்றம் அவரைத் துன்புறுத்தலாகாது.... அன்றியும் நான் மாசற்றவள் என்பதை நிரூபிக்க நான் பிழைத்திருத்தலவசியம். என்ன செய்வது?.... பேசவும் இடங்கொடுக்கமாட்டேனென்கிறார். இந் நாட்டில் சிறிதேனும் உண்மையில்லாத அவதூறினால் எவ்வளவு சகோதரிகள் என்போல் தவிக்கின்றார்களோ தெரியவில்லை.... சரிதான். ஒரு யோசனை தோன்றுகிறது. நான் முக்காடிட்டுப் படுத்திருப்பதுபோல் இத் தலையணைகளை அடுக்கிவைத்துவிட்டு, நான் ஒருபுறம் மறைந்திருந்து கவனிக்கின்றேன்.

(தலையணைகளை அடுக்கி மூடி, தான் முக்காடிட்டுப் படுத்திருப்பது போல் போட்டுமறைந்து கொள்கிறாள்.)

வேங்:—(பிரவேசித்து) கல்யாணி! (கல்யாணி பேசாமலிருக்குருள்.) அவள் தூங்கியிருப்பாள்; மூடி அயர்ந்து தூங்குகிருள். சமீபம் சென்று பார்த்தால், அவள் அழகுள்ள முகம் என் மனதை மாற்றிவிடும். இனித் தாமதிப்பதில் பயனில்லை. (ரிவால்வரை எடுத்து).... எல்லாக்கொலைகளிலும் கொடியது ஸ்திரீஹத்தி. அதிலும் என்னுடன் இன்பமாய் வாழ்ந்த மனைவியை யன்றோ கொல்லத்துணிந்திருக்கிறேன்?.... கல்யாணி! உன் துர்ச்செய்கை என் தளர்ந்த மனதைக் கல்மனமாக்கியது. உன்னையும் கொன்று என்னையும் உடனே மாய்த்துக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறேன். ...... இனி யோசித்தாலும் அவள் விழித்துக்கொண்டாலும் நம் காரியம் கைகூடாது.

(ரிவால்வரினுல் தலையணையிற் சுடுகிருன்; பின்புறமாக வந்து தன்பேரில் சுடத் தயார் செய்கிருன். உள்ளே யிருந்து யாரோ ஓடுகிற சப்தம் கேட்கிறது, திரும்பிப்பார்க்கிருன்; கோபு ஓடுகிருன்.)

இவனையும் கொன்றுவிடவேண்டும். பிறகுதான் என்னுயிரை மாய்த்துக்கொள்ள வேண்டும்.

(கோபு ஓட, பின் தொடர்ந்து ஓடுகிருன், வெளியிலிருந்து ராமச்சந்திரன் வருகிருன்.)

ராம:—வெங்கு! அடாபாவி! யாதுசெய்தனை? கோபு செய்தசூழ்ச்சி யிது என்று உன்னிடம் சொல்லவேண்டி ஊருக்கு வந்ததும் வந்தேன். இரவில் உன்னை எழுப்பக்கூடாது என்று வாசல் திண்ணையில் படுத்திருந்தேன். அதற்குள் உன் மாசற்ற மனைவியைக் கொன்றுவிட்டாயே; இதோதான் ஓடுகிருன் கோபு.

வேங்:—அப்படியா! ஆஹா! அடே போ! பாவி கோபு! உன்னை விடுவதில்லை. உன்னையும் கொன்று, நானும் உயிர்துறந்து என் கண்மணியைக் கூடுவேன்.

(வேங்கடராமன் ஓட, ராமச்சந்திரன் பின் தொடருகிருன்.)

கல்யாணி:—பிழைத்தேன்; என் கற்பும் பிழைத்தது. அறிவீனனை இந்தக் கோபுவே என் கணவர் மனத்தை மாற்றிவிட்டான்போலும். என் கணவர் கொடிய சபதம்செய்து கொண்டு சென்றிருக்கிருர். இருவர் உயிர்களையும் காப்பாற்றவேண்டும்.

(போகிருள்.)

காட்சி 6.

[இடம்: ஒரு தோட்டம்; காலம்: இரவு.]

கோபு:—நல்லவேளை தப்பினேன். (சுற்றிப் பார்த்து) ஐயோ! அதோ ஒரு டார்ச்சு வெளிச்சத்துடன் வருகிறானே; இனி ஓட மார்க்கமில்லை. சரணாகதி அடையவேண்டியதுதான்.

வேங்:— அடே! கோபு! மகாபாவி! மாசற்ற என் கண்மணி கல்யாணியை நான் கொன்ற கொலைபாதகம் உன்னையே சார்வதாக. உண்மையைக் கூறு. அல்லது இதோ பார். குண்டுபோட்டுத் தயாராயிருக்கிறது.

(ரிவால்வரைக் காட்டுகிறான்.)

ராம:—(பிரவேசித்து, வேங்கடராமன் காலில் விழுந்து) வெங்கு, முதலில் என்னை மன்னிப்பதாகச் சொல். கோபு எவ்வளவு குற்றவாளியோ, அவ்வளவு குற்றம் நானும் செய்திருக்கிறேன். உன்மனைவி யாதொரு குற்றமும் செய்தவள் அல்ல.

கல்யாணி:—(ஓடிவந்து வேங்கடராமனைப் பிடித்துக் கொண்டு) நாதா! சற்றுப் பொறுங்கள். அவசரப்படாதீர்கள். மூடத்தனமாய்ச் செய்யத்தகாததைச் செய்துவிட்டார்கள். தாங்கள் பொறுக்கத்தான் வேண்டும்.

வேங்:—(பிரமித்து) ஆ! இதென்ன! நான் கனவு காண்கிறேனா அல்லது நனவுதானா! குண்டுபட்டு இறந்த இவள் எப்படி இங்கேவந்தாள்? இவளது பிசாசுதான் போலும். கல்யாணி, உன்னை நான் கொலை செய்ததற்காகப் பிசாசு ரூபங் கொண்டு என்னை வாட்டவந்தனையோ? உன்னை அநியாயமாய்க் கொன்ற இப்பாதகன் இனி உயிர் வாழ்வது நியாயமில்லை. உன் கொலைக்குக் காரணமான இப்பாவியை மாய்த்தபின்னரே நான் மாளக் கருதி யிருக்கிறேன்.

கல்யாணி:—நாதா! நான் பிசாசல்ல. உங்கள் ரிவால்வரைக் கீழே தாழ்த்திவிடுங்கள்; நான் பிழைத்தவிதம் சொல்லுகின்றேன். (ரிவால்வரைக் கீழே தாழ்த்துகிறான்.) நாதா! தாங்கள் என்னிடம் விரும்பிப் பேசாமையால் தாங்கள் என்மீது கோபங்கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொண்டேன். மேஜையிலிருந்த ரிவால்வர் என் மரணத்தை அறிவுறுத்தியது. உடனே இரண்டு தலையணைகளை நான் போர்த்துப் படுத்திருப்பதுபோல் அமைத்துவிட்டுக் கட்டிலின் கீழ்ப்பக்கம் பதுங்கிக் கொண்டேன். ரிவால்வரின் குண்டு என்மேல் படவில்லை.

வேங்:—கண்மணி! உன் அறிவு ஒருபுற மிருக்கட்டும். உன் கற்பே உன்னைக் காத்தது. கற்புடையமாதருக்கு இயலாத செய லொன்று முண்டோ? உன்கற்பே என் மரணத்தையும், இவனைச் சுடுவதால் படும் துன்பத்தையும் நீக்கிக் காத்தது.

கோபு:—வெங்கு! இந்த உத்தமியின் கற்புத்தான் என்னையும் காத்தது. நான்செய்த செயலுக்கு எனக்கு மரணமே ஏற்ற தண்டனை, உனக்குப் பொய்க்கடிதம் எழுதியவன் நானே. வீணில் கல்யாணியின்மேல் பழிசுமத்தினவன் நானே. என்னைக் காப்பாற்றி னாலும் சரி; அல்லது உன் கைக்குண்டுக்கு இரையாக்கினாலும் சரி.

(தாழ்ந்து நிற்கிறான்,)

மங்கம்மாள்—(அவசரமாக வருகிறாள்.) என்னடா வெங்கு? ஆத்தில் ஒரு பெரியவளிருக்கிறாள் என்றும் நினைக்காமல் இவ் வளவு தடபுடல் செய்துவிட்டாயே? என்னைக் கேட்கக்கூடாதோ? நீ குழந்தையைச் சுட்டு இருந்தால் என்ன கதியாகிறது? குடும் பமே அதோகதியாகுமே?

வேங்:—ஈசனருளால் ஒன்றும் நடக்கவில்லை. பதறாதே, இதோ கோபுவைப்பார். இவன்தான் இதெற்கெல்லாம் காரணம்.

மங்கம்மாள்—கோபு! (கோபத்துடன்) நீயும் பிள்ளையென்று பிறந்தாயே!

கல்யாணி:—அத்தை! கோபியாதேயுங்கள். அத்தான், நீ எனக்கு எவ்வளவு துன்பந் தந்தவனாயினும் கடைசியில் என்னைக் காத்தவனும் நீயே ஆகிறாய். வருந்தாதே. நாதா! இவனைத் தாங் கள் மனபூர்வமாக மன்னிக்கவேண்டும்.

வேங்:—கண்மணி! உன்னைப்போலுள்ள உத்தமப்பெண்கள் வேறு எங்கே கிடைப்பார்கள்? கல்யாணி! நான் யோசனையின்றிச் செய்த அக்கிரமங்களுக்கு என்னைத் தயைசெய்து மன்னிப்பாயாக.

கல்யாணி:—நாதா! தாங்கள் சிறிதும் வருந்தவேண்டாம். எல்லாம் ஈசன்செயல். நாதா! (ராமச்சந்திரனைப்பார்த்து) இவர் இந்த விஷயத்தில் சம்பந்தப்பட்டது எப்படி?

வேங்:—கண்ணே! என் தோழன் கோபுவின் தூண்டுதலால் உன்னைப்பற்றி அவதூறு கூறியவன் இவன்.

கல்யாணி:— ஏன் அவதூறு கூறியவர் என்கிறீர்கள். என் கற்பை நிலைபெறச்செய்தவர் என்று கூறுங்கள். ஒருவரும் வேண் டாம். எல்லாம் நலமாகவே முடிந்தது. வீடுசென்று கடவுளைத் தொழுவோம் வாருங்கள்.

(போகிறார்கள்.)

(முற்றும்.)

கௌரவ நாசம்

பே. கோ. சுந்தர ராஜன்

லக்ஷ்மியின் கண்களில் நீர் ததும்பியது. இமைகளின் ஓரத்தில் முத்துப்போல் விளங்கிய நீர்த்துளிகள், ஊஞ்சற்பலகை அசையவும், அவளது கன்னங்களில் விழுந்து சுடுநீர்ச் சிற்றருவியைப் போல் கீழே பாய்ந்தன.

அச்சமயம் இரண்டு சிறுமிகள் ஓடிவந்து அப்பெண்ணை நோக்கி, "என்னடி லக்ஷ்மீ! ஏண்டி அழறே? வண்டிவந்தாட்டதே! எல்லாரும் அப்பவே ஆத்தங்கரைக்குப் போய் விட்டார்களே! அழுதழுது புதுப்புடவையைக் கெடுத்துக் கொள்றயே" என்றனர்.

லக்ஷ்மியோ இதற்குப் பதிலளிக்காது தன் வருத்தத்தைக் காட்டாது சிரிக்கமுயன்றவாறு ஊஞ்சலை விட்டிறங்கினுள். பலகையும் சங்கிலியும் அவ்வழகியபெண் தம்மை விட்டு நீங்கியதைச் சகிக்காதவைபோல் 'கீச்'சென ஒலித்தன.

தெருவில் பல வண்டிகள் நகர்ந்துகொண்டிருந்தன. மாதரும் கட்டுச்சாத மூட்டையுடன் ஊருக்கு ஒருமைல் தூரத்திலுள்ள நதியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர். அன்றே ஆடித்திங்களின் பதினெட்டாவது புனிதநாள்.

லக்ஷ்மி ஆற்றை அடைந்தபோது அங்கே புது ஆடைகள் அணிந்த சிறுமிகள் களிப்புடன் ஒருவரோடொருவர் விளையாடி மகிழ்ந்து கொண்டிருந்தனர். சிலர் ஆற்று மணலில் ஓடியாடினர். மற்றுஞ் சிலர் ஸ்படிகம் போன்ற அந்நதி நீரை வாரித்தெளித்து விளையாடினர். வயது முதிர்ந்த மாதர் படிகளில் இலைகளை விரித்துச் சிற்றுண்டி பரிமாறினர். லக்ஷ்மி வண்டியை விட்டிறங்கினதும் அவளுடைய தோழிகள் ஆனந்தத்துடன் அவளை யணுகி, "நல்லவேளை வந்துவிட்டாள்! ஏன், நீ வரமாட்டாயென்று உங்கள் அம்மா சொன்னுளே?" என்று ஏக காலத்தில் கூவினர்.

லக்ஷ்மி பெருமூச்செறிந்து சிறுமுறுவல் பூத்தாள். அப்பெண்கள் தன்னைச் சூழ அவள் ஒரு பெருங்கல்லின்மேல்

அமர்ந்து ஆற்றில் உணவருந்துவோரைப் பார்த்துக்கொண்டிருந்தாள். தன்னுடைய சிநேகிதிகள் கேட்கும் பிடிவாதமான கேள்விகளுக்கு அவள் சரியான பதில் கூறவில்லை. அவளுடைய முகம் மலர்ச்சியற்றுக் கவலையுற்றிருந்தது. அந்தி வெளிச்சம் இருட்டிற் கிடங்கொடுக்க ஆரம்பித்தது.

தாமரை இலை நீர்த்துளியைப் போன்றது பெண்மை. லக்ஷ்மியின் தோழிகள் அவளிடம் அதிக அன்பு கொண்டவர்களான போதிலும் அவளது களிப்பின்மையை விரும்பாது ஒவ்வொருவராய் அவளை விட்டு நீங்கினர். ஓடும் நீரில்நின்று உணவருந்தும் மாதர்களில் சிலர் லக்ஷ்மியைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். ஒரு பருத்த ஸ்திரீ தன் வாய்நிறையத் தயிர்ஞ்சாதத்தை அடக்கிக் கொண்டே, "பாவம்! லக்ஷ்மி! ஆனால் அவள் ஏன் எப்பொழுதும் இப்படிக் கவலையோடே யிருக்கவேணும். அவர்கள் தன்னாலே நாளைக்கே வந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ளப் போகிறார்கள்" என்றாள்.

மற்றொரு மாது, "அது ஒருநாளும் நடக்காதடியம்மா! மாப்பிள்ளை வீட்டுக்காரர் வெகு கர்வம் பிடித்தவர்களாச்சே! அவர்கள் கொஞ்சத்திலே ராஜியாகமாட்டார்களே! என்னதான் இருக்கட்டும். லக்ஷ்மியின் தாய்தகப்பனார்.........." என்று ஏதோ சொல்ல வாயெடுத்தவள் ஒருவயது முதிர்ந்த ஸ்திரீ கையில் கிண்ணத்துடன் அவ்விடத்தை அடைந்ததைப் பார்த்ததும் தன் பேச்சை நிறுத்திவிட்டாள்.

அவர்களுக்கு ஊறுகாய் வேண்டுமா என்று கேட்கவந்த அந்தஸ்திரீ அவர்களுடைய முகக்குறிகளிலிருந்தே அவர்கள் யாரைப்பற்றிப் பேசிக்கொண் டிருந்தார்களென்பதை உணர்ந்தாள். உடனே அவள் கரைப்பக்கம் நோக்கி, "லக்ஷ்மி! அங்கே தனியாய் என்ன செய்கிறாய்? ஏதாவது சாப்பிடுகிறதுதானே!" என்று கூப்பிட்டாள்.

"இல்லை அம்மா! ஒன்றும் வேண்டாம்; எனக்குப் பசிக்கவில்லை" என்று லக்ஷ்மி மெல்லிய குரலில் பதிலளித்தாள். லக்ஷ்மியின் தாயார் தன் உதட்டைக் கடித்தவண்ணம் தனது மற்றக்குழந்தைகள் சாப்பிட்டுக் கொண்டிருந்த இடத்தை அடைந்தாள்.

உடனே முன்பேசிக் கொண்டிருந்த ஸ்திரீகள் தமது வம்பை மீண்டும் தொடங்கினர். ஆனால் லக்ஷ்மியோ மற்றவர்கள் மகிழ்ச்சியுடன் காலங்கழித்துக் கொண்டிருந்ததை சிறிதும் கருதவில்லை. முன்னொருநாள் தன் கணவன் தன் கழுத்தில் மங்கல சூத்திரம் அணிவித்ததைப்பற்றியே அவள் நினைத்துக்கொண்

டிருந்தாள். தன் வீட்டில் ஊஞ்சலில் அமர்ந்திருந்தபோதும் அவள் தனது விவாகவைபவத்தைப் பற்றித்தான் கனவு கண்டு கொண்டிருந்தாள். மணப்பந்தலில் கணவனுடன் ஊஞ்சலாடிய காட்சியை நினைத்துக்கொண்டிருந்தபோதுதான் அவளுடைய சிறுசகோதரிகள் தோன்றி அவளுடைய கனவைக் கலைத்தனர். இப்பொழுதோ நதி நடுவே நகைத்து நட்பாடும் பெண்களின் பேச்சுக்கள் அவளது கலியாணத்தை அவளுக்கு மீண்டும் நினைப்பூட்டின. சிறு பெண்கள் தன்னைச் சூழ்ந்து பாடிப் பரிகசித்த தெல்லாம் அவள்முன் தோன்றின. கலியாணம் நடந்து நான்கு வருஷங்கள் கழிந்துவிட்டன. ஆனால் லக்ஷ்மி அதன்பிறகு தன் கணவனைப் பார்க்கவேயில்லை.

விவாகங்களில் தவறாது தோன்றும் சிறு மனஸ்தாபங்களி லொன்று லக்ஷ்மியின் விஷயத்தில் விபரீதமாக முடிந்தது. மணம் நடந்த ஆறாவது மாதம் லக்ஷ்மியின் மாமனார் அகத்திலிருந்து ஓர் அழைப்புக் கடிதம் வந்தது. அவளுடைய நாத்தனாரின் வளைகாப்பு முகூர்த்தத்திற்கு வீட்டு நாட்டுப் பெண் வரவேண்டுமென்று அவர்கள் விரும்பினர். ஆனால் லக்ஷ்மியின் தாயார் அச்சமயத்தில் அதிக தேகஅசௌக்யமாயிருந்ததால் லக்ஷ்மி போகமுடியவில்லை. லக்ஷ்மி வராமலிருந்தது பெரிய அவமரியாதை என்று அவளது மாமியார் கருதினாள். பழிக்குப் பழி வாங்க அவர்களுக்குச் சமயமும் வாய்த்தது. ஆனால் அவர்கள் வரம்பு கடந்தனர்.

பதினெட்டு மாதங்களுக்கு முன் லக்ஷ்மி பருவமடைந்தாள். இச்சுப செய்தியை லக்ஷ்மியின் பெற்றோர் தம் சம்பந்திகளுக்கு விரைவில் அறிவித்தனர். இரண்டு நாட்கள் களிப்புடன் அவர்களை எதிர்பார்த்தனர். மூன்று, நான்குநாட்கள்.... ஒருவாரமாயிற்று. வரவில்லை; கடிதமும் வரவில்லை. அவர்களது கோபத்தைத் தணிக்க லக்ஷ்மியின் பெற்றோர்கள் பல கடிதங்கள் எழுதியும் பதில் இல்லை. தம்மாலான மட்டும் முயன்றும் பயனில்லாது போகவே லக்ஷ்மி வீட்டில் பகவான்மீது பாரத்தைப் போட்டு வருத்தத்துடன் வாளாவிருந்தனள். ஆனால் வதந்தி மாத்திரம் வளர்ந்தது. வம்பர்கள் லக்ஷ்மியின் பெற்றோர்கள் அகம்பாவம் பிடித்தவர்களென்று பலவாறு பேசிய வார்த்தைகள் அப்பெண்ணின் புக்ககத்தார் காதில்விழ, அவர்கள் பெண்வீட்டாரை விடத் தங்களுக்கு அதிக கௌரவமுண்டென்று தம்மைத் தாமே பாராட்டிக் கொண்டனர். ஆகவே இருபுறத்தாரும் தத்தம

198911

கௌரவத்தை இழக்க மனமில்லாமல் மௌனம் சாதித்து மோசம் போயினர்.

ஆறுமாதங்களுக்குமுன் உலாவிய ஒரு வதந்தியைக் கேட்டு லக்ஷ்மியின் பெற்ரேர் திடுக்கிட்டனர். லக்ஷ்மியின் கணவன் வேறு விவாகம் செய்துகொள்ளப் போவதாக ஆதாரமற்ற செய்தி யொன்று கிடைத்தது. அதில் உண்மையிருக்காதென்று தெரிந்தும் லக்ஷ்மியின் பெற்ரேர் பெருங்கவலைக் காளாயினர். கடிதங்களுக்குப் பதில் கிடைக்காததனல் மீண்டும் வீணை எழுதத் தயங்கினர். முன்பே லக்ஷ்மியின் சாந்திமுகூர்த்தத்திற்கு ஏற்பாடு செய்வதைப் பற்றி அவர்கள் எழுதியதை மாப்பிள்ளை வீட்டார் காதில் போட்டுக் கொள்ளவில்லை. கடைசியில் அன்றைக்கு முந்திய நாள்தான் அவர்கள் இருதிறத்தாருக்கும் பந்துவான ஒரு பெரியவரை அனுப்பி யிருந்தனர்.

இருள் அதிகரித்தது. விதிசெல்லும் வழியைச் சிந்திக்க லக்ஷ்மிக்குச் சகிக்கவில்லை. மணம் முடிந்தும் மகிழ்ச்சியில்லாது அவள் இவ்வாறு வருந்த நேர்ந்தது. இரண்டுநாட்களுக்குமுன், தான் தன் கணவனுக்கெழுதிய கடிதத்தைப்பற்றி நினைத்துக் கொண்டிருந்தாள். அந்நினைவுடன் அவளது கண்களில் அவளது மனேதிடத்தைக் குறிப்பிடும் ஒளி தோன்றியது. தனது கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மெதுவாக எழுந்து ஆற்ருேரத்திலிருந்த ஒரு தோப்பினுட் சென்ருள்.

* * * *

அன்று காலை லக்ஷ்மியின் கணவன் ராஜகோபாலன் வீட்டில் அவனது தந்தை மத்தியஸ்தத்திற்காக வந்தவரை நோக்கிப் பின்வருமாறு கர்ஜித்தார்.

"என்ன ஐயா! எங்களுடைய மரியாதையையும் மதிப்பையும் விட்டுவிட்டு நாங்கள் இவர்களோடு பேசவேண்டுமென்ரு சொல்கிறீர்? நாங்கள் அழைத்தபோது பெண்ணை அனுப்பாமல் அவமதித்ததற்கு மன்னிப்புக் கேட்கவேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்குக் கொஞ்சமு மில்லை. எங்களை உதாசீனப்படுத்தலாமென்று அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிருர்கள்!"

"ஆனல் இந்தமாதிரி இப்பொழுது ஒருவருக்கொருவர் பேச்சில்லாமலிருப்பதற்கு அவர்கள் ஜவாப்தாரிகளல்லவே? அவர்களுக்காகப் பரிந்து பேசுகிறேனென்று நினைக்கவேண்டாம். இந்த மனஸ்தாபம் தீரவேண்டுமென்பதுதான் எனது விருப்பம். இரண்டு வீட்டாரும் எனக்கு வேண்டியவர்களே. உங்களுடைய பையனுக்கு இரண்டாவது விவாகம் செய்யப் போவ

தாகச் சொல்லிக் கொள்கிருர்கள். இது நியாயமா? உங்களுடைய பெயரையாவது காப்பாற்றிக் கொள்ளவேண்டாமா?" என்று அப்பெரியவர் சாந்தமாகவே மறுமொழிகூறினர்.

உடனே அங்கிருந்த ராஜகோபாலன் கடுஞ்சினத்தால் முகம் சிவக்க, "அது முழுப்பொய்! நான் இரண்டாவது கலியாணம் செய்துகொள்ளப்போகிறேனென்று உமக்கு யார் சொன்னது? இதோபாருங்கள்! இதுவரை நான் என் பெற்ருேர்மேல் கோபமாயிருந்தேன். இப்பொழுதுதான் உண்மை தெரிகிறது. இந்த வதந்தியை என் மாமனுரே வேண்டுமென்று பரப்பியிருக்கிருர். அவர் இன்னும் என்ன வேண்டுமானுலும் செய்வார் போலிருக்கிறது" என்று உரக்கக் கூறினுன்.

"என்ன ராஜு! நீகூட இப்படிப் பேசுகிருய்! வாஸ்தவத்தில் ...." அப்பெரியவர் மேலும் கூறுமுன் தபால்காரன் ஒரு கடிதம் கொண்டுவந்து கொடுக்க, ராஜு அதைத் திறந்து பார்த்தான். அவன் அதைப் படிக்கும்போது அவன் முகத்தில் அடங்காக் கோபமும் ஏமாற்றமும் கலவரமும் மாறி மாறித் தோன்றின. கடிதம் லக்ஷ்மியிடத்திலிருந்து வந்ததென்று மாத்திரம் சொல்லிவிட்டு, அவன் மேலும் படித்துக்கொண்டிருக்கும்போது,

"என்ன தைரியமடி அந்தப் பெண்ணுக்கு!" என்ருள் ஒரு பாட்டி.

"ஐயோ கடவுளே!" என்று அலறிக் கொண்டே ராஜகோபாலன் கடிதத்தைக் கீழே எறிந்து விட்டு வெளியே விரைந்தோடினுன். பெரியவர் கடிதத்தை எடுத்துப்பார்த்தார். உடனே "ஈச்வரா இதென்ன விபரீதமாயிருக்கிறது"! என்று சொல்லிக் கொண்டே கடிதத்தைப் பின்வருமாறு படித்தார்:

"........நான் இவ்வளவு சொல்லியும் எங்களுடைய நிரபராதத்தன்மையில் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படாவிட்டால் எனக்கு ஒரே வழிதான் தோன்றுகிறது. உங்களுடைய மனக் கவலைக்குக் காரணமாக இருக்க எனக்குச் சகிக்கவில்லை. நான் உங்களுக்குச் சந்தோஷ மளிப்பதற்குப் பதிலாக துக்கமும் மனஸ்தாபமுமே கொண்டுவந்தது இப்பொழுதுதான் தெரிகிறது. நான் எனக்காக வருத்தப்படவில்லை. என் தலைவிதி என்னை விடாது. என்னுடைய பெற்ருேர்களின் துயரத்தையும் உங்களுடைய பெற்ருேர்களின் அதிருப்தியையும்பற்றி நினைக்க என்னுல் பொறுக்க முடியவில்லை. நீங்கள் இந்தக்கடிதத்தைப் பார்க்கும் சமயத்தில் நான் துயரம் மிகுந்த இவ்வாழ்க்கையை விட்டு நீங்கிவிட்டால் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படவேண்டு மென்ற எண்ணத்தினுலும்,

உங்களுக்கு இனிமேலாவது சுகம் கிடைக்கட்டு மென்ற நினைவி னுலும் அப்படிச் செய்திருப்பேனேயன்றி என்னுடைய விவாகத்தி னுல் எனக்குச் சந்தோஷம் கிடைக்காமல் போனதற்காகவல்ல.

இருந்தாலும் இறந்தாலும் உங்களன்புள்ள,

லக்ஷ்மி.''

இதைக்கேட்டதும் அங்கிருந்தவர்களெல்லோரும் உயிரற்ற வர்போலாயினர். சிறிது நேரம் ஒரே நிச்சப்தமாயிருந்தது. அப் பெரியவர் கையிலிருந்த கடிதம் நழுவிக் கீழே விழுந்தது.

* * * *

ராஜகோபாலன் சிரமத்துடன் தன்னை மீறிக்கொண்டு வந்த அழுகையை அடக்க முயன்முன். தன்மனைவியின் ஊரை நோக்கி ரயில்வண்டி பறந்தோட அவன் இருதயம் 'படபட' வென்று அடித்துக்கொண்டது. எதிர் முகம் நோக்கி விரைந்து மறையும் சுற்றுப்புறக் காட்சிகளை அவன் சிறிதும் கருதவில்லை. தான் ஊர் போய்ச் சேருமுன் என்ன விபரீதம் நேர்ந்திருக்குமோ என்ற எண் ணத்தை அவனுல் மறக்கமுடியவில்லை. ஒரு தனி மனிதனின் துயரத்தைச் சிறிதும் உணராத வண்டித்தொடர் வழக்கம் போல் சென்றது.

* * * *

பாத்திரங்கள் கழுவப்படும் ஓசையின் நடுவே பதினெட்டாம் பெருக்குக் கொண்டாடிய பெண்கள் ஒவ்வொருவராய் ஆற்றை விட்டுக் கரையேறினர். விரைவுடன் இருள்கவிழ்ந்தது. வான வெளியில் விண்மீன்கள் மின்னின. ஒருவரை யொருவர் கூப்பிடும் குரல்களுக்கிடையில் ஒருகுரல் மாத்திரம் கவலையுற்ற தொனி யுடன் மீண்டும் மீண்டும் ஒலித்தது.

"லக்ஷ்மி! லக்ஷ்மி! எங்கே யம்மா இருக்கே?" என்று அவ ளுடைய தாயார் கூவினுள்.

"அவள் வண்டியிலேறிவிட்டாள் போலிருக்கே" என்முள் ஒருத்தி.

"அவளை வண்டியில் காணுமே!" என்று திடீரென மற்றெ ருத்தி கூறினுள்.

"ஆனுல் எங்கேதான் போயிருப்பாள்? அதுக்குள்ளே ஆத்துக்குப் போயிருப்பாளா என்ன?" என்முள் வேறொருத்தி.

பயத்துடன் எல்லோரும் சுற்றுமுற்றும் தேடினர். நதிக்கரைத் தோப்பிற்குள் ஒரு ஒற்றையடிப்பாதை சென்றது. லக்ஷ்மியின் தாயாரும் மற்றும் சிலரும் லக்ஷ்மியைக் கூப்பிட்டுக் கொண்டே

அவ்வழி சென்றனர். சிறிது தூரத்தில் ஒரு மூங்கில் மரத்தின் வேர்களில் ஏதோ சிக்கிக்கொண்டிருப்பதை அவர்கள் பார்த்தனர். அது லக்ஷ்மியின் புடைவைத்தலைப்பென்று தெரிந்ததும் அந்த ஸ்திரீகள் ஓடிச் சென்று நோக்கினர். அந்தோ! லக்ஷ்மி தண்ணீரில் மூழ்கியவண்ணமிருந்ததைக் கண்டனர். அவளது முகத்தில் புன் முறுவல் புலப்பட்டது. லக்ஷ்மியின் தாயார் "ஐயோ!" என்று அலறத்தொடங்கினாள்.

இதற்குள் லக்ஷ்மி மறைந்த செய்தி பரவ அருகே கோயிலி லிருந்த சிலபுருஷர்கள் வந்து சேர்ந்தனர். அவர்களுடைய உதவி யால் லக்ஷ்மி கோயிலுக்குள் எடுத்துச் செல்லப்பட்டாள். அவள் மூர்ச்சை யடைந்தாள் என்னும் செய்தியைக் கேட்டு அவளுடைய தாயாருக்குத் தேறுதலுண்டாகவில்லை. அவளுடைய பிரலாபத் துடன் மற்றும் சிலரும் சேர்ந்து கொண்டனர். சிறிது நேரத் திற்குமுன் சந்தோஷம் நிறைந்து விளங்கிய அவ்விடத்தில் அப் பொழுது அழுகைக்குரலே கேட்டது. இரண்டொரு மாதர்கள் லக்ஷ்மியின் மூர்ச்சையை மீட்க முயன்றனர். அவளுடைய அழகிய தோளில் மூங்கில் முள்ளினால் ஏற்பட்ட சிறிய காயம் தோன் றியது. புடைவையும் சிறிது கிழிந்து அவளுடைய வனப்புமிக்க தேகத்தைத் தோற்றுவித்தது. எல்லோரும் அதிகபயத்துடனும் ஏக்கத்துடனும் அவளையே உற்று நோக்கிக்கொண்டிருந்தனர்.

லக்ஷ்மி மெதுவாகத் தன்கண்களைத் திறந்தாள். உடனே "லக்ஷ்மி! லக்ஷ்மி! இங்கே பாரம்மா! நான்தான் அம்மா! என் கண்ணே! ஏனப்படிச் செய்தாய்? லக்ஷ்மி! பேசமாட்டாயா?" என்று அவள் தாயார் அன்பும் துக்கமும் மேலிடக் கூறினாள்.

திடீரென அவ்விடத்தில் அதிர்ச்சி மிகுந்த ஒரு குரல் கிளம்பி யது. மறுநிமிஷம், "எங்கே லக்ஷ்மி? உயிருடனிருக்கிறாளா? ஆ! தெய்வமே! நல்லவேளை!" என்று கூவிக்கொண்டே ராஜகோபா லன் வெளுத்து வியர்வை நிரம்பிய முகத்துடன் அக்கூட்டத் திடைதோன்றினான். சுற்றிலும் கூடியிருந்த ஸ்திரீகளைச் சற்றுங் கவனியாது அவன் விரைந்து லக்ஷ்மியின் அருகடைந்து அவளது கைகளைப்பற்றினான். லக்ஷ்மி மெதுவாய்த் திரும்பி அவனை நோக்கி னாள். உடனே நாணத்தால் அவள் முகம் சிவந்தது. எழ முயன் றாள். முடியவில்லை. ராஜகோபாலன் அவளைத் தன்மீது சார்த்தி அணைத்தவண்ணம் வண்டியை நோக்கி மெல்ல நடத்திச் சென்றான்.

"இதென்ன அதிசயமடி?" என்றாள் ஒரு கிழவி.

இரண்டு நாட்களுக்குப் பிறகு லக்ஷ்மி ஊஞ்சலில் படுத்துக் கொண்டிருந்தாள். ராஜகோபாலன் அவ்விடம் வரவும் விரைந்து எழுந்தாள்.

"லக்ஷ்மி! வேண்டாம். உன்னால் முடியாது. பேசாமல்படுத்துக் கொள்" என்று அவன் கூறியும் லக்ஷ்மி எழுந்து உட்கார்ந்தாள். ராஜகோபாலன் அவளருகில் அமர்ந்து அவளது கைகளைப் பிடித்துக்கொண்டு ஒரு கடிதத்தை அவளுக்குக் காண்பித்து, "இது என்ன தெரியுமா? அப்பாவிடமிருந்து வந்திருக்கிறது. இன்றைக்குச் சாயங்காலம் எல்லாரும் இங்கே வருகிறார்களாம்" என்று களிப்புடன் தெரிவித்தான்.

தன்னுடைய சந்தோஷத்தை அறிவிப்பதுபோன்று ஊஞ்சலும் 'கீச்'சென ஒலித்தது. பலகை அசையவும் லக்ஷ்மியின் கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் ததும்பிப் பாய்ந்தது.

ருஷ்யாவும் புத்தகாலயமும்

'இராஜ்ய அமைப்பும் புத்தகாலய இயக்கமும்' என்னும் தலைப்பின்கீழ் 'தென்னிந்திய உபாத்தியாயர்' (*South Indian Teacher*) என்னும் ஆங்கிலப்பத்திரிகையின் ஜூன் மாதத்திய இதழில் சென்னைச்சருவகலா சாலைப்புத்தகசாலைத்தலைவர் ஸ்ரீமான் எஸ். ஆர். ரங்கநாதனவர்கள். எம். ஏ., எல். டி., எப். எல். ஏ. ஒருகட்டுரை எழுதியுள்ளார். அதிற்காணப்படும் சிலசெய்திகள் வருமாறு:

ருஷ்யாவில் புத்தகாலய இயக்கம் 1919-இல் தொடங்கப்பட்டது. அப்பொழுது நூற்றுக்கு 80 பேர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக இருந்தனர். 1933-34க்குள் ஒவ்வொருவரும் வாசித்திருக்கும் நிலையை உண்டாக்க வேண்டுமென்று அரசியலார் உறுதிகொண்டனர். அந்நிலையை உண்டாகுதற்கு முக்கிய உதவியாகப் புத்தகாலயங்கள் மேற்கொள்ளப்பட்டன. பொதுமக்களுக்குப் பயன்படும் புத்தகாலயங்கள் இப்பொழுது பல்கிவருகின்றன. 1911-ஆம் வருஷத்தில் 90-லட்சம் புத்தகங்கள் பொதுப் புத்தகசாலைகளில் இருந்தன; 1934-இல் பன்னிரண்டுகோடியே நாற்பது லட்சம் புத்தகங்களாயின. 1926-இல் புத்தகம் வாசிப்போர் தொகை லட்சத்து இருபதினாயிரமாக இருந்தது. 1932-ஆம் வருஷத்தில் அத்தொகை ஒன்றரைக் கோடியாக உயர்ந்தது. இவ்வளவு உயர்வுக்கும் காரணம் ருஷ்யாவில் உள்ள ஊக்கமேயாகும். ஆயினும் இவ்வளவோடு ருஷ்யாவின் தலைவர்கள் திருப்தியுறவில்லை. இன்னும் கிராமப்புத்தக சாலைகளிற் பலவகையான குறைகளிருப்பதாகவும் அவற்றை நீக்கமுற்படவேண்டுமென்றும் அவர்கள் தீர்மானித்துள்ளார்கள். அக்குறைகளை நீக்குவதற்குப் பலமுறைகளை அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள். குடியானவர்களுக்கும் வயல்வேலை செய்பவர்களுக்கும் கைத்தொழிலாளிக்கும் புத்தகசாலைகள் அமைக்கப்படுகின்றன. குழந்தைகளுக்காகப் பலபுத்தகாலயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. புத்தகாலயத்தைப் பற்றிய கல்வியைக் கற்பிக்கத் தனிப்பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. புத்தக பரிபாலகர்களுக்காகப் பரீட்சைகளும் உயர்தரக் கலாசாலைகளும் உள்ளன.

வைகுண்ட பஸ் சர்விஸ்

ஜனரத்னம்

அன்று வீட்டில் பெரிய சமாராதனை நடந்தது. ஸர் சாம்பசிவம் தம்முடைய நண்பர் ஒருவருக்குத் திவான்பகதூர் பட்டம் கிடைத்ததற்காக விருந்து நடத்தினார். பிரதம விருந்தாளியாகிய திவான்பகதூர் ராமசேஷ பந்துலுவைச் சுற்றிலும் பலர் உட்கார்ந்தார்கள். ஆகாய விமானத்தில் பறந்து செல்வதைப் பற்றிச் சம்பாஷணை திரும்பியது. ராவ்சாஹிப் சுப்ரமணியம், "என் ஆயுஸ்காலத்திற்குள் ஒருதடவையாவது ஏறிவிடவேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. ஆனால் பயமாக இருக்கிறது. வயசு ஆகிவிட்டது அல்லவா?" என்றார். "இது என்ன இப்படிப் பயப்படுகிறீர்களே! நேற்று நான் பத்து ரூபாய் கொடுத்து ஒரு சுற்றுச் சுற்றிவந்தேன். அதெல்லாம் ஒன்றும் பயமில்லை" என்றார் கவி சிகாமணியான வக்கீல் கோதண்டராம். அச்சமயம் ராமசாமி, "பெரியப்பா!" என்று கூப்பிட்டுக்கொண்டு வந்தான். உடனே ஸர் சாம்பசிவம், "ஏன் ராமசாமி? இங்கே வா; ஸார்! இவன் கோச் வண்டியிலேயே வானவில்மீது சவாரி செய்து அமராவதி, அளகாபுரி, பிருமலோகம் எல்லாம் போய்ப் பார்த்து வந்து விட்டான்" என்று அவனை எல்லார் முன்னிலும் பரிகாசம் செய்தார். உடனே ராவ்சாஹிப், "என்ன ஸார்! சிறுவன் ஏதோ மனோராஜ்யக்கோட்டை கட்டினால் அதைப் பிரமாதப்படுத்தி அப்போதும் பரிகாசம் செய்வதுதானா உமக்கு! உமக்குக் கல்பனாசக்தியே கொஞ்சமும் கிடையாதா?" என்று சிரித்தார். ஸர் சாம்பசிவம் முகத்தைச் சுளித்துக்கொண்டு, "இவனைத் திருச்சிராப்பள்ளிக்கு அனுப்பிவிடுகிறேன். அங்கே கல்பனாசக்தியைக் காட்டட்டும். எங்கே ராமசாமி நீ கட்டிய கவியைச் சொல். உன் கல்பனாசக்தியை இவர் பரீட்சை செய்யட்டும்" என்றார். உடனே ராமசாமியும் ஏதோ ஒரு நோட் புத்தகத்தைக் கொணர்ந்து தான் எழுதியிருந்ததை வாசித்தான்.

"பேஷ் நன்றாக இருக்கிறது. ஏன் அழுகிறாய்?"

"அங்கே அளகாபுரியில் நான் சொன்னபோது ஒருவரும் பரிகாசம் செய்யவில்லை. இப்போது இது நன்றாக இல்லை."

"என்ன! இந்தப்பாட்டு நீ உண்டாக்கியதா?"

"ஆம். அங்கே எல்லாரும் பாட்டாகவேதான் பேசினார்கள்."

"வாஸ்தவம்! நான் நம்புகிறேன்."

"நம்புகிறீர்களா? மாமா! நிசமாகவா? நாம் புறப்பட்டு அவர்களைப் போய்ப்பார்க்கலாம்" என்று ராமசாமி குதித்தான்.

"சேச்சே! நான் அப்படி சொல்லவில்லை" என்று ராவ்சாஹிப் தயங்கினார்.

"மாமா! நான் சொல்வது உண்மை. இருட்டான மலை மீது ஜோதியான வெளிச்சம் காணப்பட்டது. நான் பார்த்தேன். அந்த அரண்மனையில் கம்பர், காளிதாசர் எல்லாரும் என்னை இருக்கும்படி சொன்னார்கள் ஆனால்...."

"எனக்குக் கொஞ்சம் சிரமமாக இருக்கிறது. வெளியே தாழ்வாரத்தில் சோபாவில் சாய்ந்து கொள்கிறேன். இவர்கள் எல்லாரும் உனது பேச்சைக் கவனிக்கவில்லை. சீட்டு ஆட்டத்தில் புகுந்து விட்டார்கள். உன்கதையை அவ்விடம் சொல்" என்று ராவ்சாஹிப் எழுந்து ராமசாமியை அழைத்துக்கொண்டு வெளித் தாழ்வாரத்துக்கு வந்து சோபாவில் உட்கார்ந்தார்.

"கேளுங்கள். மாமா! அங்கே இருந்து விடுவேன். ஆனால் உங்கள் எல்லாரையும் பற்றிய நினைவுவந்தது. உங்களையும் இட்டுக் கொண்டு போகவேண்டும் என்ற ஆசை உண்டாகியது. ஆனால் அவர்கள் 'அடபைத்தியமே! உன் பேச்சை ஒருவரும் நம்பமாட்டார்கள்; வீணாகப் பரிகாசத்திற் காளாகாதே' என்று சொன்னார்கள். 'இல்லை, ராவ்சாஹிப் ஒருவராவது என்பேச்சை நம்புவார்' என்று சொன்னேன். அது வாஸ்தவமாகவே முடிந்தது" என்றான் ராமசாமி.

"அப்படியா சொன்னாய்!" என்று அவர் மகிழ்ச்சியுடன் ராமசாமியைக் கட்டி அணைத்துக்கொண்டார்; "நாளைக்காலை நாமிருவரும் போவோம்" என்றார். ராமசாமிக்கு வெகுசந்தோஷம்; குதித்துக் கொண்டு தோட்டத்திற்கு ஓடினான். ராவ்சாஹிப் நன்றாக நித்திரையிலமர்ந்தார்.

* * * *

காலை சூரிய உதய சமயம். சாலையில் கைகாட்டி மரத்தண்டை ராவ்சாஹிப் வந்து காத்திருந்தார். ராமசாமியைக் கூப்பிட வில்லை. ஆனாலும் அவன் அதோ ஓடிவருகிறான். என்ன ஆச்சரியம். 12 குதிரைகள் பூட்டிய கோச்சுவண்டி தயாராக இருந்தது.

"மந்திரமா! ஜாலவித்தையா! மாயமா!" என்று முணுமுணுத்தார் அவர். உடனே கோச் டிரைவர் திரும்பிப் பார்த்தார். அவர் முகத்தைப் பார்த்ததும் ராவ்சாஹிப் உடல் கிடுகிடுத்தது. "நீங்கள் இங்கே எப்போது வந்தீர்கள்?" என்று மெதுவாகக் கேட்டார். ராமசாமி ஓடோடியும் வந்து வண்டியில் ஏறிக்கொண்டான்; "வாருங்கள் மாமா! நாழிகையாயிற்று. உள்ளே ஏறிக் கொள்ளுங்கள்" என்று கையைப் பிடித்து இழுத்தான். "நம்ப முடியாததை எப்படி நம்புவது?" என்றார் ராவ்சாஹிப். பிறகு வண்டியில் உட்கார்ந்தார். உடனே கோச்சுவண்டிக் கதவு மூடப் பட்டது. இன்று ஒரு கண்டக்டரும் காணோம். வண்டியும் நகர்ந்தது. ராவ் சாஹிப் வண்டியைத் தொட்டுப்பார்த்தார்; "என்ன! வண்டி ஓடுகிறதா?" என்றார்.

"ஆஹா! ஹை! ஹை!" என்று ராமசாமி கூவினான். ராவ்சாஹிபுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. மெதுவாக இறங்கிவிடலாமா என்று கதவைத் தடவிப் பார்த்தார். உள்ளே இருட்டாயிருந்தது: "என் ஆயுஸ் காலத்தில் அநேக ஆச்சரியமான சம்பவங்களை அனுபவித்தேன். இது பெரிய விந்தையாக இருக்கிறது" என்று நினைத்தார். இதற்குள் ராமசாமி டிரைவரைக் கூப்பிட்டு இரண்டு 'ரிட்டர்ன் டிக்கட்கள்' கேட்டான். ஜன்னல்வழியாக அவைகளைப் பெற்றுக் கொண்டான். டிரைவர் திரும்பியதைப்பார்த்தவுடன் ராவ்சாஹிப் மறுபடியும் அவர் முகத்தைக் கவனித்தார். உடனே ராவ்சாஹிப் உடல் நடுங்கியது. "அவர்யார் தெரியுமா? இவ்விதம் இயலாதசெய்கை உண்டாகுமா?" என்றார் ராவ்சாஹிப்.

"இந்த டிரைவரை எனக்குத் தெரியவில்லை; நேற்று என்னுடன் வேறு ஒருவர் பேசிக்கொண்டுவந்தார்."

"தெரியவில்லையா! ஏதோ உன் அதிர்ஷ்டம் எனவேண்டும். என் பூஜை அலமாரியில் வெல்வெட் பயிண்டுசெய்து வைத்திருக்கிறேனல்லவா அழகான சிறுபுத்தகங்கள்?"

"ஆம்! வாணிவிலாச பிரசில் வாங்கிவந்தீர்கள். என்னமோ சம்புடம் என்றுபெயர்."

"அட! அசடே! அப்புத்தகங்களை எழுதிய சங்கராசாரியார் தான் இவர்."

ராமசாமிக்கு ஒன்றும் விளங்கவில்லை; சற்றுநேரம் சும்மா இருந்தான். பிறகு, "இன்றைக்கு மங்கம்மாளைப் பார்க்கச் சௌகரியப்படுமோ என்னவோ! நேற்று நாங்கள் இருவரும் புஷ்பமாலைகளை எறிந்து விளையாடினோம். அப்போது...."

"முழுமூடா! வெல்வெட் புத்தகம் எழுதிய ஆசாரியார் வெளியே உட்கார்ந்து அதோ வண்டி ஓட்டுகிறார். நீ உன் மங்கம் மாளையும் குப்பம்மாளையும் பற்றிப் பிதற்றுகிறாய்!" என்று கடிந்தார்.

"இல்லை, நீங்கள் பார்த்தீர்களானால் இப்படிப் பேசுவீர்களா?"

"இன்னும் யாருடன் ஓடி விளையாடினாய்?"

"ஒருவன் பீமன்.... இல்லை.... அவனுக்கு முந்தி ஒருவனுடன் விளையாடினேன்; அவன் இரணியன்."

ராவ்சாஹிப் பெருமூச்சுவிட்டார். "ஐயோ! நீ உன் நேரத்தை வீணாகக் கழித்துவிட்டாய். இவ்வளவு அதிருஷ்டமாக உனக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டபோது முழுமூடனாகப் பூக்கள் பறித்தும் மாலை எறிந்தும் ஓடியும் விளையாடினாய். படித்த அறிஞன் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு அவரவர்களிடம் சரியானபடி பேசி ஞானமார்க்கத்தை அடைந்து தத்துவத்தைக் கற்றுக்கொள்வான். ஒரு கம்பர், தாயுமானவர், ஷேக்ஸ்பியர், இதோ வண்டி ஓட்டுகிறாரே இவர் முதலியவர்களைப் பார்க்கும் அதிர்ஷ்டம்வந்தால் ஓடி விளையாடினேன் என்கிறாயே. ஐயோ! அடிமுட்டாளே!" என்று கண்ணீர் உதிர்த்தார்.

"மாமா! நான் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன், நீங்கள் பெரிய அறிஞர் என்று. அவர்களுடன் நீங்கள் திறமையாகச் சம்பாஷணை செய்வீர்கள் என்று எச்சரிக்கை செய்திருக்கிறேன்."

"அவ்வளவு புத்தி இருந்ததே உனக்கு, போகட்டும்! அவ்விடம்போனவிடம் ஏதேனும் அசட்டுத்தனமாகப் பேசி என்னை அவமானத்துக்கு உள்ளாக்காதே. என் கிட்ட நெருங்கி இரு. இந்த உந்நத புருஷர்களிடமும் ஸ்திரீகளிடமும் நீயாகப் பேசாதே. அந்த 'டிக்கட்டுகளை' என்னிடம் கொடு. நீ சிறுவன்; கெட்டுப் போக்கிவிடுவாய்."

ராமசாமி டிக்கட்டுகளைக் கொடுத்துவிட்டான். ஆனால் அவனுக்கு வருத்தம் உண்டாகியது. 'முதலில் நான் சொன்னதை இவர்கள் ஒருவரும் நம்பவில்லை, பிறகு இப்போது என்னையே விரட்டுகிறார்; இந்த இடத்திற்கு வழியே இல்லை என்றார்; இப்போது வந்தபிறகு பேசாதே, விளையாடாதே என்று கண்டிப்புச் செய்கிறார்; வீட்டில் பெரியப்பாவும், பள்ளிக்கூடத்தில் வாத்தியாரும் மிரட்டுவது போதும் என்று ஆயிற்று. இங்கேயும் இவர் மிரட்டல்வந்து விட்டதே' என்று எண்ணினான்.

"அதோ மாமா! வானவில் ஆரம்பிக்கிறது" என்று கூவினான். "தொந்தரவு செய்யாதே, நான் இந்தக் காட்சியை அனுப

வித்துக் கொண்டிருக்கிறேன். அடடா! உன்னுடன் வந்தேனே. பக்தி சிரத்தையும் மதாபிமானமும் உள்ள ஒருநல்லவருடன் நான் வந்திருக்கலாகாதா?" என்று கோபித்தார் ராவ்சாஹிப். ராமசாமி கண்களில் நீர்பெருகியது. உதடுகளைக் கடித்துக்கொண்டான். வெளியே இருள் மிகுந்து கரியமேகங்கள் சூழ்ந்துகொண்டன. வானவில் காணப்படவில்லை. வண்டியைச் சுற்றிலும் சோவென்று மழை கொட்டியது. டிரைவர் ஒன்றையும் லட்சியம் செய்யாமல் ஓட்டிக்கொண்டுபோனார். ஒருமின்னல் வெளிச்சத்தில் தூரத்தில் அரண்மனை புலப்பட்டது. சிறிதுநேரத்திற்கெல்லாம் மழைநின்றது; ஆனால் நல்ல வெளிச்சம் இல்லை. மலை உயரத்தில் கோச்சுநின்றது.

"மாமா! அதோ அரண்மனை; இருட்டுமேல் சூரிய வெளிச்சம்; அதோ எல்லாரும் நிர்த்தனம் செய்கிறார்கள். சிலர் ஓடி விளையாடுகிறார்கள். இறங்குங்கள்; நாமும் போவோம்"

"என்ன மறுபடியும் புரளிசெய்ய ஆரம்பித்துவிட்டாய்? ஒன்றையும் காணோமே."

ராமசாமி தாளம்போட்டுக்கொண்டு தூரத்தில் தான் கண்டவர்கள் பாடுவதுபோல அவனும் பாடினான்.

"இந்தப்பாட்டு யார் சொல்லிக்கொடுத்தது?"

"அதோ பாருங்கள்! எவ்வளவுபேர் குதித்துக்கொண்டு பாடுகிறார்கள்!"

ராவ்சாஹிப் எட்டிப்பார்த்தார், உடனே தலை கிறுகிறு என்று சுற்றியது. "ராமசாமி! வண்டியைத் திருப்பு" என்று கூவிக்கொண்டு வண்டியில் சாய்ந்தார்.

"இதோ அரண்மனைவாசல் வந்துவிட்டது. இவ்வளவுதூரம் வந்தபிறகு உள்ளே போகாமல் திரும்புவதா?" என்று ராமசாமி எட்டிப் பார்த்தான். வாயிலில் காவல்வீரன் நின்று கொண்டிருந்தான். கையில் பெரிய கதாயுதம் தாங்கியிருந்தான். "பீமா! இதோ வந்துவிட்டேன். என்னுடன் ராவ்சாஹிப்பை அழைத்து வந்தேன். நேற்று விளையாட்டில் பாதி இருக்கிறதல்லவா?" என்று ராமசாமி கூவினான்.

"ராவ்சாஹிப் என்னை இட்டுவந்தார் என்று சொல். என்னை நீயா அழைத்து வந்தாய்?" என்று முணுமுணுத்தார் பெரியவர். "பையன் திரும்பிவந்துவிட்டான்" என்று எல்லாரும் கூவினார்கள். பீமன்வந்து பையனை இறக்கிவிட்டான். "பீமா, எனக்கு ஒன்றும் தெரியாது. நான் முட்டாள். சற்று இரு; இதோ பெரிய அறிஞர்

ராவ்சாஹிப் இருக்கிறார். அவரும் இறங்கட்டும். அவரையும் அழைத்துக் கொண்டால்தான் எனக்கு நல்லது" என்றான் ராமசாமி. பீமன் அப்பையனைத் தூக்கித் தன் தோளில் நிறுத்திக் கொண்டு நடந்தான். ராவ்சாஹிப் விம்மி விம்மி அழுகிறார். பீமனையும் காணோம், ராமசாமியையும் காணோம். டிரைவரைப் பன்முறை கும்பிட்டார்; "ஆசாரியரே! இந்த வண்டியிலேயே நான் இருக்கிறேன். என்னைத் திரும்பிப் பூலோகம்கொண்டுபோய்விட்டு விடும். உம்மைக்கெஞ்சிக் கேட்கிறேன். உங்களைத் தினமும் பூஜை செய்கிறேன். உங்கள் புஸ்தகங்களுக்கு அர்ச்சனை செய்கிறேன். நீங்கள் பிறந்ததினத்தில் சமாராதனை செய்கிறேன்; கோதானம் செய்கிறேன். உங்கள் பாஷ்யக்ரந்தங்களை நெட்டுருப் பண்ணியிருக்கிறேன். தினமும் பாராயணம் செய்துவருகிறேன். என்னைக் காப்பாற்றுங்கள்" என்று குப்புற விழுந்தார். டிரைவரோ இருந்த இடத்தைவிட்டு நகரவில்லை; "நீ சொல்வது வாஸ்தவம். ஆனால் நீ என்னைச் சரியாக அறிந்துகொள்ளவில்லை. மார்க்கத்தின் முடிவு நானல்ல. நான் உணர்வைக் காட்டினதல்லாமல் ஜீவனைக் காட்டவில்லை; நீயே களங்கமின்றித் தைரியமாக எழுந்து நின்று நட. அந்தப் பையன் மனதுபோலச் சந்தேகமேயில்லாமல் நிச்சயமாயிருந்தால் பலம் உண்டு. ஆனந்தம் என்பது ஒரு சக்தி; அதை ஆசிரயிப்பது வேஷத்தினலன்று; உண்மையில் உணர்வது தான் அந்த அனுபவம்" என்று சொல்லிவிட்டு வண்டியை ஓட்டினர். ராவ்சாஹிப் வண்டியினின்று வழுக்கிக் கீழேவிழுந்தார்.

திடீர் என்று தாழ்வாரத்தில் இருந்த சோபா புரண்டு கீழே சாய்ந்தது; அதில் படுத்திருந்த ராவ்சாஹிப் உருண்டு விழுந்தார். சீட்டு ஆடிக்கொண்டிருந்த எல்லாரும் ஓடிவந்தனர்; ராவ்சாஹிபைத் தூக்கி எடுத்தனர்; ஒருவர் டெலிபோனில் டாக்டருக்குச் சொல்லி அனுப்பினர். ஆனல் என்ன பிரயோசனம்? ராவ்சாஹிப் இறந்துவிட்டார்; மூச்சு நின்றுவிட்டது. ஆனல் அவரை முதலில் தூக்கிய வக்கீல் கோதண்டராம் மட்டும் அவர் ஏதோ பேசியதாகவும் அதில் "ராமா—ஆனந்தம்—உண்மை" என்னும் வார்த்தைகள் கேட்டதாகவும் சொல்கிறார்.

செல்லாக் காசு

வி. அனந்தகிருஷ்ணன், பி. ஏ.

இந்தச் செல்லாக்காசுகளைக் காணும்போதெல்லாம், பட்டமிழந்த அரசர்களின் நினைவு வருகிறது. இத்தனை நாளாக அதற்கிருந்த மதிப்பென்ன? இப்பொழுது அது படும் அவஸ்தையென்ன? உலகவாழ்வே இப்படித்தான் என்று சப்திக்கிறது; கஞ்சிராவின் சதங்கையாக இருந்துகொண்டு 'தோசைக்கல்' ரூபத்தில் பாலர்கள் தோழனுகப் பரிணமிக்கிறது; ஏழைப் பெருங்காயக்காரனுக்கு நிறுப்பதற்குப் படியாக உதவுகிறது; சிலவீணர்கள் 'வாழைப்பழத்தில் பொதிந்து விழுங்கு' என்று சொல்வதற்கு இலக்கியமாக அமைகிறது. இன்னும் எத்தனையோ சில்லரை உபகாரங்கள்!

"சூரியன் ஒளிகுன்றி அஸ்தமிக்கும் சமயத்தில் பூர்ணசந்திரன் ஜோதிமயமாய் வானவீதியில் தோன்றுகிறுன். இதுபோலவே, ஒருவன் புகழ், செல்வாக்கு இவைகள் மறையும்போது மற்றொருவன் இவைகள் ஓங்க, எழுகிறுன்" என்பதாகக் காளிதாஸன் ஓரிடத்தில் பாடியிருக்கிறுன். இந்தச் செல்லாக்காசு இப்படி அல்லல்படும்போது புது நாணயங்கள் மனிதனையே ஆள்கின்றன.

இவ்விதம் கேவலமாகச் செல்லாக்காசுகளைப்பற்றிச் சொல்வதும் நினைப்பதும் நமது அறிவீனம் என்பது என்னுடைய கொள்கை. முன்பு அவைகள் ஆற்றிய தொண்டை நினைக்கும் போது, அவற்றைப்பற்றி அகௌரதையாக நினைப்பது தவறு என்று நிதர்சனமாகிறது. அப்படி, 'செல்லாக்காசு' என்று முகத்தில் விட்டெறியப் பட்டாலும், அது நமது சாமர்த்தியக் குறைவினுலேயே தவிர வேறில்லை.

உதாரணமாக ரங்கநாதன் கலியாணத்திற்குப் போயிருந்தோம். நாங்கள் நாலுபேர்—மணி, நாகபூஷணம், கிட்டு, நான். போகும் போது 'ரயில்சார்ஜ்' செலவழித்துக்கொண்டுதான் போனும்.

கலியாணம் எங்கள் நாலுபேரால்தான் சோபித்தது. இல்லை என்கிறீர்களா? எங்கே, ரங்கனைக்கேளுங்கள்; அவன் இல்லை என்று சொல்லட்டும்! உம், நல்லது.

முகூர்த்தம் எப்பொழுது முடியப்போகிறது என்று காத்துக் கொண்டிருந்து, உடனே ஆரம்பித்துவிட்டோம், 6-கைகள் மூன்று சீட்டு ஆட்டம். சாப்பாடாவது, கூப்பாடாவது!

கிட்டுவுடைய அப்பா புரோஹிதர்; பின் செல்லாக்காசுகளுக்குப் பஞ்சமா அவரிடம்? ஆனால் அவருக்கு அவைகளைச் செலவழிக்கத் தெரியவில்லை. "இங்கே கொடு அப்பா, அத்தனை செல்லாக்காசையும்; நானச்சு செல்ல வைத்துட்டால் எனக்கு; இல்லாவிட்டால் உனக்கு" என்று ஒப்பந்தம் பேசி அவ்வளவு செல்லாக் காசுகளையும் கொண்டுவந்திருந்தான். பொய்சொல்வது போலிருக்கும்: அவ்வளவு காசையும் எண்ணி எண்ணிச் செல்லவைத்தான் கிட்டு! அவ்வளவையும் பின்பு விளையாடி இழந்தான் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆனாலும் செல்லவைத்து விட்டானா இல்லையா?

இரண்டாவது தினத்தன்றே அவ்வூர் சலித்துப் போய்விட்டது. ஊருக்குச் செல்லவேண்டுமென்ற கிளர்ச்சி எங்களுக்கு ஏற்பட்டது. ஆனால் கையில் பைசாக் கிடையாது. நாங்கள் சென்றுவிட்டால் பந்தலின் கதி என்னவாகுமென்று நினைக்கும் போது ஒரு சொட்டுக் கண்ணீர் தோன்றி மறையத்தான் செய்தது.

ரங்கநாதனைக் கேட்டோம்:

"ஏண்டா ரங்கா, ஏதாவது பணம் இருந்தால் கொடு. ரயில் செலவுக்கு வேணும்; கையில் தம்பிடி கிடையாது" என்றான் எங்களில் ஒருவன்.

"போங்கடா! இப்போது வந்து கேட்கிறீர்களே. என்னிடம் ஐசா பைசா நை. ஏன், எல்லாரும் ஒன்றாய்ப்போனால்?"

"அடபோடா! வந்தாச்சு, இருந்தாய்விட்டது. கொஞ்சம் அவசரமாக ஊரில் அலுவல்."

"பணமில்லையே!"

"அப்பாவிடம்" என்று சொல்லிக் கண்ணைச் சிமிட்டினான் கிட்டு; அது எங்களுக்குள் ஒரு ஸமிஞ்ஞை. உடனே ரங்கன் மச்சுப்படியேறிச் சென்றான்.

நாங்கள் காப்பி குடித்துவிட்டுவரும் பாதையில் ரங்கன் குறுக்கிட்டான்; ரகசியமாக என்கையில் ஏதோ ஒன்றைக் கொடுத்து இறுக மூடிவிட்டுப் பின்னே சென்று, "அவசரமானால் போய் வாருங்கள்" என்றான்.

ரங்கநாதனுடைய அப்பாவிடம் சொல்லிக்கொண்டு ரயில் ஸ்டேஷனை நோக்கிச்சென்றோம்.

கிட்டு (என்னிடம்):—ஏண்டா சாமா? அந்தப்பயல் உன்னிடம் எவ்வளவு கொடுத்தான்?

நான்:—ஒரு ரூபாய்.

கிட்டு:—திருடினது, திருடியதிலே கூட ஒரு ரூபாய் அதிகம் எடுத்திருக்கக்கூடாதா? தரித்திரப்பயல்!

ரயில் பிளாட்பாரத்தில் பிரவேசித்ததும் என்னைக் கொண்டு டிக்கட் வாங்கச்சொன்னார்கள். ஜன்னலண்டைபோய் "நாலு டிக்கட்கள்" என்று கத்தினேன். கிணீர் என்று ரூபாய் திரும்ப வந்து விழுந்தது. செல்லாக்காசாம்! ஆனமட்டும் தகரார்செய்து பார்த்தேன். அவர், "போகிறாயா, இல்லையா?" என்று கேட்டுவிட்டார்.

இதற்குள் எதையோ பறிகொடுத்தாற்போல் சத்திக்கொண்டு கிளம்பிவிட்டது ரயில்.

நாங்கள் சிறிதுநேரம் அங்கேயே நின்றோம். அதிலிருந்து இரண்டாவது ஸ்டேஷன்தான் எங்கள் ஊர்.

"வாங்கடா எல்லோரும்" என்று அட்டகாசமாய்க் கிட்டு எல்லோரையும் அழைத்துக்கொண்டு ரயில் தண்டவாளத்தின் மேலே அடுத்த ஸ்டேஷனுக்கு நடக்கலானான்.

"இந்த ரூபாயைச் செல்லவைக்காவிட்டால் நான் ஒரு ஆண்பிள்ளையா?" என்று மார்தட்டினான்.

அடுத்த ஸ்டேஷனில் உட்கார்ந்திருந்தோம். அடுத்த ரயிலும் வந்து சேர்ந்தது.

கிட்டு 'புக்கிங் ஆபீஸ்' அறைக்குள் கம்பீரமாய் நடந்து சென்றான். அங்கிருந்த நாற்காலியில் கால்மேல் கால்போட்டுக்கொண்டு உட்கார்ந்தான். எங்கள் ஊருக்கு நான்கு இரண்டாவது வகுப்பு டிக்கட்டுகள் கேட்டான். பதினைந்தணாவாயிற்று. டிக்கட் கையில் வந்ததோ இல்லையோ, வெளியேவந்து எல்லோரையும் தள்ளிக் கொண்டு வண்டியில் ஏறிவிட்டான். நாங்களும் அவனைப் பின்பற்றினோம். வண்டியும் புறப்பட்டுவிட்டது.

"மீதி ஓரணாவிற்காகக் காத்துக்கொண்டிருந்தால் ரூபாய் செல்லாதென்று பார்த்துவிடுவான்! பதினைந்தணாத்தான் கிடைத்தது என்று நினைத்துக்கொள்வோமே!" என்றான் கிட்டு.

செல்லாக்காசு விஷயமாய் நான் சொன்னதென்ன, சரிதானா?

உபாத்தியாயர் பகுதி

குழந்தைகளின் கல்வி

பி. எஸ். நாராயணசாமி

1. இந்திரியப் பயிற்சி

இவ்வுலகத்தில் வஸ்துக்களைப் பற்றிய விஷயங்களை யெல்லாம் பஞ்சேந்திரியங்களின் மூலமாகவே நாம் அறிகிறபடி யால், போதிய பயிற்சியினால் குழந்தைகளின் பஞ்சேந்திரியங்களைக் கூர்மைப்படுத்தல் அவசியமாகிறது.

கண்களால் அறியக்கூடியவை பரிமாணம், உருவம், நிறம் இம் மூன்றுமாம்; காதால் அறியக்கூடியவை சப்த பேதங்கள்; நாவால் அறியக்கூடியது ருசி; தோலால் அறியக்கூடியவை சீதோஷ்ணம், சுரசுரப்பு இவ்விரண்டுமாம். தசை நாரால் அறியக்கூடியது பளு.

(1) பரிமாணம் (2) உருவம் (3) நிறம் (4) ஓசை (5) ருசி (6) சீதோஷ்ணம் (7) சுரசுரப்பு (8) பளு ஆகிய இவை களில் தாரதம்யத்தை இலகுவில் கண்டறியும் ஆற்றலைக் கூடிய வரையில் விருத்திசெய்து கொள்ளப் பயிற்சி அவசியமாகிறது. மனிதர் பெரியவர்களான பிறகுகூடக் கற்கும் விஷயங்களை அல சிப்பார்க்குமிடத்து மேலே சொல்லப்பட்ட விஷயங்களே அவை களுக்கு அடிப்படையாக இருப்பது வெளிப்படை. பெரியவர் கள், அவர்கள் அன்றன்று செய்யும் வேலைகளில் ஸாதகம் அடை வதோ அல்லது பாதகம் அடைவதோ மேற்சொல்லப்பட்ட எட்டு விஷயங்கள் ஸம்பந்தமாகத் தாரதம்யம் அறிவதில் அவர்களடைந் திருக்கும் ஆற்றலைப் பொறுத்து நிற்கின்றன. இவ்வாற்றல் ஒவ் வொருவருக்கும் பிறவியிலேயே கடவுளாற் கொடுக்கப் பட்ட தெனினும், கொடுக்கப்பட்ட வித்துப்போன்ற இவ்வாற்றலை மனி தப்பிரயத்தனத்தால் அதாவது தக்கபயிற்சியால் கூர்மைப்படுத்த முடியு மென்பதே கல்விமுறை நிபுணர்களின் துணிபு. ஆகையால் இந்திரியப்பயிற்சி இன்றியமை யாததாகிறது.

ஒருவனுக்கு ஒரு கை ஊனம் என்றால் அவனது மற்றொருகை அதிகமாக வன்மையுற்றிருப்பதை நாம் காண்கிறோம். ஏன்? ஊன மான கையால் செய்யப்படவேண்டிய காரியங்களையும் சேர்த்து மற்றொருகை செய்துவருவதுதான் அதற்குக் காரணம்.

இதுபோலவே கண் தெரியாத ஒருவன் எதையும் தன் கைக ளால் தடவிப் பார்த்தே அதனுடைய விஷயங்களில் பலவற்றை யறிகிறான். இவன் இந்த சாதனத்தா லறிந்துகொள்ளுமளவு, கண் தெரிந்தவன்கூடச் சில சமயங்களில் தெரிந்துகொள்ளத் தவறுவது கண்கூடு. ஏன்? வஸ்துக்களைத் தடவிப்பார்க்கும் சாதனம் ஒன்றே குருடனுக்கு உளதாதலாலும், அதைக்கொண்டே அவன் பல காரியங்களைச் சாதித்துக்கொள்ள வேண்டி இருப்பதாலும், அந்த ஆற்றல் அவனிடத்தில் மிகுதியும் விருத்தியடைந்திருக்கி றது. இப்படிப்பட்ட உதாரணங்களினால் ஸ்பர்சத்தால் அறியும் சக்தி அளவிடற்பாலதன்றென்று நாம் அறிகிறோம். சாமானிய ஜனங்கள் இச்சக்தி இத்தகையதென்று அறியாராதலாலும், இது குருடருக்கே அவசியமென்றெண்ணி இருப்பதாலும், அவர்கள் பெரும்பாலும் கண்கள் மூலமாகவும் அதற்கடுத்தாற் போல் காதுகள் மூலமாகவும் குழந்தைகளுக்கு விஷயங்களைப் புகட்டு வதில் திருப்தி அடைகிறார்கள். ஆகையினால் குழந்தைகளின் கண்களும் காதுகளும் மட்டுமே தக்கபயிற்சி அடைகின்றனவே யன்றி மற்றச்சக்திகள் கவனிக்கப்படாமலே போகின்றன.

இந்திரியப் பயிற்சி மிகஅவசியமென்றும் அவைகளுக்குள் வஸ் துக்களைத் தொட்டும் தடவியும் பார்த்தறியும் சக்தியை விருத்தி செய்வது மிக்க நன்மையைப் பயக்கக்கூடிய தென்றும் உலகத் திற்கு வெகு தீவிரமாக எடுத்துச் சொல்ல ஆரம்பித்தவர் டாக்டர் மாண்டிஸோரி என்னும் மாதுசிரோமணியாவர். இம் மாது இப் போதும் இத்தாலி தேசத்துத் தலைநகராகிய ரோமாபுரியில் இருந்து வருகிறார். இவர் அதிக ஊக்கத்தோடு கல்விமுறைகளில் ஆராய்ச் சிகள் பலவும் நிகழ்த்திவருகிறார். இவர் குழந்தைப்பயிற்சிக்காக நிறுவியமுறை 'மாண்டிஸோரிமுறை' என்று வழங்கிவருகிறது. இம் மாது வைத்தியத் தொழிலில் பெரியதொரு பரீக்ஷையில் தேர்ச்சி பெற்று ஒரு வைத்தியசாலையில் வேலைக்கு அமர்ந்தாள். அங்கே செவிடு, ஊமை, குருடு முதலான குழந்தைகளைக் கவனிக்க வேண் டியவேலை இவருக்கு ஏற்பட்டது. அக்குழந்தைகளோடு பழகிவரும் நாட்களில் இந்திரியப் பயிற்சி மிக்க பயனளிப்பதாகக் கண்டார். பிறகு அப்பயிற்சி முறைகள் சாமானியக் குழந்தைகட்கும் ஏற்ற னவாக இருக்கக்கண்டு அம்முறையை அவர்களுக்கும் வழங்க ஆரம் பித்தார்.

வஸ்துக்களின் உருவமும் பரிமாணமும் கண்களாலும் அறி யப் படுகின்றன; ஸ்பர்சத்தினாலும் அறியப்படுகின்றன. கண்களில் லாதவர்கள் தாம் அவைகளை ஸ்பர்சத்தால் அறிய வேண்டுமென்ற

தப்பான அபிப்பிராயத்தைவிட்டுக் கண் தெரிந்தவர்களும் தங்கள் ஸ்பர்ச சக்தியை விருத்திசெய்துகொள்ள வேண்டுமென்பது டாக்டர் மாண்டிஸோரியின் தீர்மானம். இவ்வபிப்பிராயத்தை மேற்கொண்டே, குழந்தைகட்கு எழுத்துக்களைக் கற்பிக்கும் காலத்தில் கீழ்க்கண்ட முறையை டாக்டர் மாண்டிஸோரி கையாண்டுவருகிறார்.

எழுத்துக்களின் வடிவத்தைக் குழந்தைகள் தங்கள் கண்களால் பார்க்கும்படி செய்கிறார். பிறகு குழந்தைகளின் கண்களை ஒரு சிறு துணியால் கட்டிவிடுகிறார். சுரசுரப்பான காகிதத்திலோ (*Sandpaper*) அல்லது வெல்வெட் போன்ற மிருதுவான துணியிலோ எழுத்துக்களின் வடிவம் அமையக் கத்தரித்து அவைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சதுர அட்டைத்துண்டில் ஒட்டி அவைகளைக் குழந்தைகளின் முன் வைக்கிறார். கண்கள் கட்டப்பட்டிருக்கும் அக்குழந்தைகள் தங்கள்முன் வைக்கப்பட்டிருக்கும் எழுத்துக்களின் வடிவத்தைத் தடவிப்பார்த்து அறிகிறார்கள். இப்படிச் செய்வதனால் எழுத்துக்களின் வடிவம் குழந்தைகளின் மனதில் எளிதில் பதிந்து நிலைபெற்று நிற்கிறதென்கிறார்.

இந்த இந்திரியப்பயிற்சி குழந்தைகளுக்கு சுமார் மூன்று வயது முதல் $4\frac{1}{2}$ வயது அல்லது 5 வயது வரையில் கொடுக்கலாம். பிறகுதான் பள்ளிக்கூடத்துப் பாடங்களைத் தொடங்க வேண்டும்.

(2) மனவியல்

மாந்தரது மனம் மிகுந்த சஞ்சல சுபாவமுடையது. அது பற்றியே நம் பெரியோர் மனத்தைக் குரங்குக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள். அதிலும் சிறு குழந்தைகளின் மனது பெரியவர்களது மனதைக் காட்டிலும் அதிகமான சஞ்சல சுபாவமுடையதாக இருக்கிறது. ஆகையால் குழந்தைகளை, ஒரே வஸ்துவை நீண்டகாலம் பார்த்திருக்கச் செய்வதோ அல்லது ஒரே சத்தத்தை நீண்டகாலம் கேட்டுக் கொண்டிருக்கச் செய்வதோ அல்லது ஒரே வேலையைச் செய்து கொண்டிருக்கச் செய்வதோ, அவர்களை ஹிம்ஸிக்கும் வழிகளே யல்லாமல் அவர்களுக்குக் கல்வி புகட்டும் முறைகளாகா. ஆகையால் குழந்தைகள் பார்க்கும் வஸ்துக்களும் கேட்கும் சத்தங்களும் செய்யும் வேலைகளும் அடிக்கடி மாறிக்கொண்டே இருந்தால்தான் அவைகளால் குழந்தைகட்கு நன்மையுண்டாகும்.

உதாரணமாகக் குழந்தைகளுக்குக் கணிதம் கற்பிக்கும் விஷயத்தைப்பற்றி ஆராய்வோம்: ஒன்றிலிருந்து நூறுவரையிலும் சொல்லக் குழந்தைகளைப் பழக்குவது உபாத்தியாயரின் நோக்க

மென்று கொள்வோம். அப்போது செய்யப்படுவதென்ன? உபாத்தியாயரோ அல்லது சட்டாம்பிள்ளை என்று சொல்லப் படும் ஒரு பிள்ளையோ எண்களை ஒவ்வொன்ருக முதலில் சொல்ல மற்றக் குழந்தைகள் எல்லோரும் ஏககாலத்தில் அவர் பின்னுல் அந்த எண்களைச் சொல்லிவருவதே பண்டைய முறை யாம். இம்முறையைக் குழந்தைகள் எத்துணை வெறுக்கிருர்க ளென்பது அனுபவத்தில் தெரியும். இதைவிடச் சற்றுச் சிறந்த முறையாகக் கருதப்படுவது, குழந்தைகட்குப் பலநிறக் கண்ணுடி மணிகளைக் கொடுத்து அவைகளை எண்ணிக்கொண்டே எண்களை யும் சொல்லும்படி செய்வதேயாம். ஒன்றிலிருந்து நூறுவரை யில் சொல்லக் கற்குமுன் ஒரு குழந்தை பலமுறை அப்படிச் சொல்லி யாகவேண்டி யிருக்கும். இத்தகைய சந்தர்ப்பத்தில் உபாத்தியாயர் மணிகளை உபயோகித்த போதிலும், நீண்ட கால மாக அவைகளையே பார்த்துக்கொண்டிருக்கும் காரணத்தினுல் மணிகளிடத்தில் குழந்தைக்கு ஒருவித வெறுப்புத் தோன்றுதல் நிச்சயம். ஆகையால் உபாத்தியாயர் சொல்லிக்கொடுக்க முயலும் விஷயம் ஒன்றேயாயினும் அதைச் சொல்லிக்கொடுக்க உபயோகிக் கும் ஸந்தர்ப்பங்களும், உபகரணங்களும் பல வகைப்பட்டன வாக இருத்தல் அவசியம்.

ஒன்றிலிருந்து நூறுவரையில் சொல்லக் குழந்தைகளைப் பழக்கக் கீழ்கண்டவாறெல்லாம் செய்யலாம்:

(1) உபாத்தியாயர் குழந்தைகளைத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்று அவர்களைப் பூக்கொய்யும்படி தூண்டவேண் டும். பிறகு அவர்களை வட்டமாக உட்காரச் செய்து அவர்கள் கொணர்ந்த பூக்களை வட்டத்தின் நடுவில் சேமித்து வைத்துக் கொண்டு, உபாத்தியாயர் அங்கிருந்து சிறு கல்லொன்றை விக்ரக மாக நினைத்துப் பூக்களால் அர்ச்சிக்கவேண்டும். இப்படிச் செய்யும்போது உபாத்தியாயர், பூக்களை எண்ணிக் கொண்டேவரக் குழந்தைகளெல்லோரும் அவர் சொல்லும் எண்களைச் சொல்ல வேண்டும்.

(2) உபாத்தியாயர் குழந்தைகளின் வட்டத்தின் நடுவி லிருந்து ஒரு மணியை அடிக்கவேண்டும். அப்படிச் செய்யும் போது உபாத்தியாயர், "ஒன்று, இரண்டு, மூன்று" என்று மணி யோசையை எண்ணப் பிள்ளைகளும் எண்களைச் சொல்லிக் கொண்டே வரவேண்டும்.

(3) உபாத்தியாயர் சுமார் நான்கு அல்லது ஐந்து குழந்தை களுடன் பள்ளிக்கூடத்து மாடிப்படிகளை ஒன்று ஒன்ருகக் கடந்து

செல்லும்போது உபாத்தியாயர் முன்னும் குழந்தைகள் பின்னுமாகப் படிகளை எண்ணவேண்டும். இதுபோன்று போதிக்கப்புகும் விஷயம் நீண்டகாலத்திற்கு மாறுமல் ஒன்ருகவே இருப்பினும், அதற்காக உபயோகிக்கப்படும் சந்தர்ப்பங்களும், வஸ்துக்களும் அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கவேண்டும்.

(3) மூன்று அநுபவங்கள்

சிறுகுழந்தைகட்கு மிக அவசியமாக உபாத்தியாயரும் பெற்ருேரும் தரவேண்டிய அனுபவங்கள் மூன்ருகும். அவை (1) இனம் பிரித்தல் (*Sorting*), (2) ஜோடி சேர்த்தல் (*Matching*), (3) மாற்றுதல் (*Exchanging.*)

(1) இனம் பிரித்தலென்பது, சிவப்பு அட்டைகளை ஒரு புறமாகவும், பச்சை அட்டைகளை மற்ருேர் புறமாகவும், கறுப்பு அட்டைகளை வேருெரு புறமாகவும் பிரித்துப் போடுதல்; அல்லது சதுர அட்டைகளை ஒரு புறமாகவும், முக்கோணவடிவமுள்ள அட்டைகளை மற்ருேர் புறமாகவும், வட்ட வடிவமுள்ளவைகளை வேருேர் பக்கமாகவும் பிரித்துப் போடுதலாம்.

(2) ஜோடி சேர்த்தலென்பது பச்சை அட்டையோடு பச்சை அட்டையையும், வட்டவடிவமான அட்டையோடு வட்ட வடிவமான அட்டையையும், முக்கோணவடிவமுள்ளதோடு முக்கோண வடிவமுள்ளதையும் பொருத்தம்கண்டு ஜோடியாக வைத்தலாம்.

(3) மாற்றுதலென்பது குழந்தைகளுக் கிடையே பெரிதும் இருப்பதை நாம் காணலாம். உதாரணமாக மிகச் சிறுகுழந்தைகளும் தின்பண்டங்கள் வைத்திருந்தால் ஒரு குழந்தை ஒரு வடையைக் கொடுத்து ஒரு முறுக்கு வாங்கிக்கொள்வதை நாம் பார்க்கிருேம். இவ்வளவு பெரிய வடைக்கு இவ்வளவு சிறிய முறுக்குத்தானு வென்று கேட்பதையும் நாம் கவனிக்கலாம். ஆகையால் இத்தொழில் குழந்தைகளின் மனதிற்கு ஒத்திருப்பதாகவே நமக்கு விளங்குகிறது. இத்தொழிலை உபாத்தியாயர்கள் உபயோகப் படுத்திக் கொள்ளலாம். இத்தொழிலில் பள்ளிச் சிறுர்களுக்குக் கீழ்க்கண்ட வகைகளில் அநுபவம் உண்டாக்கலாம்:

(1) ஏதாவதொரு நிறமுள்ள (கம்பளி) நூலைக் கொடுத்து அதே நிறமுள்ள ஒருகாகிதத்தை வாங்கிக் கொள்ளலாம்.

(2) ஒரு நூல் பந்தைக் கொடுத்து அதே பரிமாணமுள்ள ஒரு ரப்பர்ப்பந்தை வாங்கிக் கொள்ளலாம்.

(3) முப்பட்டையையுடைய ஒரு நீலநிறக் கண்ணாடித்துண்டைக் கொடுத்து அதே வடிவமுள்ள வெள்ளைக் கண்ணாடித் துண்டொன்றைப் பெறலாம்.

இம்மூன்றனுள்ளும் குழந்தைகளுக்குத் தோன்றியபடி மாற்றிக் கொள்ளுதல் ஒருவிதம். உதாரணமாக: ஒரு குழந்தை பச்சைப் பந்தொன்று கொடுத்து சிவப்புப் பந்து ஒன்று வாங்கிக் கொள்ளலாம். அல்லது பெரிய நூல்பந்து ஒன்றைக் கொடுத்து ஒரு சிறிய ரப்பர்ப்பந்து வாங்கிக் கொள்ளலாம். உபாத்தியாயர் நிர்ணயித்தபடி அதாவது எதை எதற்கு ஈடாக நினைத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறாரோ அதன்படி மாற்றிக் கொள்ளுதல் மற்றொரு விதம்.

(4) ஒரு நீளக் குச்சியைக் கொடுத்து அந்த நீளத்திற்கு ஈடு செய்யத்தக்க இரண்டு குட்டைக் குச்சிகளைப் பெற்றுக் கொள்ளுதல்.

(5) ஸமநிறையுடைய வஸ்துக்களை மாற்றிக்கொள்ளுதல்.

(6) ஓர் எண் எழுதப்பட்ட அட்டைத்துண்டொன்றைக் கொடுத்து அதற்கு ஸமமாகும்படியான இரண்டு எண்கள் எழுதப்பட்ட இரண்டு அட்டைத்துண்டுகளைப் பெறுதல். உதாரணமாக: ஐந்தைக் கொடுத்து இரண்டையும் மூன்றையும் பெறுதல்.

(7) நாணயங்களுக்குச் சில்லரை மாற்றுதலும் பத்து அல்லது நூறுரூபாய் நோட்டுகளுக்குச் சில்லரைமாற்றுதலும். இதற்குப் போலிநாணயங்களையும் போலி நோட்டுகளையும் உபயோகப்படுத்தலாம்.

(8) 325 என்ற எண் எழுதப்பட்ட அட்டைத்துண்டைக் கொடுத்து 300 எழுதப்பட்ட ஓர் அட்டையையும் 20 எழுதப்பட்ட ஓர் அட்டையையும் 5 எழுதப்பட்ட ஓர் அட்டையையும் பெற்றுக் கொள்ளுதல்.

(9) ஒரு கோழியின் படத்தைக் கொடுத்து அதனுடன் மூன்று ரூபாய் போலிநாணயமும் கொடுத்து அதற்குப் பதிலாக ஓர் ஆட்டின்படத்தைப் பெறுதல்.

கூர்ந்து நோக்குமிடத்து இம்மூன்று அனுபவங்களுமே மற்றெந்த மேம்பட்ட அனுபவங்களுக்கும் அறிவிற்கும் அடிப்படையாகவும் அஸ்திவாரமாகவும் காணப்படுதலால் இத்துறைகளில் பயிற்சிபெறும் சிறுர்கள் பிற்காலத்தில் கல்வியபிவிருத்தியில் தலைசிறந்து விளங்குவது திண்ணம்.

சில பலஹாரங்கள்

வி. விசாலாக்ஷி அம்மாள்

நம்முடைய முன்னோர்களுக்கு 'டிபன்' சாப்பிடும் வழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. காலையில் குழந்தைகள் பழைய சாதமும் தயிருமாகச் சாப்பிடுவார்கள். சற்று வயதானவர்கள் தோசை சாப்பிடுவார்கள். பிறகு மத்தியான்ன போஜனம் நேரங்கழித்தே நடை பெறும். இரவில் சீக்கிரமாகவே போஜனத்தை முடித்துக்கொள்ளுவார்கள். இடை வேளைக்கு முறுக்கு சீடை முதலிய பக்ஷணங்களைச் சாப்பிட்டு மோர்த்தீர்த்தத்தை வேண்டியவர்கள் பருகுவார்கள்.

நவீன வாழ்க்கையில் இந்த வழக்கங்கள் முற்றிலும் மாறி விட்டன. காலையில் காபி, கோகோ, ஓவல்டின், காந்திகாபி முதலிய பானங்களை அருந்துகிறோம். ஒன்பது மணிக்குள், சுடச்சுட ஆனதும் ஆகாததுமாகச் சாப்பிட்டுவிட்டுக் குழந்தைகள் பள்ளிகளுக்கும், காலேஜ்களுக்கும் சென்று விடுகிறார்கள்; பெரியவர்களும் தங்கள் தங்கள் கச்சேரிகளுக்குச் சென்று விடுகிறார்கள். மாலை நேரத்தில் அலுத்துச் சலித்து வீடு திரும்பும் இவர்களுக்கு வீட்டில் ஏதாவது ஒரு பலஹாரம் செய்து வைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. கீழே சில பலஹார வகைகளை எழுதி இருக்கிறேன்.

தயிர்வடை

இது சாதாரணமாக, வடை செய்து தயிரில் ஊற வைத்துச் செய்யும் வடை யன்று; தயிரினாலும், ரவையினாலும் செய்யப்படும். பலஹாரம் கெட்டியானதும், சுத்தமானதுமான

ஒரு சவுக்கத்தில், அரைப்படி தயிரைக் காலேயிலேயே கொட்டி அதன் மூலேகளைச் சேர்த்துத் தூக்கிக் கட்டி ஓர் இடத்தில் தொங்கவிட வேண்டும். மத்தியான்னமாக எடுத்துப் பார்த்தால் இதன் ஈரமெல்லாம் வடிந்து, தயிர்நல்ல கெட்டியாக, மொத்தை போலிருக்கும். தொங்க விட்டிருக்கும் தயிருக்கு அடியில் ஒரு வாயகலமான பாத்திரத்தையோ அல்லது தாம்பாளத்தையோ வைத்திருந்தால், ஜலம் கீழே சொட்டாமல் இருக்கும். இறுகலான தயிர் மொத்தையில் இரண்டு பலம் நிறுத்து எடுத்து ஓர் ஈயம் பூசின பாத்திரத்தில் போட்டுக் கொள்ள வேண்டும், வேண்டிய அளவு உப்பு, நறுக்கின இஞ்சி, பச்சை மிளகாய், கொத்துமல்லி இவைகளைத் தயிர் மொத்தையில் போட வேண்டும். பிறகு, ஒன்றரைப் பலம் சுத்தம் செய்த ரவையை இதில் போட்டு நன்றாகப் பிசைந்து கொள்ள வேண்டியது. அடுப்பில் நெய்யை வைத்து மொத்தையில் ஒரு சிறிய எலுமிச்சம்பழ அளவு எடுத்து மெல்லியதாகத் தட்டிப்போட்டுச் சுட்டு எடுத்துக் கொள்ள வேண்டியது. தயிர் சேர்ந்திருப்பதினுல் இதைச் சற்றுச் சூடாகச் சாப்பிட்டால் ருசியாக இருக்கும்.

நுரைவடை

சுமார் ஒரு படி ஜலத்தை ஒரு பாத்திரத்தில் விட்டுக் காய்ச்ச வேண்டும். ஜலம் கொதிக்கத் துவக்கினதும் கால்படி உளுத்தம்பருப்பை அதில் கொட்டி ஒரு கொதி வந்ததும் இறக்கி, மூடி வைத்துக் கொளள வேண்டும். பருப்பு ஏறக்குறைய அரைமணி நேரம் ஊறின பிறகு, கொஞ்சம் தேங்காய்த் துருவல், பெருங்காயம், பச்சைக் கொத்துமல்லி, வேண்டிய அளவு உப்பு, பச்சை மிளகாய் இவைகளை உரலில் போட்டு, வேகவைத்திருக்கும் பருப்பை வடித்துப் போட்டு, வெண்ணெய்போல் அரைத்துக் கொள்ள வேண்டும். வீசம்படி அரிசி மாவை இந்த மொத்தையில் கலந்து, நெய்யும் எண்ணெயுமாகக் கலந்துவைத்து, வடைகளாகத் தட்டிப் போட்டுச் சுட்டு எடுத்துக் கொள்ள வேண்டும் வடை மெதுவாக இருக்க வேண்டும் என்று பிரியப்படுகிறவர்கள், ஓர் எலுமிச்சங்காய் அளவு வெண்ணெயை மாவில் கலந்து கொள்ளலாம்.

மைதாமாப் பக்ஷணங்கள்

மைதாமாவைக்கொஞ்சம் ஜலம்விட்டு இறுகலாகப் பிசைந்து, அப்பளம் இட்டுப் பலஹாரங்கள் செய்யலாம். மாவைப் பிசையும்

பொழுது இறுகலான நெய்யையும் சேர்த்துக் கொண்டால், மா கையில் ஒட்டிக் கொள்ளாமல் இருக்கும். அரைக்கால்படி மாவை நன்றாகப் பிசைந்து கொள்ள வேண்டும். இதை ஆறு உருண்டைகளாக உருட்டி கனமான அப்பளங்களாக இட்டுக் கொள்ள வேண்டும். கொஞ்சம் கெட்டி நெய்யையும், குங்குமம் போல் சலித்த அரிசிமாவையும் ஒரு தாம்பாளத்தில் போட்டு நன்றாகத் தேய்த்துக் கொள்ளவேண்டும். இதை இட்டு வைத்திருக்கும் அப்பளங்கள் மேல் தடவி, மூன்று அப்பளங்களைச் சேர்த்துச் சுருட்டிக் கொள்ள வேண்டும். மற்ற மூன்று அப்பளங்களையும் இவ்விதமே செய்ய வேண்டும். இதில் கொஞ்சம் மாவை எடுத்துச் சற்று கனமான சிறிய அப்பளமாக இட்டு, நெய்யில் பொரித்துச் சர்க்கரைப் பாகில் தோய்த்து எடுத்துக் கொள்ள வேண்டும். இது பாகு மேல் தோய்ந்துகொண்டு வெகு ருசியாக இருக்கும். இதே மாதிரியில் மாவைத் தயாரித்து, அதில் நெய்க்குப் பதிலாக ஒரு பெரிய எலுமிச்சம் பழ அளவு வெண்ணெயையும், நன்றாகப் பொடி செய்யப்பட்ட மிளகுத் தூளையும், வேண்டிய அளவு உப்பையும் சேர்த்து, பதிர் போட்டு இட்டுப் பொரித்தால் கரகரப்பாகவும் வாய்க்கு ஆரோக்கியமாகவும் இருக்கும். மைதாமா அப்பளம் இட்டுப் பொரித்து, பாலில் சக்கரை கலந்து நனைத்து வைத்தால் பால் போளி ஆகிவிடும். ரவையை இடிப்பது போல் சிரமப்பட வேண்டியது இல்லை. வாதாங்கொட்டையை ஊற வைத்து உரித்த பருப்புக்களை இரண்டாகப் பிளந்து நீள வாட்டத்தில் மெல்லிய துண்டுகளாக நறுக்கிப் பொரித்து எடுத்துக் கொள்ள வேண்டும் குங்குமப்பூ, ஏலப்பொடி முதலியவைகள் போட்டு நன்றாகப் பாலைக் காய்ச்சிப் பக்குவமாகச் சர்க்கரை போட்டு மைதாமா அப்பளங்கள் இட்டுப் பொரித்துப் பாலில் நனைத்துக் கொள்ள வேண்டும். நனைத்த அப்பளத்தை அப்படியே ஒரு தாம்பாளத்தில் போட்டு வறுத்துத் தயாராக வைத்திருக்கும் வாதுமைப் பருப்பை அதில் தாராளமாகத் தூவி மடித்துக்கொள்ள வேண்டும். இந்தப் போளி மிகவும் ருசியாக இருக்கும்.

காகித பர்பி

நாலைந்து பலம் நெய்யில் கொஞ்சம் குங்குமப் பூவைக் கரைத்துக் கொள்ள வேண்டும். இதில் அரைக்கால்படி கோதுமை மாவையும், அரைக்கால் படி சர்க்கரையையும்போட்டு நன்றாகப் பிசைந்து கொள்ள வேண்டும். கொஞ்சம் ஏலப்

பொடியையும் கலந்து கொள்ள வேண்டும். ஒரு தட்டில் ஒரு வெள்ளைக் கடிதாசைப் போட்டு அதன் மேல் இந்த மொத்தையைப் பரப்பவேண்டும். ஒரு விரல் கனமுள்ளதாக ஒரே சீராகப் பரப்பிக் கத்தியினுல் வில்லைகளாக நறுக்கி விடவேண்டும். கும்மட்டியில் தணலைப் போட்டு, அதன் மேல் தாம்பாளத்தை வைத்து மற்றொரு தாம்பாளத்தினுல் மூடிவிட வேண்டும். கொஞ்ச நேரத்திற்குப் பின் மூடி இருக்கும் தாம்பாளத்தின் மேல் கொஞ்சம் தண்ணீரை விடவேண்டும். அது சுரு சுரு என்று வற்ற ஆரம்பித்தால், தாம்பாளத்தை அடுப்பை விட்டு இறக்கிவிட வேண்டியது. நன்ருக ஆறினதும், பர்பியைக் கடிதாசை விட்டு எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

பழைய விடுகதைகள்

கே. என். லக்ஷ்மி அம்மாள்

1. வட்ட வட்டச் சிங்கன்ன
வாலில்லாத சிங்கன்ன
என்னை வந்து எழுப்பன்ன. (மூட்டைப்பூச்சி)

2. பத்துவிரல் பந்தாட
ஐந்துவிரல் அமர்ந்திருக்க,
சூரியனுடன் வாதாட
எமனுடன் போராட. (வரட்டி)

3. வண்ணன் வெளுக்காத வெள்ளை
குயவன் பண்ணுத பாண்டம்
மழைபெய்யாத தண்ணீர். (தேங்காய்)

4. பச்சைப் பசுத்திருக்கும் பாகற்காயுமல்ல
பச்சைமுள்ளுப் படர்ந்திருக்கும் பலாக்காயுமல்ல
உள்ளே வெளுத்திருக்கும் தேங்காயு மல்ல
உருக்கினுல் நெய்காணும் வெண்ணெயு மல்ல.
—(கோட்டைமுத்து)

5. நாலு காலுண்டு வீச வாலில்லை. (நாற்காலி)

பாலர் வகுப்புப் பாஷைப் பாடமும் விளையாட்டுப் பயிற்சிகளும்

எஸ். ஜகந்நாதன்

(92-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரே எழுத்தில் அல்லது சப்தத்தில் முடியும் வார்த்தைகள்



கடை, வடை, குடை, கூடை, சட்டை என்று ஒரே தொனியில் முடியும் வார்த்தைகளைத் திரும்பத் திரும்பப் படிக்கக் குழந்தைகள் ஆசைப்படுகிறார்கள். இங்கே காட்டிய "டை" அட்டையைச் சுற்றி வரப் புதுப்புது வார்த்தைகள் வரும். அதேமாதிரி "ப்பு" என்று அட்டையை எழுதி, பாக்கியுள்ள எழுத்துக்களையும் அட்டையில் எழுதி வைத்தால், "செருப்பு, உப்பு, பருப்பு, வெளுப்பு" என்ற வார்த்தைகள் முறையே கிடைக்கும்.

செரு
உ
பரு } ப்பு
வெளு

5. மற்றொரு விதம்



ஒரு நீண்ட அட்டையில் "ந்து" என்று எழுதி அதை மற்றொரு நீண்ட அட்டையில் சுலபமாகத் தள்ளக் கூடியபடி செருகி விட வேண்டும். "சந்து, பந்து, ஐந்து" என்ற பிரகாரம் வார்த்தைகள் வரும்.

அதேமாதிரி,

"ன்று"	முதலிய வைக ளுக்கும்	ஒன்று, கன்று, மூன்று	என்ற வார்த்தைகள் வரும்படி செய்து கொள்க.
"ண்டு"		குண்டு, கூண்டு, நண்டு	
"ஞ்சு"		குஞ்சு, பஞ்சு, பிஞ்சு	
"ங்கு"		நுங்கு, தூங்கு, குரங்கு	

6. ஒரே எழுத்தில் ஆரம்பிக்கும் பல வார்த்தைகள்



"பா" என்று நடுவிலுள்ள அட்டையைச் சுற்றிவர, பாய், பாட்டி, பாடம், பாச்கு, பாலம், பால் என்ற வார்த்தைகள் கிடைக்கும்.

7. ஒரே இனத்தைச் சேர்ந்த வார்த்தைகள்



படத்தில் காட்டியபடி 'மரம்' என்ற அட்டையை மேலேயும் கீழேயும் தள்ளினல் பற்பல மரங்களின் பெயர்கள் தெரியலாகும்.

இம்மாதிரி, பழம், பூ, இலை, முதலியவைகளின் பெயர்களைக் காட்டக்கூடிய வார்த்தைகளைச் சேர்த்துக் கொள்ளலாம். இப் பலகையைச் சுவரில் தொங்கவிடலாம். பிள்ளைகள் ஒழிந்த நேரங் களில் பலகையை எடுத்து விளையாடலாம்.

8. வேறு ஒரு மாதிரி

பின்னே காட்டியபடி ஒரே அறையுள்ள பெட்டி தயார்செய்க. 'வண்டி' என்று எழுதப்பட்டிருப்பதால் இதன் அறையில் பல வண்டிகளின் பெயர்களைக் குறிக்கும் வார்த்தைகள் இருக்கும் என்று அறியலாம்.

ரயில்	வண்டி.
மோட்டார்	
ஜட்கா	
குதிரை	

ரயில் என்ற வார்த்தையை "வண்டி" என்பதற்கு முன் வைத்து ரயில்வண்டி என்று படிக்கவேண்டும். இதேபோல் "கிழமை", "பெட்டி", "ஊறுகாய்", "கிழங்கு" வகைகளில் பல சொற்களைச் சேர்க்கலாம்.

9. குறில் நெடில்

இப்படத்தில் குறில், நெடில் தொனிகளின் வித்தியாசத்தைக் காட்டத்தக்கவாறு சில வார்த்தைகள் படமூலமாக விளக்கப்பட்டிருக்கின்றன.

உதாரணம்:



பனை	பானை
குடை	கூடை
மலை	மாலை
சட்டை	சாட்டை

இம்மாதிரியே பல அப்பியாசங்கள் கொடுக்கப்படவேண்டுவது அவசியமாகும். மேல்வகுப்புக் குழந்தைகள் இந்தவிஷயத்தில் பெரும் பிழை செய்கிறார்கள் என்று கண்டறிந்திருக்கிறோம். இவைகளை நீக்க ஆரம்ப வகுப்பு முதற்கொண்டே பயிற்சி அளிக்கவேண்டியது முக்கியம்.

10. ல ள வித்தியாசங்கள்



உச்சரிப்புப் பிழை என்று ஒன்று உளது, முக்கியமாக ல, ள - ர, ற - ந, ன, ண - இம், மூன்று வகைகளில் உச்சரிப்புப்பிழை, எழுத்துப் பிழை இவ்விரண்டும் காணப்படுகின்றன. இப்பிழைகளினால் பதங்களின் அர்த்தமே மாறிவிடுகிறதைக் கவனிக்கச் செய்வது நமது கடமையாகும்.

இப்படத்தில்

வலை	வளை
தவலை	தவளை
புலி	புளி
வால்	வாள்

என்ற வார்த்தைகள் படத்தின் மூலமாக விளக்கப்பட் டிருக்கின்றன.

மேல் வகுப்புக்களில் (ர, ற; ந, ன, ண) இவைகளின் வித்தியாசங்களைக் காட்டத் தக்கவாறு வார்த்தைகளைப் பொறுக்கிக் கொள்ளவேண்டும்.

11. குழந்தைகளின் அச்சுக்கூடம்.

இங்கே காட்டிய பிரகாரம் 16 அறைகள் உள்ள ஒரு பெட்டி தயார்செய்து கொள்க. 2 அங்குல சதுரமுள்ள அட்டைத்துண்டுகளில் தமிழ்ப் பாஷையிலுள்ள எழுத்துக்களை அட்டை ஒன்றுக்கு ஒவ்வோரெழுத்தாக எழுதுக. 'அ' என்ற அறைக்குள் க, ங, ச, ஞ முதலிய 18 எழுத்துக்களும், 'ஆ' என்றஅறைக்குள் கா, ஙா, சா, ஞா முதலிய எழுத்துக்களும் அம்மாதிரியே பாக்கி அறைகளில் பாக்கி எழுத்துக்களும் முறையே வைக்கப்பட்டிருக்கின்றன.

அ	ஆ	இ	ஈ
உ	ஊ	எ	ஏ
ஐ	ஒ	ஓ	ஔ
ஃ	ஜ ஸ	ஷ க்ஷ ஹ	

(i) குழந்தைகளுக்கு ஆரம்பத்தில் சிறு சிறு வார்த்தை யாகச் சொல்லிக் கொடுக்கும் பொழுது வார்த்தைகளை எழுதி அவைகளில் அடங்கிய எழுத்துக்களை வரிசைப்படப் பொறுக்கி வைக்கச்சொல்லலாம்.

(ii) தினசரி சமாசாரப் பத்திரிகைகளில் பெரிய எழுத் துக்களில் காணப்படும் சில சுலபமான வார்த்தைகளைக் கத்தரித்து வைத்துக்கொண்டு அவற்றைப்போல் குழந்தைகள் எழுத்துக்கள் அமைத்துக்காட்டச் சொல்லுவது சரியான பயிற்சியாகும்.

குறிப்பு

ஓரே எழுத்தில் 2, 3-ஆவது வேண்டியிருக்கும்; ம், க், ப், போன்ற ஒற்றுக்களில் பல எழுத்துக்களும் வேண்டியிருப்பதை அறிந்து இவைகளில் அதிக எழுத்துக்கள் தயார் செய்துவைப்பது நன்மையாகவிருக்கும்.

12. விளம்பரங்கள்

தெருக்களில் விளம்பரக்காகிதங்கள் கொடுத்துக் கொண்டு போகிற காலத்தில் நமது குழந்தைகள் அந்தக் காகிதங்கள் வாங்கி வர ஆசைப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். அம்மாதிரி சுலப மான விளம்பரங்களைப் பாலர் வகுப்புக் குழந்தைகளுக்கு எழுதிக் கொடுத்து அவர்களைப் படிக்கச்செய்ய வேண்டுமென்பது எனது ஆசை. அதில் குழந்தைகளும் சந்தோஷிக்கிறார்கள். அந்த விளம்பரங்களில் ஏதாவது படங்கள் இருப்பின் போற்றத் தக்கதாகும்.



தேள்கடி மருந்து

கொட்டுவலி உடனே நீங்கும்

இரண்டு புட்டி: நான்கு அணா.

13. ரயில்வே ஸ்டேஷன்களின் பெயர்கள்

சற்றே படிக்கத்தெரிந்த குழந்தைகள் ரயில்வேஸ்டேஷனில் காணப்படும் ஸ்டேஷன் பெயரைப் படிக்க ஆசைப்படுகிறார்கள். பள்ளிக்கூடத்திலும் இவ்விஷயத்தில் தக்க பயிற்சிகொடுக்கலாம்.



ஸ்டேஷன்கள் பெயர்களைத் தூண் அல்லது மரத்திற்கு ஒன்றாகத் தொங்கவிடுக. கொஞ்சம் படிக்கத் தெரிந்த குழந்தைகளுக்கும் டிக்கட்டுகள் எழுதிக் கொடுக்கலாம்.

கிண்டி	பறங்கிமலை	பல்லாவரம்

சிறுகுழந்தைகள் ரயில்வண்டிகளாக இருந்து, டிக்கட்டு உள்ளவர்கள் பிரயாணிகளாகவுமிருந்து இந்த ஆட்டத்தை நடத்துகிறார்கள். டிக்கட்டுஉள்ளவர்கள் சரியான இடத்தில் நின்றுவிடுகிறார்களா என்று கவனிக்க வேண்டும்.

14. பிள்ளைகளின் பெயர்கள்

உபாத்தியாயர் வகுப்பிலுள்ள குழந்தைகளின் பெயர்களை ஒன்று ஒன்றாக எழுதுகிறார். பிள்ளைகள் அவற்றை மனதினுள் படிக்கவேண்டும்; எந்தக் குழந்தையின் பெயர் எழுதப்பட்டிருக்கிறதோ அக்குழந்தைமாத்திரம் எழுந்து நிற்கவேண்டும்.

கோபாலன்	ஆல்பர்ட்
முருகன்	முனிசாமி
கந்தசாமி	காதர் பாச்சா
கமலம்	தனசிங்.

15. குறித்த காரியங்களைச் செய்யச்சொல்லுதல்

(i) 'கந்தா கதவைச் சாத்து' என்று எழுதினவுடன் கந்தன் எழுந்துவந்து கதவைச் சாத்தவேண்டும். அவனே மனதில் படித்து அக்காரியத்தைச் செய்வானானால் அவனுக்குப் படிக்கத் தெரியுமென்றும், படித்த விஷயத்தை நன்றாய் அறிந்து கொண்டானென்றும் நாம் தெரிந்து கொள்ளலாம்.

(ii) தலை குனி, தலை நிமிர், தலை சாய், தலை அசை.

என்று ஒன்று ஒன்ருக எழுதக் குழந்தைகள் அம்மாதிரி செய்கிருர்களா என்று கவனிக்கலாம்; யார் முதலில் செய்கிருர்கள்; யார் பிறரைப் பார்த்துச் செய்கிருர்கள் என்றும் உபாத்தியாயர் கவனிக்கலாம்.

16. பழைய பாட்டுக்களைப் படித்தல்

உதாரணம்:

காக்கா கண்ணுக்கு மை கொண்டுவா,
குருவி கொண்டைக்குப் பூ கொண்டுவா,
கொக்கே குழந்தைக்குத் தேன் கொண்டுவா,
கிளியே கிண்ணத்தில் பால்கொண்டுவா.

17. படமும் வாக்கியங்களும்

ஓர் அட்டையில் ஒருபடம் ஒட்டி அதைக்குறித்து எளிய நடையில் சில சிறுவாக்கியங்கள் எழுதிக்கொடுக்கவேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும் வெவ்வேறு அட்டைகள் கொடுப்பதுதான் நல்லது.



1. இது ஒரு தேர்.
2. தேரில் சுவாமி இருக்கிருர்.
3. தேர் பார்க்க ஜனங்கள் வருகிருர்கள்.
4. தேரில் கொடி பறக்கிறது.
5. தேர் வெகு அழகாய் இருக்கிறது.
6. தேர்த் திருநாள் வெகு நன்ருய் இருக்கும்.

இதேபோல் சுவரில் தொங்கவிடக்கூடிய படங்கள் "கலைமகள்" ஆபீஸில் படம் ஒன்றுக்கு முக்காலணவீதம் ஒன்பது படங்கள் கிடைக்கும்; அவற்றை உபாத்தியாயர்கள் வாங்கிப் பாஷைப் பாடம், கதை, படங்கள், சம்பாஷணை, மனதிலுள்ள கருத்தைப் பாஷைமூலமாக வெளியாக்குதல், என்பவை போன்ற பாடங்களில் உபயோகிப்பது பொருத்தமாகும்.

நிலாவை அழைத்தல்

1

நிலா நிலா வாவா! நில்லாமல் ஓடிவா!
மலைமேலே ஏறிவா! மல்லிகைப்பூக் கொண்டுவா!
நடுவீட்டில் வையே, நல்லதுதி செய்யே;
வெள்ளிக்கிண்ணத்தில் பாலும் சோறும்
எடுத்தெடுத்து அப்பன் வாயில்
கொஞ்சிக் கொஞ்சி ஊட்டு!
குழந்தைக்குச் சிரிப்புக் காட்டு!

2

அம்மா! அம்மா! வாவா!
அதோ பார் சந்தமாமா!
அழகிய நல்ல சந்தமாமா!
வாவா வா சந்தமாமா!
அம்மா மடியில் ஓடிவா!
அப்பா தோளில் ஏறிவா!
அங்கும் இங்கும் திரிந்துவா!
ஆறும் மலையும் தாண்டிவா!
நல்ல நல்ல கதைசொல்ல
நன்றாய்ச் சிரித்து ஓடிவா!

[சூடாமணி.]

காலஞ்சென்ற ஸ்ரீமான்

டி. எஸ். இராமச்சந்திர ஐயரவர்கள்

கலைமகள் பத்திரிகையின் நிர்வாக ஆசிரியராக இருந்த **ஸ்ரீமான் டி. எஸ். இராமச்சந்திர ஐயர்** அவர்கள் சென்றமாதத்தில் திடீரென்று காலமானதை நமது நேயர்களுக்கு மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இவர்களையே பெருந்துணையாகக் கொண்டு ஸ்ரீமான் நாராயணஸ்வாமி ஐயரவர்கள் இப்பத்திரிகையைத் தொடங்கினார்கள். இவர்களும் அந்தப் பொறுப்பை உற்சாகமாக மேற்கொண்டு தமது சிறந்த அறிவையும் அரிய அனுபவத்தையும் இதை நடத்துவதில் செவ்வனே உபயோகித்து வந்தார்கள். இவர்களுடைய மேற்பார்வையில் பத்திரிகை மேன்மேலும் அபிவிருத்தியாய்க்கொண்டு வந்தது. இந்நிலையில் இவர்களை இழக்க நேரிட்டது பத்திரிகையின் துரதிர்ஷ்டம் என்றே சொல்லவேண்டும்.

இராமச்சந்திர ஐயரவர்கள் தமிழிலும், வடமொழியிலும், ஆங்கிலத்திலும் திறமை உள்ளவர்கள். 'கலைமகள்' தோன்றுவதற்கு ஐயரவர்களே முக்கியகாரணராக இருந்தார்கள். தமிழ்மொழியின் மேல் இவர்கள்கொண்ட அன்பே இவர்களை இம் முயற்சியில் தூண்டியது. இவர்கள் எளிய வாழ்க்கையையும் உயர்ந்த லக்ஷியங்களையும் அரிய கல்வித் திறமையையும் உடையவர்கள்; அரசியல் விஷயங்களை உருவகித்து மிகவும் அழகாகக் கதைபோல எழுதும் ஆச்சரியமான வன்மை பெரிதும் வாய்ந்தவர்கள். இத்தகைய விசேஷமான திறமை வாய்ந்தவர் ஒருவர் மேலைநாடுகளில் பிறந்திருப்பாரானால் அவர் பத்திரிகை யுலகத்திலே பெரும்பதவியையும் பெயரையும் பெற்றிருப்பாரென்பது திண்ணம்.

இவர்களுடைய மரணம் காரணமாக 29-7-34-ல் கூடிய அனுதாபக் கூட்டத்திலே தலைமைவகித்த மகாமகோபாத்தியாய ஸ்ரீமான் எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களும், 'கலைமகள்' பத்திராதிபர்களின் சார்பாக ஸ்ரீமான் டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களும், தமிழ்ப்பத்திராதிபர்களின் சார்பாக ஸ்ரீமான் ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் இவ்விஷயங்களைப்பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்கள். ஸ்ரீமான் இராமச்சந்திர ஐயரவர்களின் எதிர்பாராத மரணத்தால் நாங்கள் அடைந்துள்ள பெருந்துயரத்தை இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

கலைமகள் பத்திரிகாசிரியர்கள்

யார்தான் அறியக்கூடும்?

வித்துவான் கி. வா. ஜகந்நாதன்

"தலைவலி யென்று பற்றுப் போட்டதைக்கூட நான்பார்த்த தில்லையே" என்றேன் நான்.

"ஆமாம்! எப்பொழுதும் ஜாக்கிரதையாகவேதான் இருப் பது வழக்கம். பிரமாதம் ஒன்றும் இல்லை. 102 டிகிரிதான் இருக் கிறது. படுக்கை போட்டுப் படுத்தது வழக்கமில்லையாகையால் எனக்குக் கொஞ்சம் சிரமமாயிருக்கிறது" என்றார் அவர்.

அன்று திங்கட்கிழமை. 'கலைமகள்' நிருவாகப்பத்திரிகா சிரியர் ஸ்ரீமான் டி. எஸ். இராமச்சந்திரையரவர்கள் சிறிது ஜ்வர மென்று படுத்துக்கொண்டிருந்தார்.

அடுத்த திங்கட்கிழமை (23-7-34) யன்று அவர் நம்மை விட்டுப் பிரிந்துவிடுவாரென்று யார்தான் முன் அறியக்கூடும்? ஆனால், நம்முடைய ஊகத்திற்கு எட்டாத காலம், அவருடைய வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

இராமச்சந்திரையர் 'கலைமகள்' நிருவாகப்பத்திரிகாசிரியராக உழைத்த இளைஞர்; வயதினாலன்று, ஊக்கத்தினால். அவர் வளர்த்த 'கலைமகள்' பச்சிளமையில் உலவுகிறாள். உபகாரச் சம்பளம் பெற்ற உத்தியோகஸ்தரென்று அவரை அவர் எழுத்தைக் கொண்டு சொல்லிவிடமுடியாது. குதூகலமுள்ள இளைஞர் களுடைய எண்ணங்களும் பரிஹாஸமும் அவருடைய பேச்சிலும் எழுத்திலும் விளங்கின.

அறுபத்துமூன்று வருஷங்கள் ஆனவர் என்று அவருடைய ஜாதகம் சொல்லுகின்றது. அவர் திருவிடைமருதூரில் 1871-ஆம் வருஷம் பிறந்தவர். இளமையிலேயே தந்தையை இழந்தார். இளமைக்கல்வியை ஒழுங்காகக் கற்றபின்பு 1880-ஆம் வருஷம் சென்னைக்கு வந்து கல்விபயின்றார். பச்சையப்பன் கலாசாலை யிலும் பிறகு கிறிஸ்தவக்கலாசாலையிலும் படித்தார். அவருடைய திறமையைக்கண்டு அவரைச் சம்பளமில்லா மாணவராகக் கலாசாலை அதிகாரிகள் சேர்த்துக்கொண்டார்கள்.

1891-ஆம் வருஷம் பி.ஏ. பரீட்சையில் அவர் தேர்ச்சிபெற்றார். படிக்கும்பொழுதே நூல்களில் ஒருதனிச்சுவையையுடையவராக இருந்தார். தமிழ்ப்பாடங்களை மிகக்கருத்துடன் வாசித்து வந் தார். பிற்காலத்தில் அவர் அடிக்கடி, தமக்குத் தமிழ்ப்பாடஞ்

சொல்லிய பண்டிதர் சின்னசாமிபிள்ளையைப்பற்றிப் பாராட்டு வதுண்டு. தமக்கு இருந்த தமிழபிமானத்தினல், கிறிஸ்தவக் கலாசாலையில், சிறந்த வியாசம் எழுதும் கலாசாலைமாணவ னெரு வனுக்கு வருஷந்தோறும் பரிசு ஒன்றை அளிப்பதற்குரிய நிதியாக ரூ. 500 வழங்கியிருக்கிறார்.

பிறகு அவர் 'ரிஜிஸ்ட்ரேஷன் இலாகா'வில் உத்தியோகத்தில் அமர்ந்தார். குமாஸ்தாமுதலாகக் காரியதரிசி வரையிலுள்ள உத் தியோகங்களை அவர் முறையே பார்த்தார். அக்காலங்களில் மேலதி காரிகள் அவருடைய வேலைத்திறமையையும் அறிவின்வன்மையை யும் கண்டுவியந்தார்கள். உத்தியோகவேலைகளை மிகவும் விரை வாகச்செய்துமுடிப்பதில் சிறந்தவரென்ற புகழை அவர் பெற்றார். 1913-ஆம் வருஷம் அவர் ஜில்லா ரிஜிஸ்ட்ராராக ஆனார். 1910-ஆம் வருஷம் முதல் 1924-ஆம் வருஷம் வரையில் இன்ஸ் பெக்டர் ஜனரலிடம் உதவி உத்யோகஸ்தராக (*Personal assistant*) இருந்தார். 1926-ஆம் வருஷம் வேலையிலிருந்து நீங்கி உபகாரச் சம்பளம் பெற்றுவந்தார். அவர் தம்சொந்த முயற்சியினலேயே முன்னுக்குவந்தவரென்று அவருடைய நண்பர் கள் சொல்வார்கள்.

பிற்காலமெல்லாம் ஸ்ரீமான் இராமச்சந்திரையர் ஒருரிஷியைப் போல வாழ்ந்துவந்தார். நூல்களைப்படிப்பதும் வித்துவான்களுடன் ஸல்லாபம் செய்வதும் அவருடைய பொழுதுபோக்காக இருந் தன. உத்தியோக காலங்களிலேயே ஒய்வு நேரத்திலெல்லாம் கம்ப ராமாயணம், தேவாரம் முதலிய நூல்களைப்படித்து இன்புற்று வரு வது அவர் வழக்கம். ஆங்கிலம், வடமொழி, தமிழ் என்னும் மூன் றிலும் அவருக்கிருந்த சிறந்த பயிற்சி அவருடைய வாழ்க்கைக்கு இன்பமூட்டுவதாக அமைந்தது. கம்பராமாயணத்தில் பெரும் பாலான செய்யுட்கள் அவருக்கு மனப்பாடம். ஏதாவது ஓரிடத்தைச்சொன்னல் முன்னும் பின்னும் உள்ள பாடல்களையும் அந்த இடத்திலுள்ள அபிப்பிராயங்களமைந்த வேறுபல செய்யுட் களையும் தங்குதடையின்றிச் சொல்லுவார். 'பென்ஷன்' பெற்ற உத்தியோகஸ்தரொருவர் அத்தகைய ஞாபகசக்தியும் அறிவும் வாய்ந்தவராக இருந்தாரென்பதை அறிந்த யாவருக்கும் அவர் இயல்பு ஆச்சரியத்தை உண்டாக்கிற்று. அவர் வால்மீகி ராமாயணத் திற்கும் கம்பராமாயணத்திற்கும் உள்ள வேறுபாடுகளையும் ஒற்று மைகளையும் நன்றாக ஆராய்ந்துவைத்திருந்தார். 'கம்பராமாயணந் தான் சிறந்தது' என்றும், 'வால்மீகி ராமாயணந்தான் சிறந்தது' என்றும் கூறுபவர்களை அவர் விரும்பார். ஒவ்வொன்றும்

ஒவ்வொருவகையிற் சிறந்ததென்பது அவருடைய அபிப்பிராயம். 'வால்மீகி உண்மைவாழ்க்கையை (*Realistic life*) அநுசரித்துப் பாடினார்; கம்பர் லட்சியவாழ்க்கையை (*Ideal life*) அநுசரித்துப் பாடினார்' என்பதே அவருடைய கருத்து. ஒரு நூலை முற்றும் ஆராயாமல் அங்கங்கே கண்ட சிலவற்றைக்கொண்டு அபிப்பிராயம் சொல்லுதலை அவர் சிறிதேனும் போற்றார். குற்றத்தைக் குற்றமென்று கூறுவதற்கு அஞ்சார்.

உலகஸ்வபாவத்தை அவர் நன்றாக அறிந்திருந்தார். நாள்தோறும் தவறாமல் சாமாசாரப் பத்திரிகை படிப்பார். ஹிட்லருடைய நாஜி இயக்கத்தின் நுணுக்கம்முதல் அடுப்பங்கரைப் பாட்டியின் பேச்சுஸ்வாரஸ்யம்வரையிலுள்ள விஷயங்களில் அவருடைய வேடிக்கைப் பேச்சு விரவும். கூடார்த்தக்கதைகளை எழுதும் ஆற்றல் அவர்பால் இருந்தது. பல வருஷங்களுக்குமுன் அவர் 'தமிழ் உலகு' என்னும் பத்திரிகையில் தென் ஆப்பிரிக்காவில் இருந்த இந்தியரின் நிலை முதலிய விஷயங்களைக் கூடார்த்தக் கதைகளாகவும் புராணப்பாட்டாகவும் அமைத்து வெளியிட்டிருக்கிறார். 'கலைமகள்' பத்திரிகையிலும் அத்தகைய கதைகள் சில வெளிவந்துள்ளன. உலகத்திலுள்ள சில அசட்டுவாதங்களையும் உலகத்தை ஏமாற்றிவரும் பேர்வழிகளின் நடத்தைகளையும் பரிஹஸித்து எழுதிய பல கட்டுரைகள் 'சோதிடப்புலி சோணாசலம்' என்ற தலைப்பில் 'தமிழ்உலகி' லும் 'கலைமகளி' லும் வெளி வந்திருக்கின்றன.

அவருடைய பேச்சில் எப்போதும் ஹாஸ்யம் கலந்து இருக்கும்: ப்ரம்மசூத்திரத்தைப் பற்றிப் பலவித்துவான்கள் விசாரித்துக் கொண்டிருப்பார்கள்; அவர்களோடு அவரும் இருப்பார்; அந்த வேதாந்தத்தோடு வேடிக்கையும் கலக்கும்படி அவர் செய்வார். இது பொய்யல்ல.

மயிலாப்பூர் ஸம்ஸ்கிருதகாலேஜ் தெருவில் உள்ளது அவர் வீடு. அங்கே வாசலில் ஒரு சாய்வான நாற்காலியில் அவர் அமர்ந்திருப்பார். சுற்றுத்திண்ணைகளில் ப்ராம்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய கருங்குளம் கிருஷ்ணசாஸ்திரிகள் முதலிய பண்டிதர்களும் வேறு சில நண்பர்களும் உட்கார்ந்திருப்பார்கள். ஏதாவது உபயோகமுள்ள விஷயத்தைப்பற்றிப் பேச்சு நடந்துகொண்டிருக்கும். தூரத்திலிருந்து கவனிக்கும் ஒருவனுடையகாதில் இரண்டு நிமிஷத்துக்கு ஒரு முறை சிரிப்புக்கோஷம் அவ்விடத்திலிருந்து வந்துவிழும். பேச்சு வேதாந்தமோ, சித்தாந்தமோ, லோக வியவஹாரமோ, இராமாயணமோ ஏதானாலும் சரி, அதற்கிடையில் அடிக்கடி

சிரிப்பில்லாமல் இராது. அதற்குக் காரணம் இராமச்சந்திரைய ருடைய ஹாஸ்யப்பேச்சுக்களே.

உயர்ந்த உத்தியோகத்தில் இருந்தவரென்று, அவரைப்பார்த்த மாத்திரத்தில் கண்டு பிடிக்க முடியாது. பழுப்பேறிய கதராடை யும் நெற்றியிற் கீற்றுச் சந்தனமும் உடைய அவருடைய எளிய கோலம் அவரது குதூகலஸ்வபாவத்தோடு கலந்து அவரை ஒரு ப்ரம்மவித்தைப்போல நினைக்கச்செய்தது; இது நான் சொல்வது மாத்திரமன்று; அவருடைய மரணத்தைப்பற்றிய இரங்கற்கூட் டத்திற் பேசிய ப்ரம்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய சருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகள், "அவர் இறக்கும்பொழுதும் தைரியமாகவே இருந்தார். 'எல்லோரும் பயப்படுகிறார்கள், என்ன செய்கிறது?' என்று நான் கேட்டபொழுது, 'பைத்தியம்'! என்று அசட்டை யாகப் பதில் கூறினார். அப்பொழுது அவர் ஒரு ப்ரம்ம வித்தைப் போலத் தோற்றினார்" என்று சொன்னார்.

அவருடைய பொழுதுபோக்கு, பண்டிதர்களுடன் ஸல்லா பம், ராட்டை நூற்றல், புஸ்தகம் வாசித்தல் இவ்வளவிலே அடங்கி நின்றது. அவர் வீட்டுவாயிலுண்டு; அவருண்டு; வேறு எங்கும் போவதில்லை. அவர் இருந்தவிடத்தில் கலைமகளின் ஜோதி வீசிக் கொண்டேயிருந்தது.

"ஸஹ்ருதயர்களுடைய மத்தியில் அவர் ஹ்ருதயம்போல இருந் தார்" என்று பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய குப்புஸ்வாமி சாஸ்திரிகள் அநுதாபக் கூட்டத்திற் பேசினார்; அவருடைய கூர்ந்த அறிவை மிகப்புகழ்ந்தார். அவருடைய பத்திரிகையின் நிருவாகத் திறமையைக் 'கலைமகள்' நண்பர்கள் நன்கு அறிவார்கள். அவ ருடைய ஒழுக்கமும் மேதையும் நல்லோரையும் பண்டிதர்களையும் வசியமாக்கின.

'கலைமகள்' ஆடிமாதப் பத்திரிகையில் அவர் எழுதிய 'நாடி வைத்தியர்' என்ற கதை வெளிவந்திருக்கிறது. "அடுத்தமாதம் என்ன எழுதப்போகிறீர்கள்?" என்றேன் நான்.

"அழுகையைப்பற்றி எழுதப் போகிறேன். எல்லாம் அழு கையில் முடிகின்றன. எல்லா ரஸங்களுக்கும் அதுவே பிரதானம். சிருங்காரத்தில்கூட விப்ரலம்ப சிருங்காரத்தைத்தான் உயர்வாகக் கருதுகிறார்கள். கொஞ்சம் வேடிக்கையாக இரண்டு சூத்திரங்கள் செய்து போடப்போகிறேன்" என்றார்.

இந்த ஆவணி இதழில் அவர் எழுதிய அழுகையைப்பற்றிய கட்டுரை இல்லை; அவரைப்பற்றிய அழுகைக்குரிய வரலாறுதான் இருக்கிறது. இதை யார்தான் முன்னே அறியக்கூடும்?

இரங்கற் செய்திகள்

'கலைமகள்' ஆசிரியர் மரணத்தைப்பற்றி, 'கலைமகள்' அதிபர் ஸ்ரீமான் நாராயணசாமி ஐயரவர்களுக்கு ப்ரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர், உ. வே. சாமிநாதையரவர்கள் விடுத்த செய்தி வருமாறு:

"அன்பரும் சுகுணசிரோமணியும் தமிழ்க்கல்விமானுமாகிய ஸ்ரீ. டி. எஸ். இராமசந்திர ஐயரவர்களுடைய தேக வியோகம் மிகுந்த வருத்தத்தை உண்டுபண்ணிக் கொண்டேயிருக்கிறது. அவர்கள் இறந்துபோவதற்கு இரண்டுதினத்திற்கு முந்திக்கூட அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன். தமிழ் நூல்களைப்பற்றிப் பேரூக்கத்துடன் பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஊழ்வினையை வெல்ல யாரால் முடியும்?"

ஸ்ரீமான் அப்புஸ்வாமி ஐயரவர்கள், பி.ஏ., பி.எல்:

"ஸ்ரீமான் டி. எஸ். ராமச்சந்திரையரவர்கள் திடீரென்று காலமானது கேட்டுத் திடுக்கிட்டு வருந்தினேன். என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

ஸ்ரீமான் ஜே. எஸ். பொன்னையா, எம். ஏ:

"..அவருடைய பிரிவால் கலைமகள் பெரிய நஷ்டமடைந்தது. அவருடைய கதைகள் மிக்க கவர்ச்சியுடையனவாக இருந்தன. நான் அவருடைய கட்டுரைகளில் எதையும் ஊக்கத்துடன் வாசிக்கத் தவறியதில்லை. சென்றதடவை அவர் எழுதிய கதையும் ஹாஸ்யம் நிறைந்திருந்தது. அவ்வளவு ஊக்கமும், எழுதுவதில் இளமையும் உடைய அவர் காலனாற் பிரிக்கப்பட்டாரென்பது மிக இரங்கற்குரியதாகும்."

ஸ்ரீமான் ஒ. ப. தேசிகன்:

"......அவர்களுடைய அபாரமான பாண்டித்தியமும் நூலார்வமும் இனி, கலைமகளின் வாசகர்களுக்கும் ஏனையோருக்கும் பயன்படாதொழிவது தமிழ்நாட்டின் துர்ப்பாக்கியமேயாகும்."

'கூட்டுறவு' என்றபத்திரிகை 1-8-34 ஆம் தேதியில் எழுதியது:

"இந்த உயர்தரசஞ்சிகையின் நிர்வாக ஆசிரியர் திரு. டி. எஸ். இராமச்சந்திர ஐயர் அவர்கள் பி.ஏ., காலமடைந்துவிட்டது பத்திரிகை உலகத்திற்கு ஓர் பெரியநஷ்டம்."

படித்தவர்களும் வியாபாரிகளும்

திருச்சிஜில்லா வியாபாரிகள் சங்கத்தின் முதல் ஆண்டுவிழாவில் தலைமைவகித்த, திருச்சி நகர சபைத்தலைவர் ஸ்ரீமான் பி. ஆர். தேவர் அவர்கள் பேசியபிரசங்கம் 'வர்த்தக ஊழியன்' ஜூலை இதழில் வெளிவந்துள்ளது. நம்நாட்டுவியாபாரிகளுடைய முன்னேற்றத்தைக்குறித்து அவர் பேசிய பின்வரும்பகுதி எல்லோரும் கவனித்தற்குரியதாகும்:

'வியாபாரத்தில் ஒரு பகுதியாகிய நாணயமாற்றம் என்பது சிக்கலான விஷயம். பொருள்ஆதாரநூலை வாசிக்கும்போது, மேதாவிகள் எல்லாம் சில சமயங்களில் திகைத்துவிடுகிறார்கள். இந்நூல்வல்லாரைக் கொண்டு நாணயமாற்றத்தின் நுணுக்கங்களை நீங்கள் தெளிவுற அறிந்துகொள்வது அவசியமாயிருக்கிறது. வெளிநாடுகளில், படித்தவர்கள் எல்லாம் வியாபாரத் துறையில் இறங்கித் தீவிரமாக உழைத்துவருகிறார்கள். நம் நாட்டிலோ வியாபாரம் என்பது படிக்காதவர்களுக்குத்தான் என்றும், படித்தவர்கள் உத்தியோகத்திற்குத்தான் போகவேண்டும் என்றும் மனப்பான்மையிருக்கிறது. இதை உடனே யகற்றவேண்டும். நம்தேசமும் சர்வதேசங்களோடு சமமான உரிமையைப் பெறவேண்டுமானால் வியாபாரத்தில் முன்னுக்கு வந்தால்தான் முடியும். ஆங்காங்கே சங்கங்கள் ஸ்தாபனமாகி மாகாணசங்கங்கள், தேசியசங்கங்கள் இவைகளோடு இணைக்கப்பட்டு, நல்ல பிரதிநிதியாய் நமது முடிவான அபிப்பிராயங்களைத் தெளிவாகவும், அழுத்தமாகவும் சொல்லவேண்டும். வியாபாரிகளுக்குள் அதிதீவிர ஒற்றுமை மிகவும் அத்தியாவசியமானது.'

ஜப்பானியரின் ஒழுங்கு

நவீன நாகரிகயுகத்தில் முன்னணியில் நிற்கும் தேசங்களுள் ஜப்பானும் ஒன்று. அந்நாட்டாருடைய பெருமுயற்சிகளும் ஒழுங்கான செயல் முறைகளும் பெரும்பயன் விளைப்பனவாகும். சுருங்கிய காலத்திற்குள் பெரிய வளர்ச்சியை உற்றுத் திகழும் அந்நாட்டின் தீவிரமுன்னேற்றத்தை நோக்கி அகில லோகமும் மூக்குநுனியில் விரல்வைத்து வியக்கின்றது. கைத்தொழில், வியாபாரம் முதலியவற்றில் அது வேறு எந்தநாட்டிற்கும் தாழ்ந்ததன்று. ஜப்பானியர்கள் எந்தப்பொருளையும் வீண்செய்வதில்லை. வீட்டிற் பெருக்கித்தள்ளப்படும் வஸ்துக்களை அவர்கள் பத்திரமாகப் காப்பாற்றி வைக்கிறார்கள். கூடியவரையில் அவற்றைப் பயன்படுத்த முயல்கின்றனர். ஓர் அரிசிமணியைச் சிந்தக் கூட அவர்கள் சம்மதியார்கள். ஜப்பானியச் சிறுவர்கள் தாய்தந்தையர்களிடம் ஒழுங்கையும் பள்ளிக்கூடத்தில் இராணுவப் பயிற்சியையும் கற்கின்றனர். ஜப்பானியர் கூடும் கூட்டத்தில் எந்தவிதமான குழப்பமும் நிகழாது; இரைச்சலும் இராது. ஐயாயிரம் ஜனங்கள் கூடிய கூட்டமாக இருந்தாலும் அங்கே அமைதியே நிலவும். யாவரும் காதோடுகாதாகத்தான் பேசிக்கொள்வார்கள்.

—டைம்ஸ் ஆப் அஸ்ஸாம்.

ஸ்ரீமத் பாகவதம், தசமஸ்கந்தம்: [தேவநாகர எழுத்தில் மூலமும், தமிழுரையுமுள்ளது. பூர்வார்த்தம், விலை ரூ. 5 8 0; உத்தரார்த்தம் விலை ரூ. 4 8 0. கிடைக்குமிடம்: ஸ்ரீமான் கடலங்குடி நடேச சாஸ்திரிகள், 72 பெரிய தெரு. திருவல்லிக்கேணி சென்னை.]

திருமாலின் அவதாரங்களில் சிறந்ததெனவும், பூர்ணமானதெனவும் கருதப்படும் கிருஷ்ணாவதார மகிமையை நன்கு விளக்கும் ஸ்ரீமத்பாகவதம் பக்தி ஞானங்களுக்கு முக்கிய சாதனமென்று யாவராலும் கருதப்படுகிறது. அதிலுள்ள அரியவிஷயங்களைத் தமிழர்கள் அறிந்து ஆனந்திக்கும்படி தமிழுரையோடு ஸ்ரீமான் நடேச சாஸ்திரிகள் வெளியிட்டிருப்பது மிகவும் பாராட்டத் தக்கது. இஃதன்றியும் ஒவ்வோரத்தியாயத்திற்குப் பின்பும் நாராயணீயமென்னும் நூலிலுள்ள சுலோகங்கள் பதவுரையுடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்நூல் மலையாளத்தில் குருவாயூரிலுள்ள கிருஷ்ணபரமாத்மாவின் சந்நிதியில் நாராயண பட்டாத்திரியென்பாரால் இயற்றப்பட்டதென்றும் அவ்வாறியற்றி முடிந்தபின் அவருக்கு நேர்ந்திருந்த தீராதநோய் தீர்ந்ததென்றும் கூறுவர். சாஸ்திரிகளவர்கள் ஸ்ரீமத்பாகவத்தின் இதர ஸ்கந்தங்களையும் இவ்வாறே வெளியிட்டுத் தமிழுலகுக்கு உதவிபுரிவார்களென நம்புகிறோம்.

—டி. எஸ். ராமச்சந்திரையர்.

திருக்குறள் மூலமும்உரையும் ஆங்கிலமொழிபெயர்ப்பும்: [இயற்றியவர்: ஸ்ரீமான் ஆ. அரங்கநாத முதலியார் அவர்கள்; கிடைக்குமிடம்: சுவர்ணவிலாஸ் 13, பெரியதெரு, திருவல்லிக்கேணி; விலை ரூ. 2 8 0.]

திருவள்ளுவரால் உலகினுக்கே தரப்பட்ட திருக்குறளென்னும் தமிழ் மறையை இதுகாறும் சிலர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தமைத்துள்ளனர். எனினும் நமது பார்வைக்குவந்துள்ள இப்புத்தகம் திருக்குறள் மூலம்,

எளியநடையில் சுருக்கமாக உள்ள பொழிப்புரை, அழகிய ஆங்கிலமொழி பெயர்ப்பு முதலியன அமைந்து விளங்குகின்றது. திருவள்ளுவரைப் பற்றியும் குறளைப்பற்றியும் பல அறிஞர்கள் தமிழில் எழுதியுள்ள அரிய செய்திகள் பல இப்புத்தகத்தில் முகவுரைக்குப் பின் வெளியிடப்பட்டுள்ளன. குறளைப்பற்றி மேனாட்டார் அவ்வப்பொழுது வெளியிட்ட அபிப்பிராயங்களை இப்புத்தக ஆசிரியர் தொகுத்தமைத்தது மிகவும் போற்றற்குரியது. பதிப்பு அழகியதாக அமைந்துள்ளது. ஆங்கிலமறிந்தவர்களுள் திருக்குறளைப் பற்றிச் செவ்வனே அறிந்துகொள்ள இயலாதவர்களுக்கு அந்நூலின் அருமையைத் தெளிவிப்பதற்கு இது கண்ணுகை உதவும்.

தாயும் பிள்ளையும்: [எழுதியவர்: ஸ்ரீமான் ச. இராஜரத்தினம் அவர்கள், இலங்கை வைத்தியப்பகுதி; கிடைக்குமிடங்கள்: (1) ஆசிரியர் (2) யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலை; விலை சதம் 50 அல்லது அணு 8.]

பெண்கள் தாய்மாராக இருந்து உலகத்துக்குப் புரியும் தொண்டு எவற்றிலும் சிறந்தது. அத்தொண்டைச் செவ்வனே செய்தற்குரிய நல்லாறுகளை இந்நூல் செந்தமிழ் நடையில் விளக்குகின்றது. பெண்கள் பிள்ளைப் பேற்றுக்கு முன்பும் பின்பும் பின்பற்றவேண்டிய பலவிதிகளையும் வேறுபல அரிய செய்திகளையும் தெரிவிக்கும் இப்புத்தகம் தமிழ்நாட்டாருடைய போதாரவிற்குரியதென்று கருதுகிறோம்.

கல்வளை அந்தாதி: [ஸ்ரீமான் ம. வே. திருஞானசம்பந்தப் பிள்ளையவர்கள் எழுதிய உரையுடன் கூடியது; கிடைக்குமிடம்: யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை; விலை சதம் 50 அல்லது அணு 8.]

தமிழ்நூல்களை முறையாகப் படிக்கப்புகுந்த மாணவர்கள் மறைசையந்தாதியை நன்கு அறிவார்கள். அந்நூலின் ஆசிரிராகிய யாழ்ப்பாணத்து நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர் கல்வளையென்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள விநாயகக்கடவுள்மீது இயற்றியது இக் கல்வளையந்தாதியாகும். மறைசையந்தாதியைப் பயின்றவர்களுக்கு இவ்வந்தாதியும் அதனோடொத்த செம்மையும் பெருமையும் வாய்ந்ததென்பது புலப்படும். இதற்குப் பதவுரை பொழிப்புரை முதலியன எழுதிவெளியிட்ட ஸ்ரீமான் திருஞான சம்பந்தப் பிள்ளையவர்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப்போதகாசிரியராவர். வரன்முறையாகப் பாடங்கேட்டாலன்றி எளிதில் விளங்காத யமக அந்தாதிகளுள் இதனைச் சேர்த்தல் முறையன்று; ஆயினும் தமிழ்ப்புலவர்களுடைய துணைக்கொண்டு அறிந்தால் இதன் நயங்களும் பிறவும் நன்கு விளங்கும். அத்தகைய துணையாக இவ்வுரை விளங்குகிறது. பண்டைத்தமிழ் நூல்களை அழியாமல் வெளிப்படுத்தி விளக்கும் அறம் பெரிதென்பதை யாவரே அறியார்? இதனைப்போன்ற வேறு நூல்களும் இவ்வாசிரியர்மூலமாக வெளிவருவதை யாம் பெரிதும் விரும்புகின்றோம்.

68. பாடுந் திருப்புகழைப் பன்னிரண்டு நற்புயமுஞ்
சூடுங் கருணைச் சுவாமிமிக—வாடியவப்

69. புத்தேளி ருக்கும் புரந்தரற்கும் விண்ணுலகில்
தத்தம் பதிநிலைமை தானளித்தோன்—சித்தமகிழ்ந்

70. திந்திரனார் தம்மகளை யேய்ந்துமணங் கொண்டருளிச்
சுந்தரஞ்சேர் மான்மகளாந் தோகைக்காச்—சந்திரனேர்

71. ஆறு கருணை யழகுமுகங் காட்டாமற்
கூறுமொரு வேங்கைக் குலமரமாய்—வீறியே

72. நின்று வருந்தி நெடுங்குறவர் வந்தாட
அன்று வலிய வணைந்தகுகன்—சென்றுபுரி

73. தாகமார் நாரதனார் தாம்செயும்யா கத்தகரை
வாகனமாக் கொண்ட வடிவேலன்—பூகஞ்சூழ்

74. மன்னிலஞ்சி சூழு மலரிலஞ்சி யுஞ்சூழ்ந்த
தென்னிலஞ்சி வாழுந் திருக்குமரன்—என்னையே

75. ஏழு பிறப்பு மினிப்பிறவா தாளவந்து
வாழு மிலஞ்சி வடிவேலன்—ஊழிக்கும்

76. காய்த்த கருப்பிணிக்குக் கான்மருந்தா யென்றனக்கு
வாய்த்த விலஞ்சி வடிவேலன்—ஆய்ப்பாகர்

77. முன்னுங் குருவெனக்கு முக்கால முங்குருவா
மன்னு மிலஞ்சி வடிவேலன்—பொன்னுலகோர்

[திருவிழா]

78. பூவுலகோ ரெண்டிசையோர் பொன்மா லயனுடனே
ஏவருங் காட்சி யெமக்கென்ன—மேவியே

---

70. மான்மகள் - வள்ளியம்மையார். 72. ஆட - போர்புரிய.

73. தகர் - ஆடு; "நெருப்பிலுதித் தங்கட் புவன மனைத்து மழித்துலவும், செங்கட் கிடாயதனைச் சென்றுகொணர்ந் - தெங்கோன், விடுக்குதியென் றுய்ப்பவதன் மீதிவர்ந்தெண் டிக்கும், நடத்தி விளையாடு நாதா" (கந்தர்கலி. 58 - 60.) பூகம் - கமுகமரம்.

74. இலஞ்சி - குளம். மலரிலஞ்சி - மலரையுடைய மகிழமரம். தென் இலஞ்சி - அழகிய இலஞ்சியென்னும் தலத்தில்.

75. ஊழிக்கும் - ஊழியளவும்.

76. கருப்பிணிக்கு - பிறவியாகியநோய்க்கு. கான்மருந்தாய் - தன்னுடைய திருத்தாளே மருந்தாக; வனமூலிகையாக எனவுமாம். ஆய்ப்பாகர் - உமாதேவியாருடைய பாகத்தையுடையவர்; விரித்தல் விகாரம்.

77. பொன்னுலகோர் - தேவர்.

78. பொன் மால் - திருமகளையுடைய திருமால்.

79. வீறுகொண்டு விண்ணேறி மேய வருவதெனக்
கூறுகொண்ட சேவற் கொடியேற்றிச்—சாறுகண்டே

80. ஆலயத்துண் மேவா வணிவிலங்கு புண்மரங்கள்
வேலையற்றுப் போற்றும் விழாவிலே—சீலத்துத்

81. தென்னனே சோழனுடன் சேரனுமே வந்தேத்தப்
பொன்னிலத்தோர் போற்றிப் புகழ்விழவில்—மன்னுதொண்டை

82. மண்டலத்தில் வண்டூரில் வாழ்சாமி நாதனெனும்
தெண்ட னடாத்துந் திருநாளில்—எண்டிசையும்

83. கந்தசட்டி யென்று கருதுகின்ற வைப்பசியிற்
செந்தமிழோர் போற்றுந் திருநாளிற்—பந்தமற

[ஆறுநாளும் கொண்டருளும் திருக்கோலங்கள்]

84. வந்தொருநாள் போற்றினரை வாழரம்பை மார்தேவர்
சிந்தையொடு போற்றுந் திருநாளில்—முந்தொருநாள்

85. பங்கயத்தோ னாகிப் பருதி யணிந்தருளும்
செங்கையன்போல் நாளிரண்டிற் சேர்ந்தருளித்—திங்களணி

86. தேவ வுருத்திரனாச் சீர்மூன்றி னானாள்
ஏவ லுறுதகரி லீசரனா—ஆவலுடன்

87. விள்ளுஞ் சதாசிவமா வெள்ளிமயில் வாகனத்தில்
தெள்ளு மனுக்கிரகஞ் செய்வனெனத்—துள்ளலைபோல்

88. வாத்தியமெங் குந்தொனிப்ப வள்ளியம்மை தெய்வானை
ஏத்துதிருப் பள்ளி யெழுந்தருளி—நீத்தம்போற்

[அபிடேகம் முதலியன]

89. பாலாடித் தேனாடிப் பைங்கருப்பஞ் சாறாடிச்
சேலாருங் கங்கை திளைத்தாடிச்—சாலவே

90. வீறுடைய வுட்சாத்து மேற்சாத்துங் கொண்டிருக்குக்
கூறு திருப்பூசை கொண்டருளி—ஆறுதிரு

---

79. சாறு - திருவிழா.
82. தெண்டன் - வணக்கத்தையுடையவன்.
85. பருதி - சக்கராயுதம். 86. தகர் - ஆட்டுக்கிடாய் வாகனம்.
84-7. முதல்நாளில் பிரமதேவராகவும் இரண்டாம்நாள் திருமாலாகவும் மூன்றாநாள் உருத்திரமூர்த்தியாகவும் நான்காநாள் ஈசுவரனாகவும் ஐந்தாநாள் சதாசிவமூர்த்தியாகவும் ஆறாநாள் வெள்ளிமயில் வாகனரூடராகவும் திருக்கோலங்கொண்டு உலாவருவார் என்பது கருத்து.
87-8. எனத் தொனிப்ப. நீத்தம் - வெள்ளம்.
89. கங்கையென்றது சுத்த தீர்த்தத்தை.
90. உட்சாத்து - உள்ளே உடுக்கும் உடை. மேற்சாத்து - புறவுடை. இருக்கு கூறு - வேதம் கூறுகின்ற.

91. முண்டடத்து நீறணிந்து முத்திச் சரவணமா
மண்டபத்தி லாசனத்தில் வந்திருந்தே—அண்டரெல்லாம்
92. போற்றுந் திருவாசற் பொன்னின் மணிக்கதவம்
ஏற்ற திருக்காப் பியலணிந்து—சாற்றரிய

[திருவாபரணம் புனைதல்]

93. பன்னிரண்டு வெய்யோர் பணிந்துசெவி சாற்றுதல்போற்
பன்னிரண்டு குண்டலமும் பார்த்தணிந்து—துன்னவே
94. கட்டுவடங் கட்டிக் காண்சன்ன வீரமிடாச்
சட்டமாக் கண்ட சரம்பூட்டி—இட்டமாப்
95. பொன்மலைக்குப் பொன்மௌலி பூட்டுதல்போ லோராறு
நன்முடிக்குப் பொன்முடிக ணன்கியற்றித்—தொன்மைபெறு
96. பாற்கடலிற் றெள்ளமுதைப் பையத் திரட்டிசெய்து
கோக்கல்போற் றண்டரளக் கோவையிட்டுத்—தீர்க்கமாத்
97. தொண்டரிடத் தன்புந் தொடர்கருணை யும்பெருகி
மண்டிய மார்பில் வழிந்தவோ—மிண்டுபுரி
98. வன்சூரை மாய்த்தவந்த மாசீர்த்தி யும்விறலும்
இன்சீரோ டெய்தியவோ வீங்கென்னத்—தென்மலயம்
99. வாய்த்தவகிற் கட்டை வழங்குபனி நீர்தோய்த்துத்
தேய்த்தநறுஞ் செஞ்சாந்தின் சேறணிந்து—ஆர்த்தெழுந்த
100. சூரன் றனைச்சயித்தே தோகையெனக் கொண்டவெற்றி
வீரமெனுந் தொங்கல் விசயமோ—வாரமதா
101. வானக் குலக்கொடிதான் வைத்தமண மாலையோ
கானக் குறத்திதருங் கண்ணியோ—தேன்மொழியார்
102. பெண்கடப்ப வோமதவேள் பேதலிக்க வோவென்ன
வண்கடப்ப மாகம் வனைந்தருளித்—திண்பொன்னின்
103. மேருவினில் வெய்யோன்முன் வீற்றிருந்த தேய்ப்பவே
ஆரும் பதக்க வணிபூண்டு—சீருடனே

---

91. முண்டம் - நெற்றி. அண்டர் - தேவர். 93. வெய்யோர் - சூரியர்.

94. கட்டுவடம் - கழுத்திற்கட்டும் ஆபரணம். சன்னவீரம் - மார்பிலிடும் வீரசங்கிலி; தக்க. 341, உரை. இடா - இட்டு. சட்டமா - முறையாக.

101. வானக் குலக்கொடி - தெய்வயானையம்மையார். கானக்குறத்தி - வள்ளியம்மையார்.

102. பெண்கள் தப்பவோ; தப்பல் - நிறைய்ழிதல். மதவேள் - காமன். பேதலிக்க - வேறுபட. ஆகம் - மார்பில்.

104. மின்னங் கொருவடிவாய் வீற்றிருந்த தொப்பவே
பொன்னகல முப்புரி நூல் பூணுவித்துத்—தன்னிகரில்

105. நல்லதரு வென்னவளர் நான்மூன்று கைகளிலும்
சொல்லரிய கங்கணங்கள் சூழ்வித்தே—எல்லவிர

106. மன்னு நவமணியால் வண்ணமுறச் செய்ததொரு
மின்னுதர பந்தனமும் வீக்கியே—சொன்னமதாற்

107. கம்மியனாற் செய்யக் கருத்தில்லா வித்தாரச்
செம்மையுறு பொன்னரைநாண் சேர்வித்து—விம்மவே

108. இட்டவிழை யாயிரம்பொ னேற்றவிலை யாமறியாப்
பட்டுடையோ டுத்தரியம் பாங்கமைத்து—மட்டிலாப்

109. பொற்சிலம்பிற் றாழ்வரையிற் பொற்றைகளை யிட்டதெனப்
பொற்சிலம்பு பொற்காலிற் பூட்டியே—நற்புகழ்சேர்

110. ஓராறு நன்முடிமே லோங்கியவான் வில்லென்னச்
சீரார் திருவா சிகைசேர்த்துப்—பேரான

111. ஆதவனோர் காற்றவிசா வன்றநின்ற தேய்க்குமெழிற்
சீதநிலைக் கண்ணாடிச் சீர்பார்த்து—வேதமொழி

112. ஒருந் தமிழு மொருவன்மொழி வாசகமும்
பாரிற் றிருவிசைப்பா பல்லாண்டும்—சீர்சிறந்த

113. காந்தப் புராணக் கவியுந் திருப்புகழும்
சேந்தசெவிக் கொண்டருளிச் செய்தபின்னர்—பாந்தமாய்ச்

[உடன்வருவோர்]

114. சொன்னநிலத் தோர்களுக்காத் தூதுசென்ற தம்பியெனும்
மன்னன் றனிவீர வாகுவுடன்—பின்னவரும்

115. மற்றைய வீரர்களு மாபூதச் சேனைகளும்
கொற்றமுசு குந்தக் குரிசிலுடன்—பற்றுமனத்

116. தொண்டருடன் பத்தசனர் சொல்லரிய சீர்த்திபெறும்
அண்டருட னல்ல வடியாரும்—மண்டிவரத்

---

105. *தரு* - கற்பகம். *எல் அவிர* - ஒளி விளங்கும்படி.

106. *வீக்கி* - கட்டி.

109. *தாழ்வரை* - அடிவாரம். *பொற்றைகள்* - சிறுகுன்றுகள்.

111. *தவிசா* - ஆதனமாக.

111-2. வேதமொழியாகிய *தமிழ்* - தேவாரம். *வாசகம்* - திருவாசகம்.

113. *சேந்தசெவி* - அணிகலனாற் சிவந்த செவி. *பாந்தமாய்* - பொருத்தமாக; "பாந்தம தாயெற் கருள்வோன்" சிரகிரிக்கோவை, 104.

114. *சொன்னநிலத்தோர்* - தேவர்.

117. தென்னிலஞ்சி யாற்குச் சிவார்ச்சனைபோற் பத்திசெயும்
பொன்னுடைய புன்னைவனம் போற்றிவரத்—துன்னுகுகன்

118. தொண்டு விரும்பியவன் றொண்டருக்கே தொண்டுசெய்யும்
மண்டலிக னுண்டான் வணங்கிவரத்—தொண்டுசெயும்

119. தானீக னுகித் தலத்தைப் பிரபலஞ்செய்
மானபரன் முத்தையன் வாழ்த்திவரத்—தீனமில்லாத்

120. தானத்தார் நல்ல தவத்தார்க டானத்தார்
ஆன புவியோ ரனைவோரும்—வானில்வரும்

121. இந்துவைச்சூழ் தாரகைபோ லெண்புவியு மோர்காலம்
அந்த முறுங்கடல்க ளார்த்தென்ன—முந்தி

122. இரைப்பப் புரந்தரனு ரேந்திழையா ளாறு
தரத்தின் முகவழகைத் தான்கண்—டுரைப்பதற்கும்

123. எட்டாத வின்பவெள்ள மேன்றமட்டும் வாரியுண்டு
மட்டாருங் கொங்கை மலைவளரக்—சட்டார்கொள்

124. மான்மகளார் முன்செய்த வன்கண்மைக் குள்ளுருகி
மீன்விழியா லானந்த மெய்யொழுக்கத்—தேன்மொழியாள்

125. ஆன திலோத்தமையு மாடரம்பை மேனகையும்
மானி னுருப்பசியு மற்றேரும்—பானல்சேர்

[வாத்தியங்கள்]

126. கண்ணி னிருவரையுங் கைகூப்பிச் சூழ்ந்துவரப்
பண்ணின் முறையே பதலைதுடி—தண்ணுமை

127. ஓர்காளம் பம்பை யொருகட்ட பறைதவில்
சீர்முழவம் பேரி திடிமமொலி—ஆர்தக்கை

128. கல்லவடந் தேர்கரடி கைபடக மொண்டிமிலை
சல்லரிநன் மாமுருடு தாமுழங்க—நல்லசந்துத்

---

119. தீனம் - எளிமை.

120. தானத்தார் - தானம் செய்பவர்கள், தலத்தில் இருப்பவர்கள்.

122. புரந்தரனுர் ஏந்திழையாள் - இந்திரன் புதல்வியாகிய தெய்வயானை அம்மையார். 123. ஏன்றமட்டும் - இயன்றமட்டும்.

125. பானல்சேர் - கருங்குவளையைப்போன்ற.

128-9. சந்துத் தூ கந்த மாதனத்தோர் இருவர் - சந்தனத்தின் சுத்தமாகிய வாசனையையுடைய பெரிய ஸ்தனத்தினராகிய வள்ளி தெய்வயானையம்மையார். தோகை - மயில்; உவமை. தூ கந்தமாதனத்தோன் - பற்றுக்கோடாகிய கந்தமாதன பருவதத்தில் எழுந்தருளி இருப்பவன்; இது கயிலையைச் சார்ந்தவிடத்தில் முருகக்கடவுளுக்கிருப்பிடமாக இருப்பது.

[திருச்சின்னம்]

129. தூகந்த மாதனத்தோர் தோகை யிருவர்புணர்
தூகந்த மாதனத் தோன்வந்தான்—பாகமதிற்

130. பானலைவாய்ப் பைங்குயிலார் பாவை யிருவர்விருப்
பானலைவாய்ச் சூரன் பகைவந்தான்—தானம்வளர்

131. வேள்விமலை யான்மகளை வேட்டோன் குறத்தியணை
வேள்விமலை யான்வித் தகன்வந்தான்—தாழ்வில்

132. அளகைவள்ளி யூருடையா னைம்முகத்தோன் மைந்தன்
அளகைவள்ளி யூருடையான் வந்தான்—வளகுபெறு

133. பண்பைத் திருமலையும் பஞ்சா யுதன்மருகன்
பண்பைத் திருமலையப் பன்வந்தான்—நண்பாம்

134. பழநி மலைப்பாலன் பால்வந்தான் சீராம்
பழநி மலைப்பாலன் வந்தான்—சளமாம்

135. கதிர்காமத் தோனுங் கடுஞ்சூரை வென்ற
கதிர்காமத் தோன்காளை வந்தான்—பதமாம்

---

130. பானல் ஐ வாய் - குமுதம்போன்ற அழகிய வாயையுடைய. இருவர் விருப்பான். அலைவாய் - திருச்செந்தூர். தானம் - தேவலோகம்.

131. வேள்வி மலையான் - யாகம் செய்ய மயங்காதவன்; இந்திரன். வேட்டோன் - மணந்தவன். வேள்வி மலை - நாஞ்சில் நாட்டிலுள்ள தலம்; "நாஞ்சினாட்டு வேள்விமலையம்மே" குற்றலக்குறவஞ்சி.

132. அளகை - கூந்தலையுடையாள். வள்ளி ஊரு உடையான்; ஊரு - தொடை. ஐம்முகத்தான் - சிவபிரான். அளகாபுரியைப்போன்ற வள்ளியூரையுடையவன்; வள்ளியூர்: தென் பாண்டிநாட்டில் உள்ள சுப்பிரமணிய ஸ்தலங்களுள் ஒன்று; திருப்புகழ் உடையது. வளகு - வளம்.

133. பண்பு ஐ திரு மலையும் - நற்குணத்தையும் அழகையும் உடைய திருமகளை அணிந்த; ஐ - அழகு. பஞ்சாயுதன் - திருமால். பண்பைத் திருமலை - பண்புளிப்பட்டினத்தைச் சார்ந்த திருமலை; இது திருக்குற்றாலத்திற்கு அருகேயுள்ள ஸ்தலம்.

134. பழ நிமலைப்பால் அன்பால் வந்தான் - பழமையும் தூய்மையும் உடைய உமாதேவியாரிடத்தில் அன்பினால் அவதரித்தான்; "இழையணி சிறப்பிற் பழையோள் குழவி" என்றார் திருமுருகாற்றுப்படையிலும். சளம் - வஞ்சனை.

135. கதிர் காமத்தோனும் - கதிர்க்கின்ற ஆசையையுடையவனாகிய. சூர் - சூரபன்மன். கதிர்காமத்தோன் - கதிர்காமமென்னும் தலத்தில் எழுந்தருளியுள்ளவன்.

136. திருவே ரகத்தினட்டான் சீரடியார்க் கென்றும்
திருவே ரகத்தினட்டான் வந்தான்—உரியார்

137. திருப்பரங் குன்றத் திருந்தான் விருப்பாய்த்
திருப்பரங்குன் றத்திருந்தான் வந்தான்—தரிப்பாய்வாழ்

138. சீதத் திருவிலஞ்சிச் சேவகன்வந் தானெனவே
ஓதுதிருச் சின்ன மொலியெழுப்ப—பூதலத்திற்

[குழாங்கள்]

139. பேதை பெதும்பையுடன் பேசுமங்கை சீர்மடந்தை
காத லரிவை கமழ்தெரிவை—வாதைதவிர்

140. பேரிளம்பெண் ணரும் பிலத்திலுள்ள கன்னியரும்
சீரிளம்பெண் ணயத் திரளுடனே—நேரில்

141. அரமகளிர் கூட்டமுமே யாகி நிரையாய்த்
திரமுடைய மாடஞ்செய் குன்றும்—தரமுடைய

142. மாளிகையுங் கோபுரமு மண்டபமுந் தெற்றியுடன்
சூளிகையும் மேடைகளுஞ் சூழ்மறுகும்—ஆளிபோல்

143. அம்பொன் மடப்பிடிபோ லஞ்சொற் கிளிமயில்போற்
செம்பொனின் மான்போற் றிகழனம்போற்—கொம்பிலுறை

144. கோகிலம்போற் பூவைபோற் கோவைபோல் வாய்திகழ
வாகிலஞ்சி வீதியெலாம் வந்தீண்டி—வேகமுடன்

---

135 - 6. பதமாம் திருசீரடியார்க்கு ஏர் அகத்தில் நட்டான்; அகம் - மனம்; நட்டான் - பதித்தவன். என்றும் திருவேரகத்தில் நட்டான்; திருவேரகம் மலைநாட்டகத்துள்ளதொரு திருப்பதி; - சுவாமிமலையுமாம்; நட்டான் - விரும்பியவன். உரியார் - உரிமையையுடைய அன்பர்களது.

137. திரு பரம் குன்ற திருந்தான் - செல்வமிகுதி குறைவுபடச் சம்மதியாதவன்; மேன்மேலும் வளர்ப்பவனென்றபடி.

140. பிலம் - நாகலோகம். ஆயத்திரள் - பாங்கியர் கூட்டம்.

141. அரமகளிர் - தெய்வப்பெண்கள். நிரையாய் - வரிசையாய். திரம் - நிலை.

142. தெற்றி - திண்ணை. சூளிகை - மாடத்தின் உச்சிக்கட்டிடம். ஆளிபோல் - இடையால் சிங்கம்போல.

143. நடையாற் பிடிபோலவும் சொல்லாற் கிளிபோலவும் கண்ணால் மான்போலவும் நடையால் அன்னம்போலவும்.

144. குரலாற் குயில்போலவும் சொல்லாற் பூவைபோலவும்; பூவை - நாகணவாய்ப்புள். கோவை - கொவ்வைக் கனி.

145. தேருடனே தேருடையார் சேர்ந்து பொருவதற்கு
நேருடைய வேளை நிகழுமட்டும்—சேரலர்கள்

146. ஈடுபெறத் தேரொளித்த தென்னவல்குற் பொற்றேர்கள்
ஓடிக் கலிங்க மொளித்திருப்ப—நாடியே

147. ஆறிரண்டு தோளு மழகுமுக மோராறும்
ஏறுங் கருணைவிழி யீராறும்—கூறுதிருக்

148. கையிலொரு வேலுங் கதிர்த்தபுரி முந்நூலும்
சைய நிகருந் தடமார்பும்—துய்யதிருக்

149. கந்தரமுங் காதுங் கனகமணிக் குண்டலமும்
அந்த முறுங்கருணை யார்மொழியும்—சிந்துரஞ்சேர்

150. நெற்றியுஞ் சேவ னெடுங்கொடியு நல்லடியார்
பற்றியிடு பாதப் பரிபுரமும்—உற்றுவளர்

151. தேவனைச் செந்தூர்வாழ் தேசிகனைச் சோலைமலைக்
காவனை வேள்விமலைக் காங்கெயனைப்—பாவனைத்தும்

152. வாசிதீர் காசுபெற மண்டலத்திற் சொன்னவனை
வீசுதிரு வேரகத்தின் மெய்ப்பொருளை—ஆசிலாப்

153. பாவி லருணகிரி பைந்தமிழின் மாரிபெய்ய
நாவிற் றிருப்பெயரை நட்டோனைக்—காவிலொரு

154. வள்ளிக் கொடிக்கு மரமாத் தவமிருந்து
கள்ள மணத்தாற் களித்தோனைத்—தெள்ளுதமிழ்த்

155. தென்னிலஞ்சி யானைச் சிவபிரான் றேசிகனை
உன்னி வணங்கி யுவந்தேத்திக்—கன்மிதப்பில்

156. அன்றுவந்த நாவுக் கரசன் றிருவுளம்போல்
ஒன்றிவந்து மாத ரெழிலுற்றுத்—துன்றவே

---

145. சேரலர்கள் - பகைவர்கள்.

146. ஈடு - எளிவரவு. கலிங்கம் - ஆடை; கலிங்கதேசமென்பது வேறு பொருள்.

148. சையம் - ஒரு மலை.

149. கந்தரம் - கழுத்து. அந்தம் - அழகு. சிந்துரம் - குங்குமதிலகம்.

150. பரிபுரம் - சிலம்பு.

152. வாசி - வேறுபாடு. சொன்னவனை - திருஞான சம்பந்தமூர்த்தியை; முருகக்கடவுளே திருஞானசம்பந்தராக வந்தாரென்னுங் கொள்கையையுடையவர் இவ்வாசிரியர். இங்கே குறிப்பிட்டது திருவீழிமிழலையிற் படிக்காசுபெற்ற வரலாற்றை.

154. மரமென்றது வேங்கைமரத்தை.

8911

மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

Dr. உ. வே. சாமிநாதையர் அவர்கள்

பதிப்பு நூல்கள்

	ரூ.	அ.
சீவகசிந்தாமணி, நச்சினார்க்கினியருரை	10	0
சிலப்பதிகாரம் மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரை முதலியனவும் ...	6	4
மணிமேகலை (3-ஆம் பதிப்பு, 1931)	5	0
பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரை முதலியனவும்	5	0
பத்துப்பாட்டு மூலம்: பொருட்சுருக்கம், வரலாறு முதலியவற்றுடன்	1	0
ஐங்குறுநூறு மூலமும் பழையவுரையும்	2	0
பதிற்றுப்பத்து மூலமும் பழையவுரையும்	1	14
பரிபாடல் மூலமும் பரிமேலழகருரை முதலியனவும் ...	2	8
புறநானூறு மூலமும் உரை முதலியனவும் ...	5	10
புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உரையும் ...	1	14
நன்னூல் மூலமும் மயிலைநாதருரை முதலியனவும் ...	3	0
நன்னூல் மூலமும் சங்கரநமச்சிவாயருரை முதலியனவும்	0	2
தக்கயாகப்பரணி: பழைய உரை, பலவகை ஆராய்ச்சிக் குறிப்பு முதலியவற்றுடன்	4	0
பாசவதைப்பரணி, குறிப்புரையுடன் ...	0	12
கோட்டையூர் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள் (கோடீச்சுரக் கோவை, தஞ்சைப்பெருவுடையாருலா, சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்) விரிவான உரையுடனும் பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடனும் ...	2	8
ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு	5	10
திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் ...	2	8
மண்ணிப்படிக்கரைப் புராணம்: ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றியது; குறிப்புரையுடன் ...	0	8
திருவாரூர்த் தியாகராசலீலை ...	0	12

குறிப்பு:—'கலைமகள்' சந்தாதாருக்கு மாத்திரம் ரூபாய்க்கு இரண்டணா கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர், கலைமகள் ஆபீஸ், மயிலாப்பூர், சென்னை.

Regd. No. M. 2748

யுனைடெட் இந்தியா லைப் அஷ்யூரென்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமைநிலயம் : சென்னை   1906-ம் ௵ நிறுவப்பட்டது

டிரஸ்டி-சென்னை அபிஷியல் டிரஸ்டி

இந்தக் கம்பெனியின் சிறப்புக்களிற் சில

பூர்ணமான பாதுகாப்பு
காலத்திற் சரியாக உரிமைகளை நிறைவேற்றுதல்
சிக்கனமான நிருவாகம்
நல்ல லாபங்கள் தரும் மிதமான கட்டணங்கள்

பாலிஸிக்காரர்களுக்கும் இன்ஷ்யூரென்ஸ் செய்யும் பொது ஜனங்களுக்கும் திருப்திகரமான உதவிகளைச் செய்யும் நோக்கத்தோடு இக்கம்பெனியார் கீழ்க்கண்ட இடங்களில் கிளைஸ்தாபனங்களை ஏற்படுத்தி யிருக்கின்றனர்.

திருவனந்தபுரம்	உடுப்பி
மதுரை	பங்களூர்
தஞ்சாவூர்	பெஜவாடா
கள்ளிக்கோட்டை	ஹைதராபாத்.

இந்தக் கம்பெனிக்கு எல்லா ஊர்களிலும் முக்கிய ஏஜண்டுகள் அல்லது பிரதிநிதிகள் இருக்கிறார்கள். முழுவிவரங்களும் தலைமை நிலயத்திற்காவது, பிரதிநிதிகளுக்காவது எழுதின உடனே அனுப்பப்படும்.

யுனைடெட் இந்தியா அஷ்யூரென்ஸ் கம்பெனி லிமிடெட்
செம்புதாஸ் தெரு, சென்னை.

எம். கே. ஸ்ரீநிவாசன்
(மானேஜிங் டைரெக்டர்.)

மயிலாப்பூர் லா ஜர்னல் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டு
ஏ. நாராயணசாமி ஐயர், பி.ஏ., பி.எல்., அவர்களால் பிரசுரம் செய்யப்பட்டது.